கல்கி



30 காசு

KALKI 16.7.1961

கல்கி பொருளடக்கம்

பிலவ, ஆடி 1 ❊ ஜுலை 16. 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 20 தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் இதழ் 51

எல்லோரும் வாழவேண்டும்

காங்கிரஸ் ஆட்சியிலும் நன்மை அடைகின்றவர்கள் சிலர் இருக்கவே இருக்கிறார்கள் !

அரசாங்கத்தின் தாட்சண்யத்துக்குப் பாத்திரமாகி பர்மிட்டும், லைசென்சும், கோட்டாவும் பெறும் வர்த்தகர்கள்; நாள்தோறும் பெருகி வளரும் அரசாங்க இலாகாக்களில் பதவி பெறும் அதிகார வர்க்கத்தினர்; பிரும்மாண்டமான ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் கண்டிராக்டர்கள் — இவர்களே இன்றைய காங்கிரஸ் ஆட்சியில் சுபிட்சம் காணும் ' பாக்கியசாலிகள் '.

ஒரு காரியத்தினால் ஆதாயம் பெறுபவர்கள் அது அநீதியானாலும் அதை எதிர்க்க முன்வரமாட்டார்கள். தங்களுக்கு மட்டும் ஏகபோகமாகக் கிட்டியுள்ள பெருவாழ்வினால் அவர்கள் சமுதாயத்தின் அவல நிலையைக் காணத் தவறிவிடுவார்கள். இந்த ஆபத்துக்கு ஆளானவர்களைத்தான் ஆத்ம சோதனை செய்துகொள்ளத் தூண்டுகிறார் ராஜாஜி.

இன்று ஒருசிலரே பர்மிட்டும், லைசென்சும் பெறுகிறார்கள். அவர்கள் ஆளும் கட்சிக்கு வாரி வாரி நிதி வழங்குகிறார்கள். இந்த ஒருசிலர் அனுகூலம் பெறும் அதே சமயத்தில், சுதந்திரப் பொருளாதார அமைப்பில் தொழிலில் முதலிடு செய்யக்கூடிய பெரும்பான்மையினர், தாங்கள் சாதாரணமாகப் பெறவேண்டிய வாய்ப்பைக்கூட இழந்து விடுகிறார்கள். இப்படி, பெரும்பான்மையினரது வீழ்ச்சியின் மேல் ஒரு சிலர் தங்கள் நல்வாழ்வை எழுப்பிக் கொள்வது தர்மம்தானா என்று இன்றைய 'அதிருஷ்டசாலிகள்' சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தங்களுடைய இன்றைய சுபிட்சம் என்றைக்கும் நீடிக்காது ; வோட்டு வேட்டையின் சௌகரியங்களை ஒட்டித் தங்கள் தலையிலும் சர்க்கார் கையை வைக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள் மனத்தில் கொள்ள வேண்டும்.

ஜல மண்டலிபோல் சர்க்கார் இலாகாக்கள் புதிது புதிதாகக் கிளைவிட்டுப் படர்வது தங்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் நல்ல நோக்கத்தோடு அல்ல என்பதை இவற்றில் சேவைசெய்யும் 'பேறு' பெற்றவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். மக்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தலையிட்டு, அவர்கள் சுதந்திரத்தைச் சூறையாடி, காங்கிரஸ் இன்றி ஒரு அணுவும் அசையாது என்று தங்களை நிலைநாட்டிக் கொள்ளவே காங்கிரஸ் கட்சி இத்தனை இலாகாக்களை சிருஷ்டிக்கின்றது. இந்த இலாகாக்கள் இல்லாவிட்டாலும் அதிகார வர்க்கத்தினர் நடுத்தெருவில் நிற்கவேண்டி வராது. சர்க்கார் இலாகாக்கள் குறையக் குறையத் தனி நபர் சுதந்திரம் ஓங்கும். தனிப்பட்டவர்கள் ஊக்கத்தோடு உருவாக்கும் ஸ்தாபனங்களில் இன்றைய அராங்க இலாகாக்களில் பருந்திருக்கும் அதிகாரிகளும் ஊழியர்களும் இடம்பெற முடியும். அதே சமயத்தில் அரசாங்க இலாகாக்களில் மாமூலாகிவிட்ட லஞ்ச ஊழலும் சலுகைகளும் எடுபட்டுப் போகும் ; அறநெறி துளிர் கண்டு தழைக்கும்.

ராட்சத ஐந்தாண்டுத் திட்டங்களுக்குத் தீனி போடத்தான் அந்நிய நாட்டுக் கொள்கையில் குளறுபடி செய்துகொண்டு எல்லா நாடுகளின் 'கருணை'யையும் பெற்று மலைமலையாகக் கடனை வாங்கி வருகிறது நேரு சர்க்கார். கழுத்து நெரியும் அளவுக்கு வரிப்பளுவை உயர்த்தியிருப்பதும் இவற்றுக்காகவேதான். மக்களை மங்கச் செய்யவும், ஆட்சியாளர் தத்தம் பதவிகளை விடாப்பிடியாகப் பிடித்துக் கொள்ளவுமே இந்த 'மகத்

தான்' ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய திட்டங்களால் தாங்கள் தனிப்பட நலனடையும் போது நாடு முழுதும் நலிவடைகிறது; நாட்டின் வருங்காலமே அடகு வைக்கப்படுகிறது என்பதை இவற்றில் ஈடுபட்டுள்ளவர்கள் உணர மறுக்கிறார்கள்.

சுருங்கச் சொன்னால், தேசிய வருமானத்தில் பெரும் பகுதியைச் சர்க்காரே பகிர்ந்தளிப்பதால் லாபம் அடையும் சிறுபான்மையோர், தாங்கள் மட்டும் பெறும் நன்மையால் மொத்தத்தில் நாட்டுக்கு நேரும் மாபெரும் தீமையை மனத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய நிலையை ஓர் எளிய கணக்கு மூலம் விளக்கலாம். நம் தேசிய வருமானம் நூறு லட்சம் ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். பர்மிட்டுகளற்ற சுதந்திரப் பொருளாதாரம் நிலவினால் இதில் நாட்டு மக்களுக்கு அறுபது லட்சம் ரூபாய் பகிர்ந்து தரப்படலாம். மிருதியுள்ள நாற்பது லட்சம் ரூபாய் தனிப்பட்ட தொழிலதிபர்களைச் சேரும். நாற்பது தொழிலதிபர்களுக்கு இந்தத் தொகை கிடைப்பதாக வைத்துக் கொள்ளலாம். இன்று சர்க்காரே பொருளாதாரத்தை நிர்ணயிப்பதால் இந்த நாற்பது பேர்களுக்குப் பதில், காங்கிரஸ் கட்சிக்குத் தாளம் போடும் பத்துப் பேர்களுக்கே, இந்த நாற்பது லட்சம் ரூபாய்—அல்லது அதற்கும் மேலாகக் கூட—பங்கிடப்படுகிறது.

சுதந்திரப் பொருளாதாரத்தில் தொழிலதிபர்களுக்குள் போட்டா போட்டி நிலவுகிறது; எனவே என்னதான் முண்டியடித்தாலும் அவர்கள் பங்கு அதிகபட்சம் தலைக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் உயர முடியாது. ஆனால் சர்க்காரானது ஏகபோக உரிமைகளை வாரி வழங்கும்போதோ, சலுகை பெறும் தொழிலதிபர்களின் வரும்படிக்கு ஒரு வரம்பே இல்லாமல் போகிறது. சுயேச்சைத் தொழிலுரிமை உள்ளபோது நாற்பது நபர்கள் பெறும் வருமானத்தை விட அதிகமாக இந்தப் பத்தே பாக்கியவான்கள் பெறுவதால், நாட்டுக்கு ஒரு விதமான நன்மையும் கிடையாது. இவர்கள் ஐம்பது லட்சம் ரூபாய் பெற்றால் தேசிய வருமானத்தில் மக்களுக்குக் கிடைப்பது மீதி ஐம்பது லட்சம் ரூபாய் தான்—அதாவது சுதந்திரப் பொருளாதாரம் நிலவும்போது கிடைப்பதைவிட குறைவான தொகையே மக்களுக்குக் கிடைக்கும். ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் மக்களுக்குத் தேவையான பண்டங்களைப் படைத்துத் தரும் வகுப்பு அழிந்து, அதனிடத்தில் சர்க்காரின் கைப்பாவைகளாக, சர்க்கார் மக்களுக்குத் தேவை என்று கருதும் பொருள்களையே செய்து தரும் கோஷ்டி உருவாவதைத் தவிர இன்றைய ஆட்சி முறையில் எந்த விசேஷ அம்சமும் கிடையாது. இந்தக் கோஷ்டியினர் தாங்கள் பெறும் வருவாய் தர்ம ரீதியில் கிடைப்பதுதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

'நாம் காங்கிரஸ் ஆட்சியில் அடையும் சொற்ப நன்மைகளுக்கு அக்கட்சியின் சுயநல நோக்கமே காரணம். அதே சுயநலப் பேய்க்கு நாமும் இரையாகி நாட்டின் நல்வாழ்வு நலிவடைய உடந்தையாக இருக்கலாகாது' என்று இன்றைய சர்க்காரின் செல்லப் பிள்ளைகள் மனம் மாறி பிரதிக்ஞை செய்துகொள்ள வேண்டும். சுதந்திர வாழ்வை நிலைநாட்டத் தமக்குள்ள சக்தியை அடுத்த தேர்தலில் பிரயோகிக்கவும் அவர்கள் உறுதிகொள்ள வேண்டும். பாரத மக்கள் அதர்மத்துக்கு அடிபணிந்தார்கள் என்ற அபவாதம் உண்டாகாமல் அவர்கள் நம் நற்பெயரைக் காத்துத்தர வேண்டும்.

காவிரியின் சீற்றம்

" 'வெள்ளம்' என்ற பெயர் கொடுத்துக் கவனிக்க வேண்டிய பிரச்னை எதுவுமே இந்த ஆற்றைப் பொறுத்த வரையில் கிடையாது" என்று காவிரி ஆற்றைப் பற்றிக் கூறியது வெள்ளத் தடுப்புக் குறித்த ஒரு கமிட்டி.

ஆனாலும் கடந்த மூன்று வாரங்களாக மேற்குத்தொடர்ச்சி மலைகளில் இடையறாது கொட்டிய மழை காரணமாகச் சாந்தமே உருவெடுத்த காவிரியும் சீறி எழுந்து விட்டாள். மேட்டூர் அணையில் தினந்தோறும் திறந்துவிடக்கூடிய அதிகபட்ச நீரின் அளவைவிடக் கூடுதலாக நீர் சேர்ந்து வருகிறதாம். திறந்துவிட்ட நீரையும் ஏற்கக்கூடிய நிலையில் இல்லை இந்த அணையின் கீழுள்ள பிரதேசம். எனவே கொள்ளிடமெல்லாம் வெள்ளக் காடாகி விடக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் காவிரியின் கழிமுகப் பகுதியில் தாழ்வான இடங்களில் உள்ளோரை அப்புறப்படுத்த மும்முரமாக ஏற்பாடுகள் நடக்கின்றன. சேலம் ஜில்லாவில் சில பகுதிகளிலும்,


அகிலன்
எழுதும்
புது வெள்ளம்
கல்கி
ஆகஸ்ட் 6ல்
இதழில் ஆரம்பமாகிறது.

நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHTP. G.M

பவானி நகருக்குள்ளும் வெள்ளம் புகுந்து சேதம் விளைவித்திருக்கிறது.

மந்திரிகள் சிலரும், ம ரா ம த் து அதிகாரிகளும், கலெக்டர்களும் துடிப்புடன் ஆற்றும் பணி பயன் அளிக்க வேண்டுமானால் இனியாவது காவிரியின் சாந்தத்தை மட்டும் முழுதும் நம்பாமல், வருமுன் காப்பாக வெள்ளத்தடுப்பு வேலைகளில் சர்க்கார் முனைந்து செயலாற்றவேண்டுமென விரும்புகிறோம்.

தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ளதைக் காட்டிலும் பலத்த வெள்ளக் கஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர் நம் கேரள சோதரர்கள். தண்ணீரைப்பற்றி, குறுகிய மனப்பான்மை காட்டி சண்டையும் சச்சரவும் செய்யாதிர்கள் என்று இந்த இரு ராஜ்யங்களுக்கும் எச்சரிக்கை செய்யத்தான் வருண பகவான் இந்தக் கோபத்தைக் காட்டினாரோ என்னவோ!

வெள்ளத்தால் இன்னலுற்றோருக்கு உதவுவதற்கு இல்லாதபடி பிரதமரின் தேசிய கஷ்ட நிவாரண நிதி தேய்ந்து வருவதாகத் தெரிகிறது. இவ்விஷயத்தில் நேருஜி கடமையாகக் கருதிச் செய்ய வேண்டிய ஒரு விஷயத்தை ராஜாஜி வற்புறுத்துகிறார். நிர்வாக இயந்திரத்தைக் கொண்டே அடாத முறையில் காங்கிரஸ் கட்சி கோடிக்கணக்கில் ஈட்டிய நிதியைத் தேர்தலுக்கு உபயோகப் படுத்துவது தேர்தல் விதிகளுக்கு விரோதமாகும். ஆனபடியால் அதைப் பிரதமர் பறிமுதல் செய்து, கஷ்ட நிவாரண நிதியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே ராஜாஜி வலியுறுத்துவது. அரசியல் நோக்கத்தில் நேருஜி தம்முடன் மாறுபட்டாலும் தார்மீகப் பண்புகளைக் கடைப்பிடிப்பதில் அவர் தம்முடனே இருப்பதாகக் கருதியே ராஜாஜி இந்த அறிவுரையை வழங்கியிருக்கிறார்.

என்ன சேதி?

பட்நாயக்கின் கற்பனைத் திறன்

ஒரிஸ்ஸா முதன்மந்திரி திரு விஜயாநந்த பட்நாயக், மாஜி மன்னர்கள் வரி செலுத்தாமல் அநுபவித்துவரும் இருபது லட்சம் ஏக்கர் நிலத்தை நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகிக்கப் போவதாக முழக்கியிருக்கிறார். இதைப் போன்ற பொய்க் கணக்கு வேறு கிடையாது. முன்பு நிலவருமான இலாகாவை வகித்து வந்த காங்கிரஸ் மந்திரியே, மாஜி மன்னர்கள் வரி செலுத்தாமல் அநுபவித்து வந்தது 37,000 ஏக்கர் நிலம் தான் என்று சட்டசபையில் கூறியிருக்கிறார். பட்நாயக்கின் கற்பனை சக்தியில் அதுவே பல்கிப் பெருகி விட்டது!

அமிதமான செல்வம் படைத்திருப்பவர்கள் சமூகத்துக்கு ஆபத்தை விளைவிக்கலாம் என்று பட்நாயக் பயமுறுத்துகிறார்; ஆனால் அமிதமான அதிகார பலத்தைத் தேக்கியுள்ள காங்கிரஸ்காரர்கள் அவர்களைவிட அபாயகரமானவர்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

உத்தம புருஷர் புருஷோத்தம தாஸ்

எண்பதாண்டுகள் வாழ்ந்து மறைந்த ஸ்ரீ புருஷோத்தம தாஸ் தாகூர்தாஸ் அவர்களை வர்த்தகப் பிரமுகராக அறியும் வியாபார உலகம்; மூன்றும் வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொண்டு நம் தங்கக் கையிருப்பைக் காத்துத் தந்த தங்கமான மனிதராக அவரைக் கருதுவர் பொருளாதார வல்லுநர்; ரிஸர்வ் பாங்கின் தோற்றுவாய்க்குக் காரண புருஷராக அவரைப் போற்றுவர் நிதி நிபுணர்கள்; காந்திமகானின் அன்பைப் பெற்றுத் தேசியத் தொழிலபிவிருத்திக்குப் போராடிய வீரராக அரசியல்வாதிகள் அவரைப் பாராட்டுவர்; பொது மக்களோ, எளிமையும் தார்மிகச் சிந்தையும் படைத்த ஒரு குண

வாணுகவே அவரைக் கொண்டாடுவார்கள். பணபலம் இருந்தும், பல துறைகளில் தேர்ந்த அறிவு இருந்தும், கைவசம் அதிகாரம் இருந்தும் மனிதப் பண்புடன் வாழ்ந்த அவரது நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

வேண்டாம் இந்த விஷமம்

'காங்கிரஸ் கட்சி பண பலத்தினால் தான் ஒரிஸ்ஸாவில் வெற்றி பெற்றது என்று குற்றம் சாட்டும் ராஜாஜி அதே மூச்சில் சுதந்திரக் கட்சிக்குப் பொருளுதவி கேட்கிறாரே!' என்று காங்கிரஸ்காரர்கள் எழுதியும் பேசியும் வருகின்றனர்; பரிகாசம் செய்கின்றனர்.

எதிலும் மிகை, அதி என்றெல்லாம் உண்டு. உப்பு சேர்க்காத பண்டம் குப்பையில் என்று நமக்குத் தெரியும். எனினும் அதே உப்பை இரு மடங்கு போட்டு விட்டால் அந்த உணவைப் படைத்தவரைச் சபிக்கத்தான் செய்வோம். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும் என்ற பழமொழி வழங்கும் நம் தமிழகத்தில், அளவுக்கு மீறிய பணத்தின் அசுர சக்திக்கும் ஒரு ஸ்தாபனம் நேர்மையான முறையில் இயங்குவதற்குத் தேவைப்படும் நிதியின் அளவுக்கும் மாறுபாடு தெரியவில்லை என்றால் பரிதாபமாகத்தான் இருக்கிறது.

அதிகாரத்தைக் கொண்டு பணம் வசூலிப்பதற்கும் நியாயத்தைக் காட்டிப் பண உதவி கேட்பதற்கும் உள்ள பேதத்தை அறியாமல் பிதற்றுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியானது ஏராளமான நிதி வசதி பெற்றிருப்பதாலேயே எதிர்க் கட்சிகளும் தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்காக, பொருள் திரட்ட வேண்டியிருக்கிறது. ஒன்றுமட்டும் சத்தியம். ராஜாஜியின் கட்சியைப் பற்றி ஐயப்படுவது நம் நாட்டின் சத்திய உணர்ச்சியைப் பற்றியே சந்தேகப்படுவதற் கொப்பாகும்.

இலங்கைக் கடிதம்

விசா வரிச் சட்டம்

கொழும்பு, ஜூலை 5உ

இவ்வாரத்துடன் முடித்து வைக்கப்பட்டிருக்கும் பார்லிமெண்ட் சபையின் கூட்டத் தொடரில் இலங்கையிலுள்ள இந்தியர்களைக் கடுமையாகப் பாதிக்கும் அநேகம் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. அவற்றில் முதலாவது சட்டம் விசா வரிச் சட்டம். இலங்கையில் இந்திய பாஸ்போர்ட்டுகளுடனும் அதில் இங்கு வசிக்க அனுமதியளிக்கும் விசாவுடனும் உள்ள ஒவ்வொரு அயல்நாட்டவரும் ஒரு வருட விசாவுக்கு நானூறு ரூபாய் வீதம் வரி செலுத்தக் கோருவதே இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சம். சென்ற வருட ஜூலை மாதம் நிதிமந்திரியின் பட்ஜெட் சொற்பொழிவிலே இந்த வரி விதிப்பு யோசனை வெளியிடப்பட்டதென்றாலும் அதுசம்பந்தமாகச் சட்டமியற்றச் சுமார் ஒரு வருட காலம் பிடித்திருக்கிறது. எனினும் பட்ஜட் நிறைவேற்றப்பட்ட சென்ற வருட செப்டம்பர் மாதத்திலிருந்து இந்த வரி விகிதம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் உள்ள கிட்டத்தட்ட பத்து லட்சம் இந்திய வம்சாவளியினர்களில் இந்தியப் பிரஜைகளாக இந்திய பாஸ்போர்ட்டுகளுடன் இருக்கும் சுமார் 30,000 பேர்களில் வரிவிலக்கு அளிக்கப்பட்ட அரசாங்க, நகரசபை ஊழியர்கள், 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் ஆகியோர் நீங்கலாகச் சுமார் 15,000 பேர்கள் இந்த வரியைச் செலுத்த வேண்டியிருக்கலா மென்று மதிப்பிடப்படுகிறது. இவர்கள் ஜூலை மாதம் 8ம் தேதிக்குள் விசா வரி செலுத்தி ரசீது பெற்றுவிட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இமிகிரேஷன் காரியாலயம் தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருக்கிறது. ஜூலை மாதம் முதல் தடவையாக வரி செலுத்தி முடித்ததும் இரண்டாவது வருடத்துக்குரிய வரியை இவர்கள் அக்டோபர் மாதம் செலுத்த வேண்டியிருக்குமென்று தெரிய வருகிறது. இதன்படி இவ்வருட முடிவுக்குள் இந்தியப் பிரஜைகளாக இந்நாட்டிலிருப்பவர்கள் ஒவ்வொருவரும் அரசாங்கத்துக்கு ரூ. 800 வரி செலுத்த வேண்டியிருக்கும். சற்றுக் கவனமாகப் பரிசீலனை செய்து பார்த்தால் இந்த வரிவிதிப்பு இந்தியர்களை எவ்வளவு கடுமையாகப் பாதிக்கிறதென்பதை அறியலாம்.

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கையில் குடியேறியதாகச் சொல்லி இந்தியர்களைத் திடீர் திடீரென்று கைது செய்து காவலில் வைத்து நாடு கடத்துவது சென்ற சில தினங்களாக அதிகரித்திருக்கிறது. ஏராளமான இந்தியர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுக் கொழும்புக்குக் கொண்டுவரப்படுகிறார்கள். இவர்கள் கும்பனித் தெருவிலுள்ள போலீஸ் நிலையத்தில் சின்னஞ் சிறு இடத்தில் ஆடு மாடுகளைப் போல் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் காட்சி மிகமிக வெட்கக்கேடான காட்சி. மற்றவர்கள் முன் வேலி போட்டு வேலிக்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் வேண்டுமானால் ஏற்கனவே பல ஆண்டுகளாக இலங்கையில் இருந்தவர்களாயும் அதை ருசுப்படுத்த வழியில்லாமல் மாட்டிக் கொண்டவர்களாயும் இருக்கலாம். பெரும்பாலோர் ''கள்ளத் தோணிகளில்'' வந்தவர்களாகவே வர்ணிக்கப்படுகிறது. சட்ட விரோதக் குடியேற்றத்தைத் தடை செய்ய இலங்கை இந்திய அரசாங்கங்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுத்தும் இங்கு வந்து பலர் அவமானப்படுவது மிகுந்த வேதனை தருகிறது. —ரஜனி



எந்த ஊர் சார்?

ர. வேங்கடரத்தினம்

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தான் என்று தொடங்கினாலும் சரி, அளகாபுரியிலே அமரசிம்மன் என்றொரு மன்னன் ஆண்டு வந்தான் என்று ஆரம்பித்தாலும் சரி, இந்த ஊர்ப் பிரச்னையைச் சமாளித்தாக வேண்டும். ஊரைக் குறிப்பிடாமல் கதையைத் தொடங்க முடியாது. குழந்தைகள் கதைகளில் மட்டுமா? இல்லை, பாரதியாரின் நாவல் 'சந்திரிகையின் கதை' குழந்தைகளுக்கு எழுதிய கதையா, என்ன? வேளாண்குடி இராம வர்ணனைதானே முதல் அத்தியாயத்தின் எடுப்பு? 'கல்கி'யின் 'தியாகபூமி' என்றதும், 'நெடுங்கரை' சம்பு சாஸ்திரிகள் தம் ஊர்ப் பெயரோடு கண் எதிரே வந்து நிற்கிறார் அல்லவா?

அதுதான் சொன்னேன், ஊர்ப் பிரச்னையென்று.

இது கடவுளுக்கே உள்ள பிரச்னைதான். காசி விசுவநாதர், குருவாயூர் கிருஷ்ணர், சமயபுரம் மாரியம்மன், திருப்பதி வேங்கடாசலபதி என்று ஒவ்வொரு தெய்வத்துக்கும் தனித்தனி விலாசம் இருக்கிறதே! அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். குறிப்பாகப் பணம்-காசு விஷயத்தில் ஆள் மாறாட்டம் ஏற்படாதிருக்க, மேல் விலாசம் முழுவதுமாக இருப்பது தேவைதான். திருப்பதி ஏழுமலையானுக்கு என்று எடுத்து வைத்த காசு அவருக்குத்தானே போக வேண்டும்? ஸ்ரீரங்கத்து ரங்கநாதரும் திருநீர்மலை ரங்கநாதரும் காரமடை ரங்கநாதரும் பள்ளி கொண்ட ரங்கநாதரும் ஒன்றுவிட முடியுமா? ஊர் தனித்தனியே இருக்கிறதே, சுவாமி? அதற்கென்ன சொல்கிறீர்கள்? நெல்லூர்க் காளை காங்கேயம் காளை ஆகிவிடுமா? ஊருக்கு ஊர் வேறுபாடு இல்லாமலா, தீட்சிதர் "வாதாபி கணபதிம்" என்று பாடினார்? எல்லாத் தெய்வங்களும் ஒன்றுதான்; அது இல்லாவிட்டாலும் கூட, எல்லா ஊர்க் கணபதிகளுமாவது ஒன்றுதான்; தம்முள் சமம்தான் என்று தனியே ஊரைச் சொல்லிப் பாடினார் என்றால், ஊரின் பெருமையைப் பற்றி இன்னும் என்ன சொல்வது?

சில ஊர்த் தெய்வங்களின் பெயர்களை விட அவ்வூர்ப் பெயர்களே அதிகப் பெருமையுடன் விளங்குவதைக் கூடக் காணலாம். பாண்டுரங்கனின் பெயரைவிடப் பண்டரிபுரமும், ஜகந்நாதரை விடப் பூரித் தலத்தின் பெயரும் அதிகப் பிரசித்தமானவையன்றோ?

கடவுள்கள் பிழைத்துப் போகட்டும். அவர்களை விட்டுவிட்டு, அடுத்தபடி மகா புருஷர்களுக்கு வருவோம். வடலூராரும் பட்டினத்தாரும் பாடிய அருட் பாடல்களைக் கேட்டு இன்புறுபவர்கள் அல்லவா நாம்? தட்சிணேசுவரமும் திருவண்ணாமலையும் தந்த தவப் பெரியார்கள் என்று குறித்தாலேயே போதுமே? ராமகிருஷ்ணர், ரமணர் என்று சொல்லாமலே தெரியுமே? காஞ்சியும், சிருங்கேரியும், பூரியும், துவாரகையும், பழைய காலடியின் சிஷ்யப் பிள்ளைகள் தாமல்லவா? ஊரின் மகிமையே மகிமை!


நம் தேச வரலாற்றையே எடுத்துக் கொள்வோம். அத்தினபுரம், அயோத்தி என்று எடுப்புக் கூறிப் பாடலிபுத்திரம், பானிபட், பிளாசி வழி வந்து டில்லியைச் சொல்லி மங்களம் பாடி விடலாமே. தேச விடுதலைப் போராட்டம் மட்டும் என்ன? ஒரே ஊர்கள் மயம்தானே? பாளையக்காரர் பயந்த பாஞ்சாலங்குறிச்சியும் வீராங்கனையின் ஜான்சியும், பாஞ்சாலத்து ஜாலியன்வாலாபாக்கும், தமிழகத்துத் திருவாடானையும் இல்லாமல் நாட்டுப் புரட்சியின் வரலாறு ஏது? போர் பந்தரும், பார்டோலியும் இன்றி, சம்பாரனும் சபர்மதியும் இல்லாமல், வேதாரணியமும் வர்தாவும் குறிப்பிடாமல், காந்திக் கதைதான் முற்றுப்பட்டு விடுமா?

இந்தப் பெரிய மனிதர்கள் விஷயமே வேண்டாம்!

அடுத்தபடி பார்ப்போம்.

கலைத்துறையை எடுத்துக் கொள்ளலாம்.

பிழைப்பு ஓடுவதே முழுக்க முழுக்க ஊர்ப் பெயரால்தான்—சங்கீத உலகில்! காரைக்குடி சாம்பசிவய்யர், பங்களூர் நாகரத்தினம்மாள், மைசூர் வாசுதேவாச்சாரியார், பட்டணம் சுப்ரமண்ய அய்யர், காஞ்சிபுரம் நாயினாப் பிள்ளை, டைகர் வரதாச்சாரியார் (சார், சார், மன்னிக்கவும். ஏதோ உற்சாகத்தில் சொல்லி விட்டேன். டைகர் என்று ஊர்ப் பெயர் இல்லை, ஒப்புக் கொள்கிறேன்) — இப்படி ஊரோடு சொல்கிற வழக்கம் கூடப் போய், இப்போது வித்துவான்களின் பெயர்களையே அடியோடு நீத்து, ஊர்ப் பெயர்களைமட்டுமேகுறிப்பிடுகிற அளவுக்கு வந்து விட்டது. தென்னங்குடி வாய்ப்பாட்டு, சேர்மாதேவி வயலின், குடிகாடு மிருதங்கம் என்றெல்லாம் குறிப்பிடுகிறோம். இன்னுமா கேட்கிறீர்கள்? வாழைத் தோப்பு சகோதரர்கள் நாககரம்



என்றால் கூட்டம் நெறி பிதுங்குகிறது. ரசிகர்களிடம் காரணம் கேளுங்கள். என்ன, தெரியுமா, சொல்வார்கள்? "வாரைத் தோப்போ, கும்பமேளாவோ?" என்று தான் கேட்பார்கள். ஊர் மோகம் சங்கீதத் துறையில் மட்டுமல்ல. நாட்டியத் துறையிலும் உண்டு.



சாப்பாட்டுத் துறையிலோ? ஒவ்வொரு ரங்கநாதரும் வெவ்வேறு என்றது போலவேதான்! மாம்பழங்களில்தான் எத்தனை ருசி, ரகம் உள்ளன? பங்கனூரான் பங்கனபள்ளி மாதிரி இருக்கிறதா— நீங்களே சொல்லுங்கள். நடுச்சாமக்குக் கொடுக்கிற காக மைலாப்பூருக்கு கொடுப்பீர்களா?

பந்தநல்லூர் பாணியே தனி; வழுவூர் வழியே அலாதி. தவிர மெலட்டூர் நாட்டிய நாடகம் இருக்கவே இருக்கிறது. இத்தனையும் தவிர மணிப்பூர், குச்சிப்புடி....இன்னும் எத்தனையோ! (இதையெல்லாம் படிக்கிற நேயர் ஒருவர் அதற்குள்ளேயே மூக்கில் விரலை வைக்கிறார்—'ஏதேது, இந்தக் கட்டுரையாளர் பெரிய பேர்வழியாய் இருப்பார்போல் இருக்கிறதே. இந்த மனிதருக்குத் தெரியாத விஷயமே கிடையாதோ? புராணம், வேதாந்தம், இலக்கியம், சரித்திரம், சங்கீதம், நாட்டியம் எல்லாவற்றையும் அலசுகிறாரே' என்று வியக்கிறார். அப்பாவி மனிதரே, எனக்கு எல்லாவற்றுக்கும் பெயர்தான்—அதுகூட ஊர்ப் பெயர்தான்—தெரியும். உண்மையில், மெலட்டூர் பாணிக்கும் குச்சிப்புடி சம்பிரதாயத்துக்கும் என்ன சம்பந்தம் என்றால், தூத்துக்குடி 'எக்ஸ்பிரஸ்'க்கும் கும்மிடிப் பூண்டிப் 'பாஸஞ்சரு'க்கும் உள்ள சம்பந்தம் தான் என்றுதான் என்னால் பதில் சொல்ல முடியும்!)

கலையாவது, கத்தரிக்காயாவது என்கிற நண்பர்கள் எவ்வளவோ பேர்கள் இருப்பார்கள். அவர்களைச் சற்றுக் கடைத்தெருவுக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

அதோ பாருங்கள், முதல் கடை! கராச்சி 'சில்க் ஸ்டோர்.' அடுத்தது 'கும்பகோணம் பாத்திரக் கடை.' அதற்கடுத்தது 'சீர்காழி லாட்ஜ்' ஓட்டல், மேலே நடந்தால் 'பாம்பே ஹேர் கட்டிங் சலூன்' (உள்ளூர் உரோமத்தை வெட்ட மாட்டாரா என்று கேட்காதீர்கள்!) அடுத்த கடை 'ரங்கூன் கமலங்கள்' விற்குமிடம்.....இப்படி நீளமாகச் செல்கிறது. அங்கு, ஒவ்வொரு கடையிலும் கிடைக்கிற பொருளும் ஸ்தல விசேடம் பொருந்தியதாக இருக்கிறதல்லவா?

பவானி ஜமுக்காளமும், கரூர் விரிப்புகளும், சேலம் குண்டஞ்சும்' (இது என்ன என்று கேட்காதீர்கள்!) உறையூர்ப் புடவைகளும் கைத்தறித் துணி ரகங்களில் உலகப் பிரசித்தி பெற்றவை என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுமா? ஆரணியும் காஞ்சிபுரம், தொன்னைகாலரும்பணைக்காரர் வீட்டுப் பெண்டிர்க்கு இருப்பது போல் சின்னாளப்பட்டியும் கும்பாக்கமும் கோடம்பாக்கமும் நம் வீட்டு மகளிர்க்கு இல்லையா?

மைசூர்ப்பாகும் டில்லி பாதுஷாவும், கல்கத்தா ரசகுல்லாவும் காசி அல்வாவும் ஒன்றுக்கொன்று எவ்வளவு தூரம் மாறுபட்ட இனிமையை ஊட்டுகின்றன. (இடையில் யாரோ ஒரு நண்பர் குறுக்குக் கேள்வி போடுகிறார். மைசூர்ப்பாகிற்கும் மைசூர் ரசத்திற்கும் என்ன ஒற்றுமை உள்ளது? இரண்டும் மைசூர் ஆயிற்றே என்று கேட்கிறார். சரியான கேள்வி, என்னிடம் பதில் இல்லை!)

இந்த ஊர் உணர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். சாமான்களைப் பொறுக்கி வாங்க வேண்டும் எனில், ஊர்ப் பெயரைச் சொன்னால் போதும். தேர்ந்தெடுக்கிற தொல்லை மிச்சம். தஞ்சாவூர் போகிற நண்பர் யாராவது அகப்பட்டால், "சார், கொஞ்சம் குடமிளகாய் மட்டும் வாங்கி வந்து விடுங்கள். அப்படியே நல்ல திருச்சினாப்பள்ளிக் கதம்பம் நாலு முழமும், கும்பகோணம் வெற்றிலை கிடைக்குமானால் இரண்டு கவுளியும், மறக்காமல் வாங்கி வாருங்கள்" என்று கேட்டுக் கொண்டால், நல்ல சரக்கு வரும் என்பது நிச்சயம். அந்த மனிதர் சற்றுக் கோபக்காரராய் இருப்பின் "ஆமாம், ஐயா அப்படியே தூத்துக்குடி பனங் கற்கண்டு நாலு சேரும், பத்தமடைப் பாய் அரை டஜனும் பண்ருட்டிப் பலாப்பழம் பெரிய ரகமாய் இரண்டு மூன்றும் வாங்கி வந்தால் கூட, உமக்குத் தேவலைதான்" என்று பாயலாம். நீங்கள் உடனே எதிரம்பு தொடுக்கலாம்: "சரி ஐயா, அடுத்த தடவை நான் பழனிப் பக்கம் போகிறபோது, நீர் மட்டும் பழனிப் பஞ்சாமிர்தமும், திண்டுக்கல் பழமும், மணப்பாறை முறுக்கும் வாங்கி வரச் சொல்லும்! நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!"

(இதற்கு நடுவே ஒரு வாசகர் இக் கட்டுரையில் அதற்குள் மொத்தம் நூற்றிருபது ஊர்ப் பெயர்கள் வந்துவிட்டனவே என்று எண்ணிப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவரிடம் மட்டும் காதோடு காதாக ஒரு இரகசியம் சொல்லி விடுகிறேன்— 'இதில் வியப்பதற்குள்ள இருக்கிறது? எதிரே உதவிக்கு ஒரு தேசப்படத்தைப் பிரித்து வைத்துக் கொண்டுதானே இவ்வளவும் எழுதுகிறேன்? இன்னும் பதினைந்து ஊர்களின் பெயர்களைக் கூறாமல் விடப் போகிறேனா?")

> கம்யூனிஸ்ட் கட்சியைத் தோல்வியடையச் செய்ய, கம்யூனிஸ்ட் கொள்கைகளையும் திட்டங்களையும் தானே மேற்கொண்டு விடலாம் என்று காங்கிரஸ் எண்ணுகிறது. இந்த முயற்சி எந்த விதத்திலும் வெற்றி அடையாது. அதற்கு மாறாகக் காங்கிரஸ் கட்சியே கம்யூனிஸ்ட் கட்சியாக மாறிவிடும்.
>
> —ராஜாஜி




அழகின் அபிவிருத்தி
நீங்கள் "'ஹாஸலீன்' ஸ்னோ" உபயோகித்தீர்களானால், வெய்யிலின் வெப்பமோ, காற்றோ, மழையோ உங்களுடைய தோற்றத்திற்கு யாதொரு கெடுதியும் விளைவிக்காது. கெடுதியற்ற தன்மையுள்ள "'ஹாஸலீன்' ஸ்னோ" உங்களுடைய சருமத்தை மிருதுவாகவும் அழகாகவும் விளங்கச் செய்கிறது. மற்றும் அது ஏமாற்றம் செய்ய முடியாத பாக்கிங்கில் கிடைக்கிறது.
HAZELINE SNOW
"'HAZELINE' SNOW" TRADE MARK
"'ஹாஸலீன்' ஸ்னோ"
ட்ரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

மனக்கொதிப்பும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன



நம் வயிறும், மூளையும் நரம்புகளின் மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நாம் மனக் கொதிப்பினாலோ அல்லது கவலையினாலோ பாதிக்கப்படும்பொழுது இந்த நரம்புகள் ஜீரணம் செய்வதை தற்காலிகமாக தடுப்பதுடன் ஆட்ரினலின் என்ற சக்திவாய்ந்த அமிலத்தை வெளிப்படுத்தி ரத்தத்துடன் கலக்கிறது. இந்த அமிலம் ஓடியாடி வேலை செய்வோருக்கு மனக்கொதிப்பை எதிர்த்துப் போராட உதவுகிறது. ஆனால் மற்றவர்கள் விஷயத்தில் இது தீமையைப் பயக்குவதுடன் அவர்கள் ஜீரண சக்தியையும் குறைக்கிறது. அதனால்தான் வியாபாரத் துறையிலுள்ளவர்களில் 10 பேர்களில் 6 பேர் அஜீரணத்திற்குள்ளாகி, அதன் விளைவாக சாப்பிட்டபின் வயிற்று வலியினால் கஷ்டப்படுகிறார்கள்.





ஹ்யூலட்ஸ் மிக்சர் வயிற்றுவலியை விரைவாகவும் அடியோடும் நிவர்த்திக்கிறது. எரிச்சலை உண்டாக்கும் அமிலத்திலிருந்து இரைப்பையின் சுவற்றைக் காப்பாற்றுவதோடு உணவை நன்றாக கரைத்து ஜீரண சக்தி ஏற்படுவதற்கும் உதவுகிறது. 80 வருஷங்களுக்கு மேலாக உலகத்திலுள்ள எல்லா டாக்டர்களும் சிபாரிசு செய்யும் மருந்து இதுவே. குழந்தைகளின் வயிற்று உபாதைகளையும் தீர்க்கவல்லது ஹ்யூலட்ஸ் மிக்சர்.

வயிற்றுக் கடுப்புக்கு அபினி கலந்த ஹ்யூலட்ஸ் மிக்சரை உபயோகியுங்கள்.

“ஹ்யூலட்ஸ் மிக்சரை

உபயோகிக்க ஆரம்பித்ததிலிருந்து நான் நன்றாக சாப்பிட முடிகிறது.”



ஸி.ஜே. ஹ்யூலட் & ஸன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
66/A, கனியப்ப நாயகன் தெரு, மதராஸ்-3

இவ்வளவும் எழுதுகிறீரே, நீர் எந்த ஊர் என்று நண்பர் ஒருவர் ஆவல் மேலிடக் கேட்கிறார். இதோ சொல்கிறேன். (என்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ளத்தானே, இக் கட்டுரையை ஆரம்பித்துச் சுற்றி வளைத்து இத்தனையும் எழுதியது. நான் பிறந்தது விருதுநகரில். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது சென்னை நான்கிலிருந்து பதினெட்டு வரை. (சுருக்கமாய்ச் சொல்லிவிட்டேன். வேண்டுமானால், மைலாப்பூர், திருவல்லிக்கேணி, நுங்கம்பாக்கம், வேப்பேரி என்று வரிசையாகத் தேனும்பேட்டை வரை நீளமாய்ச் சொல்கிறேன்.) படித்து முன்னுக்கு வந்தது திருச்சி மாநகரில். (நான் முன்னுக்கு வந்து விட்டதாகத் திருச்சியில் யாருமே ஒப்புக் கொள்ள மாட்டார்கள். எனவே அங்கே போய் விசாரிக்கத் தேவைப்பட வேண்டாம்!) பணியாற்றியுள்ள இடங்கள் சாம்பல்பூர், பிலாயி, நெய்வேலி.

என் உடலிலே எத்தனை ஊர்கள் உள்ளன? காலிலே கான்பூர் செருப்புகளும் கையிலே கொழும்புக் குடையும், அரையிலே திருப்பூர்க் கதரும், கையில் 'ஸ்விஸ்' கடிகாரமும், கண்ணில்வல்லம் ஸ்படிக மூக்குக்கண்ணாடியும், நெற்றியில் பழனி விபூதியும், தலையில் காஷ்மீர்த் தைலமும் வைத்திருக்கும் நான் எவ்வூர்க் காரன் என்று என்னைக் கூறிக் கொள்வது?

வட்டமேஜை



இந்திய மருத்துவ முறை

'என்ன செய்தி' என்ற தலைப்பின் கீழ் 2-7-61 கல்கியில் ''அறிவுக்குத் தடை'' என்ற குறிப்பில் பிரசுரித்துள்ள விஷயத்துக்குச் சிறிது விளக்கம் தேவையாகிறது.

'இந்திய மருத்துவ முறையைப் பயின்றவர்கள்' இந்திய மருத்துவ முறைகளில் உயர் தரமான படிப்புக்கும் பட்டத்துக்கும் வாய்ப்பு கோருவதுதானே நியாயம்? அவ்வகையான வாய்ப்பு கிடைக்கா விட்டாலோ அல்லது கிடைப்பதற்கு முட்டுக்கட்டை இருக்குமானாலோ அதை ''அறிவுக்குத் தடை'' என்று அமைப்பது பொருந்தும். அவ்விதமின்றி ''இந்திய மருத்துவ முறையைப் பயின்றவரென்று தம்மை அழைத்துக் கொள்பவர்களும், அம்முறைகளோடு இணைக்கப்பட்ட மேல்நாட்டு வைத்திய முறையைப் படித்தவரும், மேல்நாட்டு வைத்திய முறையைப் பயில்வோருக்கான எம். பி. பி. எஸ். பட்டம் பெற அனுமதிக்கப்பட வேணும்'' என்பது எப்படிப் பொருந்தும்? நோயாளியின் பிணியைப் போக்கும் நற்பணியில் இந்திய முறையில்பயின்றஎல்.ஐ.எம் களும் ஜி. சி. ஐ. எம். களும் சோடைகவில்லை. அரசாங்கபரமாக உத்தியோகமேற்று நோயைப் போக்கும் தொண்டைச் செய்து வரும் எல்.ஐ.எம்.கள் தமது தொண்டைத் திருப்திகரமாகவும் திறமையுடனும் செய்து வருவதாகத் தனிக்கை அறிக்கைகள் தெரிவித்து வந்துள்ளன.

மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட கமிட்டிகளும் இவர்கள் புரிந்துவரும் செயலின் தொழிற்திறனைப் பற்றி இதே அபிப்பிராயத்தைத் தம் அறிக்கைகளில் வெளியிட்டுள்ளன. அவ்வாறிருக்க, தமக்கும் எம்.பி.பி.எஸ்.களைப் போலவே சம்பளமும் அந்தஸ்தும், சலுகைகளும் ஏன் தரக்கூடாது என்று கேட்பார்களானால் அது பொருத்தமாகும். இதுதான் இந்திய மருத்துவ முறையைப் பயின்றவர்களும் விரும்புவது. ஆனால் அதைத் தெரிவிக்கும் முறையில் தான் தவறு. வேண்டுமானால் ''நாங்களும், ஏற்கனவே பயிற்சி பெற்ற இந்திய மருத்துவ முறையில் உயர்தரப் படிப்பும் பட்டமும் பெறுகிறோம். அதற்கான வாய்ப்பை வகுத்துத் தாருங்கள். அதன் பிறகாவது இந்த வைத்தியத்துறையில் இனபேதம் என்ற நிலைமையை ஒழியுங்கள்'' என்று கேட்பாராயின் அது முற்றும் பொருந்தும்.

அகில இந்தியத் திட்டமாக இந்திய மருத்துவப் பயிற்சிக்கான ஒரு போதனை முறை அமைக்கப்பட்டு வருவதைக் குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். அப்போதனை முறைப்படி இந்திய மருத்துவத்தைப் படித்துத் தேறியவர் ஒரு மேனாட்டு வைத்திய பட்டதாரிக்குச் [எம். பி. பி. எஸ்.] சமமான ''அந்தஸ்தும்—சலுகைகளும்'' அளிக்கப்படுவர். அகில இந்திய தரத்தில் சமத்துவம் அளிக்கப்படும். இத் திட்டப்படி இந்திய மருத்துவ முறைகளில் பயிற்சி பெற்றவர் அகிலஇந்திய தரத்தில் எம். பி. பி. எஸ். களைப் போலவே உத்தியோகங்களுக்கு ஏற்கப்படுவர். அதே சம்பளம் பெறுவர். அதே சலுகைகளும் பெறுவார்கள்.

மேற்சொன்ன திட்டப்படி இனி படித்துப் பட்டம் பெறுவோ

> பொதுமக்கள் மனத்தில் குழப்பம் விளைவிக்காதபடி, வாக்காளர்கள் முன் லட்சியங்களை நிலை நாட்டவேண்டும். சுதந்திர ஆட்சி வேண்டுமா, லைசென்ஸ் பர்மிட் ஆட்சி வேண்டுமா, என்பதே பிரச்னையாக இருக்க வேண்டும். இந்திய அரசியலில் மக்கள் இரண்டே கட்சிகளாகப் பிரிந்து நிற்கவேண்டும். அப்போதுதான் சமநிலையிலுள்ள நிர்வாகமும், அரசியல் விழிப்பும், ஜனநாயகமும், பட்சபாத மின்மையும் நிலவும்.
>
> — ராஜாஜி



ஹிரண்யாக்ஷன் கலியுகத்தில் இருந்தால்....

''அப்பப்பா, இந்தப் பரீட்சைக்குப் படிக்க எழுதுவதற்குப் பதிலாக நூறு தடவை 'ஓம் நமோ நாராயணாய' என்று எழுதிவிட்டுப் போய்விடலாம்.''

ருக்கு அளிக்கப்படும் அந்தஸ்தும், சலுகையு மிருக்கட்டும். படித்துத் தேறி இந்நாள் வரையில் பொது மக்களுக்குத் தொண்டாற்றி வரும் இந்த எல். ஐ. எம். களுக்கும் ஜி.வி.ஐ. எம். களுக்கும் என்ன வழிவகை அத்திட்டத்தில் சமைத்திருக்கிறார்கள் என்று கேட்கலாம். செய்யாமலிருப்பார்களா? ஏற்கனவே சில ராஜ்யங்கள் அகில இந்தியத் திட்டமாக மத்திய சர்க்கார் சமைத்த போதனைத் திட்டத்தை நடைமுறையில் கொணர்ந்துள்ளன. சென்னை ராஜ்யத்திலும் அவ்விதக் கல்லூரி ஏற்படலாம். பிறகு யாவும் தெளிவாகி விடுமல்லவா? ஆகவே, கல்கியின் குறிப்பில் பிரசுரித்துள்ளது போல் கொஞ்சம் பொறுத்திருப்பதே நல்லது.

சென்னை - 6
1—7—61

டாக்டர் ஸ்ரீ ஹரி

விவசாயம் பெருகுமா ?

மதுரை மாவட்டத்தில் கண்மாய்கள் பல உள்ளன. சில முன்னாள் ஜமீன் பகுதிகளில் உள்ளன. இக்கண்மாய்களை அந்தக்காலத்து ஜமீன்தார்கள் தவி நபர்களுக்குச் சொற்பத் தொகைக்கோ, அல்லது இனாமாகவோ கொடுத்தார்கள். இதன் முக்கிய நோக்கம் என்னவென்றால் கண்மாய்களை மராமத்து செய்து, சீர்நிலையில் வைக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காகத்தான். இக்கண்மாய் நிலங்களை வாங்கினவர்கள் பிறருக்கு விற்று இப்பொழுது பல நூறு பாகமாக இக்கண்மாய்கள் அனுபவித்து வரப்படுகின்றன.

இவ்வளவு ஆண்டுகளாகக் கண்மாய் விவசாயத்தில் யாதொரு சச்சரவும் வரவில்லை. ஜமீன் முறை ஒழிந்ததும், ஜமீன்தார்களுக்குப் பல ஆயிரம் ரூபாய்கள் அரசாங்கம் நஷ்டஈடு கொடுத்தது. ஆனால், இந்த ஜமீன் பிரதேசத்திலுள்ள கண்மாய்கள் எல்லாம் மராமத்து பார்க்க மாட்டாமல் மோசமாய் இருக்கின்றன. காரணம் கண்மாய் சொந்தக்காரர்கள் சிறு சிறு விவசாயிகளாகப் பலர். இவர்கள் அரசாங்கத்தின் உதவியை எதிர் பார்க்கிறார்கள். நமது அரசாங்கமும் இதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. அதன்படி பெரிய பெரிய இயந்திரங்களைக் கொண்டு கண்மாய்க் கரைகளை நன்றாக எடுத்துக் கட்டி உள்வாய் மேடு பள்ளமில்லாமல் சமதளமாக்கி ஆழப்படுத்திக் கண்மாயில் அதிக தண்ணீர் தேங்க வழி செய்து விட்டு, இப்பொழுது நீர்ப் பிடியாயுள்ள நிலங்களை விவசாயத்துக்கு ஏற்ற நல்ல நஞ்சை நிலங்களாக்கப் போகிறார்கள். ஆனால் அதற்குள்ளாக நமது அரசாங்கத்தின் மற்றோர் இலாகா ரிவிஷன் செட்டில்மெண்டு என்று சொல்லிக் கண்மாய் முழுதும் புறம்போக்கு என்று கூறித் தனி உடைமை சொத்தை நஷ்டஈடு இல்லாமல் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்கிறது.

நம் தமிழ்நாடு நிதி அமைச்சர் இவ் வருட 'பட்ஜெட்'டைச் சமர்ப்பிக்கும்பொழுது சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தை விளக்கி, கண்மாய்களை ஆழப்படுத்தி நீர்ப்பிடி நிலங்களை விவசாயத்துக்குக் கொண்டு வருவதுதான் அரசாங்கத்தின் திட்டம் என்று கூறியுள்ளார். திட்டம் இப்படியிருக்க நீர்ப்பிடி நிலங்களைப் 'புறம்போக்கு' என்று சொன்னால் அரசாங்கம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற கூற்றுக்கு இடந் தருவதாகும்.

மதுரை
19—6—61

எஸ். வெங்கோபராவ்

கருத்துக் குவியல்

'நாவல் பிறக்கிறது' என்ற பகுதியில் நான்காவதாக இடம் பெற்றுள்ளவர் பிரபல நாவலாசிரியர் 'ஆர்வி.' ஆசிரியர் கையாண்டுள்ள எழுத்து திறம், வெகு நேர்த்தி. படித்து இன்புறத்தக்க வகையில் தமிழ்த்தேனைக் குழைத்து, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த காட்சியினைப் பொருள் செறிவோடு ஆழ்ந்த கருத்துக் குவியலாய், எண்ண இனிக்கும் கனியாக, நம்முன் படைக்கிறார் ஆசிரியர். அது கட்டுரை அன்று, கட்டுரைக் கருவூலம்; கட்டுரைப் பெட்டகம். எழுத்தாளர் அன்றி ஒவ்வொரு வாசகனும் கண்டு மகிழ்ச்சியடைய வேண்டிய கருத்துக் கோவை.

சாமிநாயக்கன்பட்டி
30-6-61

க. சிதாராமன்,
கே. எஸ். மணி

மணிபல்லவம்

'உடலில் மிகச் சிறந்த வலிமை மனத்தின் வலிமைதான். மிகச் சிறந்த விடுதலையும் மனத்தின் விடுதலைதான். புலன்களிலிருந்து விடுபட்டுச் சிந்திக்கும் தூய மனம்தான் சுதந்திரம். புலன்களுக்கும், உணர்வுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறவர்கள் உடம்பினால் விடுதலை பெற்று என்ன பயன்?' என்று திரு நா. பார்த்தசாரதி அவர்கள் மணிபல்லவத்தில் எழுதியுள்ளார்.

இதுபோன்ற வாக்கியங்கள் என்னுடைய உள்ளத்துக்கு உரமாகவும், அறிவுக்கு விருந்தாகவும் இருக்கின்றன.

நெய்வேலி
2-7-61

கே. ராதாகிருஷ்ணன்



நல்லதையே நாடுங்கள்

ஸாவ்லான் பேபி பவுடர் உபயோகியுங்கள்

விலை ஏற்றம் இல்லை
எகானமி ரூ. 3.75 ந.பை.
லார்ஜ் ரூ. 2.75 ந.பை.
மீடியம் ரூ. 1.45 ந.பை.
மேற்கண்டவை ஏறத்தாழ
வரியுள்படாத கடை விலைகளாகும்

இன்றையக் குழந்தைக்கு இன்றைய பேபி பவுடர்.
பட்டின் வழவழப்பு, தூவியின் மென்மை, ரம்மியமான வாசனை கொண்ட "ஸாவ்லான்" பேபி பவுடரில் "ஹிபிடேன்" சேர்ந்திருக்கிறது.
உங்களுக்கும் நல்லது.

ICI இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.
கல்கத்தா பம்பாய் சென்னை புது டில்லி


உங்கள்
டார்ச்சில்
எஸ்ட்ரெலா
பொருத்தி
இரவில்
சூரிய
பிரகாசத்தைப்
பெறுங்கள்
ESTRELA
எஸ்ட்ரெலா
ப்ளாஷ் லைட் பாட்டரிகள்
டார்ச்கள் மற்றும் பல்புகள்

அன்பே ஆரமுதே

அத்தியாயம் பதினைந்து

சினிமாக் கொட்டகை -வாசலில் வந்து நின்ற அனந்தசாமியைப் பார்த்ததும் கப்புசாமிதான் முதலில் பேசினார்.

"உங்களுக்கும் இந்தப் பைத்தியம் உண்டா?" என்றார்.

"மத்தியானம் என் சிநேகிதர் ஒருத்தர், பாகவதர் 'வாங்கு வாங்கு' என்றுஎன்னை வாங்கிவிட்டார். அவர் சிஷ்யன் நடிக்கிற படமாம். 'என்னையா சினிமாவே பார்க்கிறதில்லை என்கிறீர்? இவன் படத்தைப் பார்க்கா விட்டால் உம்மைக் காட்டு மிராண்டி, நாகரிகமில்லாதவர் என்று லோகம் எல்லாம் பழிக்கும்' என்றார். அவன் குழந்தைக்கு வேறு வைத்தியம் பண்ண ஆரம்பித்திருக்கிறேனு! இந்த அபவாதம் எதற்கு என்று படம் பார்த்து விட்டுப் போய் விடலாம் என்று வந்தேன்" என்று குறும்பாகச் சிரித்தார் அனந்தசாமி.

"அவன் பிள்ளைக்கு வைத்தியமா?"

"ஆமாம். இடுப்புக்குக் கீழே சுரணை இல்லை. நடமாட்டம் கிடையாது. உட்கார்த்தியே வைத்திருக்கிறது."

"அட, பாவமே..."

"விஷமாக ஏற்றி யிருக்கிறார்கள், உடம்பிலே ஊசி ஊசி என்று. அதையெல்லாம் வேறு எடுத்தாக வேண்டும்."

"அதைவிட இது பெரிய விஷமாச்சே" என்றார் கப்புசாமி சினிமாக் கொட்டகையைக் கண்ணாலேயே காட்டி. "எப்படி இருக்கு?"

"நான் சின்னக் குழந்தையாயிருக்கிற போது பேசாத படம் பார்த்திருக்கிறேன். கல்லூரியிலே படிக்கிற போது ஒன்று பார்த்தேன். இது மூன்றாவது."

"ஏது, அப்பா! எப்படியிருக்கு?"

"அது தனி லோகம். எனக்கு ஒன்றும் புரியவில்லை."

"என்ன புரியவில்லை! கதையா?"

"கதையெல்லாம் புரிகிறது. சில இடங்களில் இலக்கணமாகப் பேசுகிறார்கள். ஏன் என்று புரியவில்லை."

நாகம்மாள், கப்புசாமி, ருக்கு, சந்திரா நாலு பேரும் ஒரு புன்சிரிப்புடன் யாரோ குழந்தை பேசுவதைக் கேட்பது போல் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ம், அப்புறம்?"

"அப்புறம் வந்து இந்தக் காசி, யாரோ ஒரு பெண்ணோடு ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து பாடுகிறான். அவளும் பாடுகிறாள். கூடக் கூட நாலைந்து வாத்தியங்கள் கேட்கின்றன. அங்கே ஏது வாத்தியம்? சுற்றி எங்கே பார்த்தாலும் வயல்வெளி. வாத்தியம் வாசிக்கிறவர்கள் யாரென்றும் தெரியவில்லை. எங்கிருந்து வாசிக்கிறார்கள் அதெல்லாம்?"

கப்புசாமி மற்ற மூவரையும் பார்த்தார். ஒரு புன்சிரிப்புடன், "அதெல்லாம் இங்கே நின்று கொண்டு சொல்ல முடியாது. அது பெரிய விஷயம். சரி, வீட்டுக்குத்தானே போகிறீர்கள்? உங்களைக் கொண்டு விட்டுப் போகிறேன். வாருங்கள்" என்றார்.

"பரவாயில்லை. நான் நடந்து போய் விடுவேன். அரைமைல் கூட இல்லையே."

"அட வாருங்களென்றால் ரொம்ப ரொம்ப வெட்கப்படுகிறீர்களே!"

"இடம்...."

"இடமா? ஒரு அனந்தசாமிக்கு மட்டும் இடம் இருக்கிறது. வாருங்கள், ஸ்வாமி" என்று நகர்ந்தார் கப்பு.



ஒன்றும் பேச முடியாமல், நாகம்மாளின் முகத்தைப் பார்த்துவிட்டுப் பின் தொடர்ந்தார் அனந்தசாமி. முன்பக்கம் கதவைத் திறந்து, "ஏறுங்கள்" என்றார் சுப்பு.

"அப்புறமா....?" என்று இழுத்துக் கொண்டே பதில் வந்தது. "அப்புறம்....ம்.. ஆமாம். இந்தக் கதை நம்ம பக்கத்தில்தான் நடக்கிறது. தமிழ் பேசுகிற ஊரில்தான் நடக்கிறது. எல்லாரும் தமிழ்தானே பேசுகிறார்கள்? ஆனால் இந்தக் காசி எப்போது பார்த்தாலும் கால் சட்டையும் கைச் சட்டையும் போட்டுக் கொண்டே யிருக்கிறான். வீட்டில் இருக்கும்போது ஒரு கோட்டு போட்டுக் கொண்டிருக்கிறான். அதைக் கழற்றவே இல்லை. வீட்டிலே இருக்கிற போது சட்டை, பனியன், ஏதாவது தான் போட்டுக் கொள்கிற வழக்கம். ரொம்பப் பேர் அதைக்கூடப் போட்டுக் கொள்கிறதில்லை. இவன் இந்தக் கோட்டை விடவேயில்லை. கால் சட்டையையும் விடவே இல்லை. அப்படி மெட்ராஸில் நடக்கிற கதையாக இருந்தாலாவது சரியென்கலாம். இந்தக் கதை திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு இந்த மாதிரி ஊராக இருக்கிறது. அந்த ஊரெல்லாம் மெட்ராஸ் மாதிரி அவ்வளவு 'இதுவாக' இராதே. அங்கெல்லாம் இப்படிக் கால் சட்டையோடு சாப்பிட மாட்டார்களே. ஒருத்தர் இரண்டுபேர் யாராவது அப்படி இருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. அப்புறம் வீட்டிலே இருக்கிற போதே சினிமாப் பெண்கள் காஞ்சிபுரம், ஆரணி பட்டுப் புடவை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணக் குடும்பம்தான். அப்படித் தெம்புள்ள குடும்பமும் இல்லை. ஒரு கலியாணம், சீமந்தம், கோயில், சினிமா இப்படிப் போகிற போது பட்டுப் புடவை கட்டிக் கொள்வார்கள் பெண்மணிகள். இவர்கள் எப்பப் பார்த்தாலும், சமைக்கிறபோது, தூங்கற போதுகூட அசல் பட்டுப் புடவையாகக் கட்டிக் கொண்டு நடமாடுகிறார்கள்."

"சினிமாக்காரர்கள் இருக்கிறதைத் தானே கட்டிக்கொள்வார்கள். நூல் புடவைக்கு அவர்கள் எங்கே போவார்கள்? ராவணன் கிட்டப்போய் 'உங்கள் ஊரிலே அபூர்வமாய் இருக்கிற பொருளை எடுத்துக் கொடுங்கள்' என்று கேட்டானாம் ஒருத்தன். அவன் இரும்பு ஆணியை எடுத்துக் கொடுத்தானாம். அந்தமாதிரி சேதியாயல்லவா இருக்கிறது நீங்கள் சொல்கிறது."

"அப்படியா! அவ்வளவு பணக்காரர்களா அவர்கள்!"

"பின்னே!"

"அப்படியானால் வேறு யாரையாவது கூப்பிட்டுத்தான் வேஷம் போட்டுக் கொள்ளச் சொல்ல வேண்டும்."

"ஏன்?"

"கதைக்குச் சரியாக வரமாட்டேன் என்கிறதே இந்தப் புடவையெல்லாம்."

"அனந்தசாமி மாமா - நீங்கள் என்ன புதிசு புதிசாக எல்லாம் பேசுகிறீர்கள்?"

"புதுசாக ஒன்றும் சொல்லவில்லையே?" சுக்கு சிரித்துக் கொண்டே, "நமக்குப் பார்த்துப் பார்த்து எல்லாம் பழசாகி விட்டது. எது வந்தாலும் சரி - அது கோணலோ மாணலோ - பழகி எல்லாம் சரியாகப் பட்டு விடுகிறது" என்றான்.

அதற்குள் ராயப்பேட்டை சந்துக்குள் வண்டி திரும்பிச் சிறிதுதூரம் சென்று வந்து அனந்தசாமியின் வீட்டு வாசல் முன்னால் நின்றது.

"ரொம்ப நேரமாகிவிட்டதே-தூங்குகிறவர்களை யெல்லாம் எழுப்ப வேண்டுமே?" என்றார் சுப்புசாமி.

அதற்குள் அனந்தசாமி கீழே இறங்கி வாசலைத் தட்டி விட்டார். "வந்தேன்" என்று மங்களப் பாட்டியின் பதில் குரல் வந்தது.

"நல்ல வேளை" என்று மறுபடி வண்டியருகில் வந்தார் அனந்தசாமி. "ரொம்ப நன்றி, கொண்டு விட்டதற்கு!"

"பேஷ், பேஷ்!" உள்ளேயிருந்த நாகம்மாளின் குரல்.

"என்ன?"

"நன்றி என்றவுடன் காசிலிங்கம் ஞாபகம் வந்தது."

"அதைச் சொல்கிறீர்களா? உங்களுக்கெல்லாம் ரொம்ப வேண்டியவனுமே அவன். மத்தியானம்தான் உங்கள் தங்கை சொன்னார்" என்று சுப்புசாமியிடம் கூறினார் அவர். "உங்கள் தங்கைக்கு அவனை நினைத்தவுடனேயே படபடவென்று வந்து விட்டது. ஆனால், அம்மா, நான் அப்புறம் யோசித்துப் பார்த்தேன். அவன் அவ்வளவு கெடுதலான பையனாகத் தெரியவில்லையே."

"தேவலையே. படம் பார்க்கிறதற்கு முன்னாலேயா, பின்னாலேயா? எப்பொழுது இந்த அபிப்பிராயம் வந்தது?" என்றாள் நாகம்மாள்.

"முன்னால்தான்."

"அப்படியா? சரி. போகப் போகத் தெரிகிறது."

"போகப் போகத் தெரியும். பேசாமல் இரேன்" என்று எரிந்து விழுந்தார் சுப்புசாமி.

இந்தப் பேச்சு பாதி நடக்கும் போதே மங்களப் பாட்டி, வாசல் கதவைத் திறந்து, விளக்கைப் போட்டு விட்டு வாசற்படியில் வந்து நின்றாள்.



" யாரு, ஸ்வாமியா ?"

" ஆமாம் பாட்டி, நான்தான் !"

" எங்கே போயிருந்தீர்கள் ? நீங்கள் அந்தண்டை போனீர்கள். இந்தண்டை தேடிக் கொண்டு வந்துவிட்டார்கள் காரைப் போட்டுக் கொண்டு."

" யாரு ?" என்று கேட்டார் அனந்தசாமி.

" யாரு என்று கேட்டேன். 'மாம்பலத்திலே யிருந்து பாகவதர் வந்தார் என்று சொல்லுங்கள், சிஷ்யப் பிள்ளையோடு' என்று சொன்னார்."

ஒரு நிமிஷம் அனந்தசாமி யார், எதற்காக வந்திருப்பார்கள் என்று யோசனை செய்தார்.

" சிஷ்யப் பிள்ளையோடா ? காரிலேயா ?" 21

ஆமாம். இத்தனைக்கத்தனை நீளம் காரு."

" யாரு சார் ?"

" காசிலிங்கம்தான் போலிருக்கிறது. பாகவதர்தான் இன்றைக்கு மத்தியானம் அங்கே அழைத்துப் போனார். சிஷ்யப் பிள்ளை என்றால் அவனாகத்தான் இருக்க வேண்டும்.



நான்தான் காலமே வருகிறேன் என்று சொல்லி யிருந்தேனே, மருந்தைக் கொடுத்து விட்டு."

"என்னமோ?"

"ரொம்ப நெருங்குகிறாற் போலிருக்கிறது" என்றாள் நாகம்மாள். அவள் குரல் உஷ்ணமாக வெடுவெடுத்தது.

"வேறு ஒன்றும் சொல்லவில்லையா?"

"என்னமோ யோசித்துக் கொண்டிருந்தார்கள். அப்புறம், 'சரி காலையில் பார்த்துக் கொண்டால் போச்சு' என்றார் பெரியவர். உடனே போய்விட்டார்கள்" என்றாள் பாட்டி.

"ஏன் ஸ்வாமி! வாருங்களேன், மாம்பலத்தில் கொண்டுவிடுகிறேன். என்ன என்று விசாரித்துவிட்டால் போகிறது."

"இத்தனை நேரத்துக்கு மேலா! மணி இரண்டாகப் போகிறது. அவர்களே தான் சொல்லிவிட்டுப் போய்விட்டார்களே, காலையிலேயே போய்ப் பார்த்துக் கொள்ளலாம் என்று."

"சரி, அப்படியே செய்யுங்கள் - அப்ப, எங்களுக்கு உத்தரவு கொடுக்கிறீர்களா?"

"இப்பொழுது வெளியூர்ப் பிரயாணம் ஒன்றுமில்லையே...!...உங்களைத்தான் பார்க்கவே முடிகிறதில்லை."

"இன்னும் ஒரு வாரத்துக்கு இல்லை... வாருங்களேன் நாளைக்கு."

"அவரும்தான் இங்கே இருந்து கொண்டு என்ன செய்யப் போகிறார்? அம்மாகூட இல்லை" என்றாள் நாகம்மாள்.

சுப்புசாமிக்கு அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. இத்தனை நேரம் விசாரிக்கத் தவறிவிட்டதை நினைத்து நாக்கைக் கடித்துக் கொண்டார். "மன்னிக்கணும் ஸ்வாமி! எனக்கு முக்கால் வாசி சமயம் எது பேசுகிறது, என்ன பேசுகிறது என்றே புரியாது. அவ்வளவு புத்தி தீக்ஷண்யம். அம்மா காரியம் முடிந்து விட்டதைச் சொன்னாள் சாயங்காலம்."

"ஆமாம். எத்தனை காலம்தான் இருக்க முடியும்? ஜீவன்கள் மேலே பிறந்து கொண்டேயிருக்கின்றன. அதுகளுக்கு இடம் கொடுக்க வேண்டாமோ?"

யாருமே ஒரு நிமிஷம் பேசவில்லை. சுப்புசாமிக்கு இந்த மரியாதையெல்லாம்பழக்கம் இல்லை. கண்ணாடி வழியாக எதிரே தெரிந்த தெருவைப் பார்த்துக் கொண்டே சும்மாயிருந்தார்.

ஒரு நிமிஷம் கழித்து, "சரி, புறப்படுங்கள்" என்றார் அனந்தசாமியே.

"விடப்பா" என்றார் சுப்புசாமி.

வண்டி கிளம்பி விட்டது.

நாகம்மாள் அவர் அம்மாவுக்குச் செய்து போட்டதை யெல்லாம் சொல்லிக்கொண்டே வந்தாள் ஒன்றுவிடாமல். முதல் நாள் கேட்டதை யெல்லாம் தன் விமரிசனத்தையும் சேர்த்துச் சேர்த்துச் சொல்லிக் கொண்டு வந்தாள்.

* * *

காற்றுக்காகச் சுப்புசாமி வாசல் தாழ்வாரத்தில் படுத்து விட்டார். அவருக்கும் இன்னும் தூக்கம் வரும் நேரம் வரவில்லையோ என்னவோ. படுத்தவர் எழுந்து தலைமாட்டிலிருந்த பித்தளைப் பெட்டியிலிருந்து வெற்றிலைப் பெட்டியை எடுத்துத் தபால் ஆபீஸ் பாணியில் சுண்ணாம்பு தடவத் தொடங்கினார். வெளிச்சம் சரியாக இல்லாததைக் கண்டு எழுந்து விளக்கையும் போட்டு விட்டு, மீண்டும் பாயில் உட்கார்ந்து கொண்டார். சிவலைப் போட்டு அரைத்த வெற்றிலையையும் மென்று புகையிலையையும் அதக்கி விளக்கை மீண்டும் அணைத்து விட்டு வந்து அமர்ந்தார்.

தோட்டம் சலசலத்துக் கொண்டிருந்தது. சுவர்க்கோழி ஒன்றிரண்டு 'எங்களுக்குப் பகலும் கிடையாது, இரவுங் கிடையாது' என்று சுருதி சேர்த்துக் கொண்டிருந்தன. இரண்டு கல் தொலைவில் இருந்த கடல் அலையின் உறுமல்கூட இலேசாக அவ்வப்பொழுது கேட்டது. உள்ளே எல்லாரும் உறங்கிவிட்டார்கள். 'கடல், சுவர்க்கோழி, நட்சத்திரங்கள் நாம்-இந்த நாலு பேரும்தான் விழித்துக் கொண்டிருக்கிறோம்.' வாயை மூடின வண்ணம் புகையிலைக் கலவையைக் கடித்து அசை போட்டுக் கொண்டே தமக்குள் சொல்லிக் கொண்டார்.

சட்டென்று இடுக்கிட்டது அவருக்கு. யாரோவருவது போலிருந்தது. **(தொடரும்)**

பிரபல மேற்கிந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர் கான்ஸ்டன்டைனுக்குத் தில்லியில் கிரிக்கெட் சங்கம் அளித்த வரவேற்பின்போது, இந்திய இளைஞர்கள் ரஞ்சி, விஜய்மார்ச்செண்ட், மூஷ்டாக் அலி, திலீப், பட்டாடி ஆகியவர்களைப்போல் ஆடி உலகுக்கு வழிகாட்ட வேண்டும் என்றார். அந்த வீரர்கள் ஆடின விதத்தைபற்றிய ஆவல் இருப்பது இயல்புதானே?

மனம் கவர்ந்த மாவீரர்கள்

ரஞ்சித் சிங்ஜி :

இங்கிலாந்தில் ரஞ்சித் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்த பொழுது ஒரு பந்தயத்தில் நூற்று மூப்பத்திரண்டு ரன்கள் வெகு வேகமாக எடுத்து விட்டு, அருகில் நடந்துகொண்டிருந்த பந்தயத்தைக் காணச் சென்றார். அங்கே அந்த விளையாட்டுக்கு ஓர் ஆள் குறைந்திருந்தது. உடனே அந்த இடத்தில் ரஞ்சி ஆடி சத ஓட்டங்கள் விடுவிடென்று எடுத்தார். பிறகு முதல் பந்தயத்துக்கு வந்தார் ரஞ்சி. இன்னும் அவர் கட்சியினரே மட்டை பிடித்து ஆடிக்கொண்டிருந்தார்கள். உடனே அவர் மூன்றாவதாக வேறொரு விளையாட்டிலும் கலந்து கொண்டு இன்னொரு சத ஓட்டங்கள் எடுத்தார். மூன்று பந்தயங்களில் கலந்து முந்நூறுக்கு மேற்பட்ட ஓட்டங்கள் எடுத்தது அரிய சாதனை. அவர் கனாத்த்ரா வெப்புக்காகப் பழைய பேர்வியன் கோஷ்டிக் கெதிராக ஆடிய பொழுது ஒரு தடவை பந்தை அடித்துவிட்டுப் பன்னிரண்டு ரன்கள் ஓடினார் அன்று அவர் ஆட்டமிழக்காமல் இருநூற்று ஓட்டங்கள் எடுத்தார்.

ரஞ்சி அரச பரம்பரையைச் சேர்ந்தவர். 1872-ம் வருஷம் பிறந்தார். பனி முற்றும் நீங்குவதற்கு முன்பே, இங்கிலாந்தில் விளையாட்டுப் பயிற்சிக்குப் போய்விடுவார் ரஞ்சி. ஸ்டம்புக்குச் சிகரிலுள்ள 'பெயில்ஸ்'ன் மீது ஒரு தங்க நாணயத்தை வைத்து, பந்து வீசும் நிபுணர்களைக் கவர்ந்து, அவர்களைப் பந்து வீசச் சொல்வாராம். பந்து வீசும் நிபுணர் பெயில்ஸை விழச்செய்தால் அந்த நாணயம் அவரைச் சேரும். இந்தப் பயிற்சி வீண் போகவில்லை. லங்காஷயரிலே அபாரப் பந்து வீசும் நிபுணர் ஆர்தர் மோல்ட் பந்தை வீசியபோது பெயில்ஸ் மேலாகப் பந்தை பவுண்டரிக்கு அடித்து, மக்களின் பாராட்டைப் பெற்றார்.

அவர் பந்தை அடிப்பதில்தான் அசகாய சூரர் என்று எண்ணவேண்டாம். பந்தைத் தேக்குவதிலேயும் நெருப்பாக விளங்குபவர். ஒரு விளையாட்டில் 'டுனிகிளிப்' பந்தைப் பலமாக அடிக்க அது ரஞ்சி பக்கம் பாய்ந்து சென்றது. ரஞ்சி ஓடாமல் நிற்பதைக் கண்டு அவர் கோஷ்டி நாயகன் கோபமுற்று, "பந்தை நிறுத்த ஓடுவதற்கென்ன? எதற்காக நிற்கிறாய்?" என்றார். அந்தச் சமயத்தில் ரஞ்சி சிரித்துக் கொண்டே தன் பாக்கெட்டிலிருந்து பந்தை எடுத்துப் போட்டார். அனைவருமே அதிசயப்பட்டனர்.

மூஷ்டாக் அலி

மூஷ்டாக அலி 1914-ம் வருஷம் டிசம்பர் 17-ந் தேதி பிறந்தார். அவருக்கு ஆக்கிரமிப்பாக ஆடி அதிக எண்ணிக்கைகள் எடுப்பதிலே ஆர்வம் கிடையாது. ஒரு சமயம் உலக ரிக்கார்டு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கிட்டிய போது, ஆக்கிரமிப்புடன் ஆடி அந்த உலக ரிக்கார்டை நிலைநிறுத்த வேண்டுமே என்ற எண்ணம் ஏற்படவில்லை. பந்தைப் பிரமாதமாக அடிக்க வேண்டும் என்பதே அவர் குறிக்கோளாயிருந்தது. மான்செஸ்டரில் 1936-ம் வருஷம் நடைபெற்ற டெஸ்ட் பந்தயத்தில் ஆலனும், பார்க்ஸும் பந்தை வீசும்பொழுது மைதானத்துக்குப் பாதியளவு வந்து முஷ்டாக் அலி பந்தையடிக்கக் காட்சியைக் கண்டு ஆங்கில கிரிக்கெட் ரசிகர்களே அயர்ந்தனர்.

திலீப் சிங்ஜி

ரஞ்சித் சிங்கின் மருமகன். இவர் 1905 ஜூன் 13-ந் தேதி பிறந்தார். இவர் பந்தை அடித்து விட்டு ஓடுவது ஓர் அரிய கலையை நிலைப்படுத்தும். ஆஸ்திரேலிய கிரிக்கெட் கோஷ்டிக்கெதிராக முதல் டெஸ்டிலேயே சதமெடுத்தார். ஒரே நாளில் ஸஸெக்ஸ் கோஷ்டிக்கு முந்நூற்று முப்பத்திரண்டு ஓட்டங்களெடுத்தது இவர் திறமைக்குச் சான்று.

பட்டாடி

இந்திய கோஷ்டியின் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் அயல்நாடுகளுக்கு ஆடச் செல்வது அபூர்வம். அதிலும் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியிலேயே ஓர் ஆட்டக்காரராகப் பட்டாடி தேர்ந்தெடுக்கப்பட்டாரென்றால் அவர் ஆட்டத் திறமையை நிர்ணயித்து விடலாம். பட்டாடி 1910ல் மார்ச் 17ந் தேதி பிறந்தார். இவர் 1946ல் இங்கிலாந்துக்குச் சென்ற இந்திய கோஷ்டியில் கலந்துகொண்டார்.

விஜய் மார்ச்செண்ட்

1946-ம் வருஷம் மழைக் காலத்திலே இங்கிலாந்தில் இந்தியக் கட்சி ஆடும்படியிருந்தது. மழையினால் மைதானம் ஈரமடைந்து ஆடுவதே கஷ்டமாயிருக்கும். மற்ற இந்திய ஆட்டக்காரர்களுக்குப் பத்து ரன்கள் எடுப்பதே பிரம்மப் பிரயத்தனமாக இருந்தபோது மார்ச்செண்ட் லெஸ்டர்ஷயரில் நடைபெற்ற ஆட்டப் பந்தயத்தில் இரண்டு இன்னிங்ஸிலும் தோல்வியடையாமல் நூற்று அறுபத்தெட்டு ஓட்டங்கள் எடுத்தார்.

விஜய்மார்ச்செண்ட் 1911-ம் வருஷம் அக்டோபர் 12-ந் தேதி பிறந்தார். மார்ச்செண்டுக்குக் கிரிக்கெட் ஆட்டத்திலுள்ள ஆசை விவரிக்க வொண்ணாதது. அவர் விளையாடுமிடங்களுக்குத் திரைப்படக் காமிராவையும் எடுத்துச் செல்வார். அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர், விஜய் ஆடும்பொழுது படம் எடுத்துக் கொண்டே இருப்பார். இது எதற்குத் தெரியுமா? தாம் ஆடும் பொழுது ஆட்டத்திலே எங்கெங்கே தவறு செய்கிறோம் என்பதைப் பின்னால் தெரிந்து நிவர்த்தி செய்வதற்குத் தான். இத்தனை ஆர்வமிருந்தால் ஆட்டம் ஏன் சோபிக்காது?

—குண்டுமணி

அஞ்சறைப் பெட்டி





"ஒரு மனிதன் தன் வாழ்நாளில் நன்றாகச் சம்பாதித்தான்...கிடைத்ததை ஒரு துணியில் முடிந்து எங்கேயாவது புதைத்து வைப்பான். அவனுக்கு வயது முதிர்ந்து வந்தது.... கிழவன் (யமனுடன் போராடிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் அவனுடைய நண்பனொருவன் கிழவன் பணத்தைத் தர்மத்தில் செலவிடாமலிருந்ததைக் கண்டித்துத் தர்மம் செய்யவேண்டுமென்று இடித்துரைத்து வந்தான். அவன் வார்த்தைகளால் கிழவனுக்குத் தர்மம் செய்யவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. தான் எங்கேயோ சுவரில் ஓரிடத்தில் புதைத்து வைத்திருந்த சிறு பொன் முடிப்பின் ஞாபகம் அவனுக்கு வந்தது. அதை எடுத்துத் தக்கபடி தருமம் செய்யவேண்டுமென்ற கருத்திருந்தும் தனது எண்ணத்தை வெளிப்படையாகச் சொல்லவும் முடியாமல் அவன் வாய் அடைத்து விட்டது....மிகவும் கஷ்டப்பட்டு, 'இவ்வளவு பெரிய பொன் முடிச்சு' என்பதைத் தன் கையினால் சுவரைக் குறிப்பிட்டு ஜாடை காட்டினான்....அப்போது அவன் குமாரன் 'தெரிந்துவிட்டது. இவருக்குப் புளிப்பு விளாங்காயின்மேல் மிக்க பிரியம்; அதைக் கேட்கிறார்...' என்று ஓடினான். அவன் திரும்புவதற்குள் கிழவன் உயிர் போய் விட்டது....

"இப்படிக் கடைசி காலத்தில் தர்மம் செய்ய எண்ணியவர்கள் எண்ணம் நிறைவேறுவதில்லை. ஆகையால் நாம் போகும் மார்க்கத்துக்குப்பயன்படும் தர்மத்தை முன்பே செய்ய வேண்டும்...."

—தமிழ்த் தாத்தா.

'தாவர சாஸ்திரம்' படித்துப் பரீட்சை எழுதிப் பாஸ் செய்து விட்ட அனசூயாவுக்கு ஆனந்தத்துடன் கொஞ்சம் ஆணவமும் இருக்கத்தான் செய்தது.

பெற்றோர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி அத்தையைப் பார்த்து விட்டு வர அவள் கிராமத்துக்குப் புறப்பட்டாள்.

மறுநாள் பட்டிக்காட்டுக் காட்சிகளைக் கண்குளிரப் பார்த்துக் கொண்டிருந்தாள். இயற்கை எழில் கொஞ்சும் கிராமப்புறத்தில் பவனி வரும் ஒரு வன தேவதையாகத் தன்னைப் பாவித்துக் கொண்டாள்.


தன் அருகிலிருந்த குடியானவனை மட்டம் தட்ட வேண்டும் என்ற ஆசை அனசூயாவுக்கு.

"ஏனப்பா! இந்த நெல் வயலெல்லாம் ரொம்ப ஜோராகத் தான் இருக்கிறது பார்ப்பதற்கு. ஆனால் நெற்கதிர் ஒன்றைக் கூடக்காணோமே? இந்த வருஷம் விளைச்சல் சுகமில்லையோ? இவ்வளவுதானா உங்கள் சாமர்த்தியம்?" என்று கிண்டலாகக் கேட்ட அவள், அவன் திடுக்கிடுவதைக் கண்டு களிப்புற்றாள்.

"அம்மணி! நெற்கதிர்கள் உங்கள் கண்களுக்குத் தென்படாதிருக்கப் பல காரணங்கள் இருக்கலாம். அறுவடைக்காலம் நெருங்காதிருக்கலாம். அல்லது அறுவடை முடிந்து போய்விட்டிருக்கும். சில சமயங்களில் வெள்ளத்தால் வயல்களுக்குச் சேதம் உண்டாகும். பல தருணங்களில் பூச்சி அரித்துப் பயிர் பாழாகும். ஆனால் இங்கே நீங்கள் நெற்கதிர்களைக் காணாததற்குவேறு ஒரு முக்கியகாரணம் உண்டு. இது சோளக்கொல்லை" என்றான் குடியானவன்.







தீரர் சத்தியமூர்த்தி தீர்க்கமாக ஆலோசித்து ஓர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொண்டு விட்டால் கடவுளே வந்து கேட்டாலும் அதை மாற்றிக்கொள்ள மாட்டார். 1941-ல் சிறையிலிருந்து வெளி வந்ததும் காங்கிரஸ் திட்டத்தை மாற்ற வேண்டும் என்று பிரசாரம் செய்யத் தமக்குப் பேச்சு சுதந்திரத்தைக் காந்திஜியிடமிருந்து கேட்டு வாங்கிக் கொண்டவராயிற்றே அவர்!

அவன் தோல் வெளுப்பாம், என் தோல் கறுப்பாம் என்ற பல்லவியைப் பிரசங்கங்களில் கையாண்டுகேட்பவர்களுக்கு ஆவேச மூட்டி வந்த அவர், ஒரு சமயம் மன்னார்குடியில் மகாத்மாவின் மூவகைப் பகிஷ்காரத் திட்டத்தைத் தாக்கிப் பேசிய போது 'காந்தி சொல்கிறான்' என்றுவிட்டார். கூட்டத்தில் ஒரே பரபரப்பு. 'ஏக வசனத்தில் பேசாதே!' என்ற கூச்சல்.

உடனேசத்தியமூர்த்தி, "ராமன் காட்டுக்குப் போனான் என்றும் கண்ணன் வெண்ணெய் திருடினான் என்றும் கூறுகிறோம். அதில் தவறென்ன? காந்திஜியையும் அவர்களைப்போலவே ஓர் அவதார புருஷனாகக் கருதுகிறேன் நான்" என்றார். இதைக் கேட்டதும் கூட்டத்திலே ஒரேயடியாகக் கரகோஷம் எழுந்தது.

ரொம்பவும் சஞ்சலப்பட்டுக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தார் தீரர் நேதாஜி! ஒரு பத்திரிகையை என் பக்கமாக அவர் எறிந்தார். 'டோகியோவிலிருந்து பாங்காக் செல்கையில் விமான விபத்தில் நேதாஜி மாண்டார்' என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருந்தது. "அதனாலென்ன? நீங்கள்தான் இங்கே பத்திரமாக இருக்கிறீர்களே?" என்றேன்.

"என் அம்மா! அவள் இதைச் செவியுற்றால் என்ன பாடுபடுவாள்? அவளுக்குச் செய்தி அனுப்பக்கூட முடியாதே." வருந்தினார் நேதாஜி.



ஆம், நிஜமாகவே அவருக்கு ஒரு சங்கடமான நிலைதான். ஆசியாவில் அவர் இருப்பதாய் அகில உலகமும் எண்ணிக் கொண்டிருக்கையில் அவர் ஜெர்மனியில் இருந்தார். ஜெர்மானிய அல்லது இத்தாலிய செய்தி ஸ்தாபனம் மூலமாகத் தாம் உயிருடன் இருப்பதாக அறிக்கை விட்டிருந்தால் அவர் ஐரோப்பாவில்உள்ளதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள் பிரிட்டிஷார். நேதாஜி அவர்கள் வலையில் விழவில்லை. மனம் வெகுவாகப் புண்பட்ட போதிலும் பல்லைக் கடித்துக் கொண்டிருந்துவிட்டார்!


—என். ஜி. காண்டிலே

"கரையில் எடுத்து எறியப்பட்ட மீனைப் போல அவன் துடித்தான்" என்று கதாசிரியர்கள் எழுதுவதைப் படிக்கிறோம். அப்போது கதாநாயகி படும் வேதனையைத் தெளிவாக நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் கரையில் எடுத்து எறிந்து விட்ட போதிலும் கவலையற்றிருக்கும் ஒரு வகை மீனும் உண்டு. ஆஸ்திரேலியாவில் காணப்படும் இத்தகைய மீன்களை நுரையீரல் மீன் (Lung Fish) என்று அழைக்கிறார்கள். காற்றுப் பை ஒன்று இவற்றுக்கு உண்டு. நீர் அற்ற ஒரு நிலையிலும் இம் மீன்கள் அந்தக் காற்றுப் பையிலிருந்து பிராணவாயுவைக் கிரகித்துக் கொள்கின்றன.

உயிரினங்களின் வளர்ச்சியைப் பற்றி ஆராயும் போது, நீரினங்களிலிருந்து தான் பூமியில் வாழும் சகல ஜீவராசிகளும் காலக்கிரமத்தில் உருமாறித் தோன்றின என்ற தத்துவத்துக்கு இத்தகைய மீன்கள் சாட்சி கூறுகின்றன.

ஏரி, குளங்கள் வற்றி விட்ட சமயங்களில் சில மீனினங்களிடையே உயிர் வாழ நடைபெற்ற எண்ணற்ற போராட்டங்களின் விளைவாக இத்தகைய காற்றுப் பைகள் உருவாகி இருக்கவேண்டும் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.



கவுரவத்தை கொடுக்கக் கூடிய துணிகள்



டெட்டினுல் சலவை செய்யப்பட்டதே



- **டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசமாக தோற்றமளிக்கும்**
  டெட்டின் சிறந்த சுத்திகரிப்புச் சலவை உங்களுடைய ஆடைகளை புத்தம் புதியது போல் பிரகாசிக்கச் செய்கிறது.

- **டெட்டினுல் சலவை செய்யப்பட்ட துணிகள் மிக வெண்மையாக தோற்றமளிக்கும்.**
  டெட் ஆடைகளை சுத்தமாகவும், பிரகாசமாகவும் வெளுக்கும் சிறந்த பரிசுத்தகாரணி. டெட்டினுல் துவைக்கப்பட்ட துணிகளுடன் நீலத்தையோ அல்லது வெண்மையாக்கும் பொருளையோ சேர்க்க வேண்டிய தேவையில்லை. காரணம் கண் கவரும் வெண்மையை தரும் பொருள் டெட்டில் அடங்கியுள்ளது.

- **டெட்டினுல் சலவை செய்தல் என்பது நவீன முறையில் சலவை செய்யப்படுவதாகும் என்பது பொருள்.**
  வெந்நீரிலும், மென்னீரிலும் டெட்டை உபயோகித்து நன்கு சலவை செய்யலாம். டெட் அபரிமிதமாக நுரை தருகிறது. காட்டன், சில்க், ரேயான், கம்பளி, டெரிலீன் அல்லது கலர் துணிகள்-எல்லா விதமான ஆடைகளுக்கும் டெட்டை தாராளமாக உபயோகிக்கலாம்.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்-1.

அழுத்தக்காரி

கோமதி நாகராஜன்



கூடத்து மூட்டின் மீது களைத்துச் சாய்ந்தார் ஈசுவரன். ஏந்திழைற்போலப் பாகீரதி வழக்கமாக ''வெடுக்''கென்று உட்காரும் இடம் அது. இப்பொழுது அந்த இடத்தை வெற்றிடமாக்கி, அவள் மறைந்து பதின்மூன்று நாட்களாகின்றன. அவளது நினைவுகளின் சங்கமம் சிந்தனையோடு கலந்த நிலை புறப் பார்வையையே மறைத்து விட்டதோ?

கூடத்தின் மத்தியிலே பனிச்சென்று பாய் விரித்தாற்போல் கோல சித்திரத்தின் முன்பு, சிரசிலே பூவும், கொத்துக் கொத்தாகக் குங்குமத்தையும் பூட்டிக்கொண்டு, பழுத்த சுமங்கலிபோல ஒளிர்ந்த தீபத்தை உற்று நோக்கினார். ஆடி வளைந்த சுடருக்குள் பாகீரதியின் அடக்கமான புன்னகை!

''தெய்வமாகி அவள் எல்லாரையும் வாழ்த்த வேண்டும். அக்ஷதையும் மலரும் போட்டு நமஸ்கரியுங்கள்'' என்ற முதியவரின் குரல் செவிக்குள் ஆர்க்கவில்லை. ஒன்றன்பின் ஒன்றாகப் பாகீரதியின் நிழல்கள் அவர் பாதங்களின்மீது படிந்தன.

கைகள் உயர்ந்து அக்ஷதை, புஷ்பத்தை வர்ஷித்தனவே தவிர, உதடுகளினின்றும் ஆசிகள் தெறித்து ஒலிக்கவில்லை. நமஸ்கரித்தெழுந்த மக்களின் முகங்களிலே தாயைப் போல் அழுத்தம் முத்திரை யிட்டிருப்பதாக உணர்ந்தார். கடைசிவரையில் பூட்டிய அந்த அழுத்தத்தின் பின்னே என்ன இருந்தது? இந்த ஒரு நினைவே அவரைக் குலுக்கியது

''அப்பா, சாப்பிட வாருங்கள்!'' மீனுவின் அன்பு அழைப்பு குழைந்து வந்தது.

''எனக்குப் பசியில்லை. சற்று போகட்டும்.''

''மீனு! அப்பாவுக்கு ஒரு தம்ளரில் பாயசம் கொண்டு வந்து கொடு. களைப்பு அடங்கும்'' என்று கூறிய வாசுவைத் திடுக்கிட்டு நோக்கினார். பாகீரதியின் குரல் எங்கிருந்து ஒலிக்கிறது? நாள் கிழமை வந்தால் பாகீரதி உழைத்த களைப்பை மறைத்தபடி அவரது முன்பசியாற்ற இப்படித்தான் உபசரிப்பாள். இன்றும் அதே பாகிதான் தன் உதிரப் பொறிகளின் உள்ளுணர்வுகளோடு கலந்து போய் உபசரிக்கிறாளோ?

சிந்தனையின் களைப்பு புலன்களைக் கட்டப் பொத்தென்று ஆசனத்தில் சாய்ந்தார்.

''மீனு! அந்த மாலையை எடுத்து வா. அம்மாவின் படத்துக்குப் போடலாம்!'' என்றான் வாசு.

''அண்ணா! அந்த ஆறுமுகன் படத்தின்மீது அம்மாவுக்குக் கொள்ளைப் பிரியம். அதற்கு மாலை வாங்கிவர மறந்து விட்டாயா?'' என்றாள் மீனு.

பாகியின் படத்தை நோக்கி ஆவலோடு உயர்ந்த வாசுவின் கரங்கள் தாழ்ந்தன. அடுத்த நிமிடம் வளைந்த ரோஜா ஹாரத்துக்கு நடுவே ஷண்முகக் கடவுள் கம்பீரப் புன்னகை செய்தார்.

''அம்மாவும் இதைத்தான் விரும்புவாள். இத்தனை படங்களிலே அவளுக்கு இதன்மீது ஏன்தான் அலாதிப் பிரியமோ?'' மீனு பெருமிதத்தோடு சலித்துக் கொண்டாள்.


''தன் உரிமையைச் சரிசமமாக வள்ளிக்கு வழங்கிய தெய்வயானைமீது அவளுக்கு மட்டற்ற பக்தி இருந்ததில் என்ன ஆச்சரியம்?'' என்றவாறு வாசு உள்ளே சென்றான். வாசுவின் வியாக்கியானம் அவரது மனக் கவாடத்தைத் தள்ளிக்கொண்டு உள்ளே பாய்ந்தது. பாகியின் மனத்துக்குள் திரையிட்டு வைத்திருந்த அந்தரங்கம் இதுதானா?

இறந்தவர்களுக்குத்தான் நெஞ்சிரல் உண்டென்பார்கள். ஆனால் அந்த நெஞ்சிரலை அவர் இதயத்திலே சுமையாக்கி விட்டு அவள் மறைந்து விட்டாள். துரு ஏறிக் கிடந்த நெஞ்சக் கதவை உடைத்துத் திறந்து, அந்தப் பெண் குரலின் எதிரொலியைக் கேட்டிருந்தால் இவ்வளவு வேதனை ஏற்பட்டிருக்குமா?

பத்தொன்பது வருடங்கள் அதை மனத்திலே போட்டு மூடியிருந்ததில் கூட அவர் வியப்படையவில்லை. பெண்மையின் பலவீனம் என்று அலட்சியமாக இருந்திருக்கிறார். தவறி விழும் நீர்த்துளிகளை உதறியெறியும் தாமரை இலைபோல், சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றையும் ஒதுக்கித் தள்ளிய அனுயாசமான மென்மை அவளுக்கே உரியது!

மரணத்தின் வாசற்படியிலே, கடைசிமூச்சு பிரியும்பொழுது மனச்சாட்சியின் வாதனை அவரைப் படுக்கை அருகே தள்ளியது. வாடிய பூச்சரம் போல் நழுவிக் கிடந்த கரங்களை அன்புடன் பற்றிக் கொண்டார். உடம்பில் உள்ள உயிர்ச் சக்தி அனைத்தையும் பார்வையிலே திரட்டி யாசித்து வினவினார். 'பாகி! கடைசியாக உன் மன





யிலே ஏதேனும் ஆதங்கம் இருந்தால் சொல்லி விடு.''

இறுக மூடிய உதடுகள் விரிந்தன.'' இத்தனை வருடங்களும் உங்கள் பொறுப்புத்தான். இனி வருகின்ற நாட்களும் உங்களுடையவை'' என்றாள் புன்னகையோடு. முப்பது வருடங்கள் முழு நிறைவோடு வாழ்ந்து முடித்த பூரணத்துவம் பொலிந்த புன்னகை அது !

கன்னெஞ்சத்தின் கலக்கம் கண்களில் கொப்புளிக்க, அவர் குமுறினார். '' இல்லை பாகி, உன்னிடம் உடைத்துக் கேட்க எனக்குத் தகுதியில்லை. ஆனால் எனக்காகவாவது நீ கேள் '' என்றார் துடித்தவாறு. கேள்விக்குரிய பதிலைப் பெறுதவரையில் நெஞ்சினின்றும் ஏதோ இழிந்து விழுவது போன்ற ஸ்தூல உணர்வு கண்டத்தை அடைந்தது.

வள்ளுவர் மனைவி வாசுகிகூட வருடக் கணக்கிலே இதயத்திலே விசுவரூபமாக வளர்ந்த சங்கையை இறுதி மூச்சிலே உதிர்த்து நெஞ்சிரலைத் தணித்துக் கொண்டாள் ! '' பாகி, வள்ளுவர் போல் நான் வாழ்ந்து காட்டவில்லை. ஆனால் வாசுகி அம்மையைப் போல் நீயாவது இறுதி ஆசையைத் தெரிவிக்கக் கூடாதா ?'' அவரது மனக் கதறலுக்கு விடை சிறுக்காமலே அவள் ஒரு படி உயர்ந்து விட்டாள்.

அருகே வந்த மீனுவிடம் ஆறுமுகன் படத்தைக் கொண்டு வரச் செய்து, இரண்டு சரம் பூவைச் சூட்டினாள். அவன் கோடிட்டுக் காட்டிய ஆதங்கத்தை உணர்வதற்கு முன்பே கண்கள் மூடிவிட்டன. ஆயுள் முழுதும் மனச்சாட்சியின் வேதனையை அவருள் முத்திரையிட்டு விட்டு, அவள் மறைந்து போய் விட்டாளே !

பொறுமையும், அழுத்தமும் இழையோடிய பாவு அவள் மனம். பெண்களுக்கே அபூர்வமான அழுத்தம். ஆண்மகனென்ற கௌரவம் தடுத்திருக்காவிட்டால்....? அப்படி யொன்றும் அவர் பம்மிப் பதுங்கவில்லை. அவளாகவே வினவ வேண்டுமென்று அவர் ஏற்படுத்திக்கொடுத்த சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனை ?

புடவை எடுப்பதிலிருந்து, நகை செய்வது வரை அச்சுப் போல் ஜோடி ஜோடியாகத் தான் செய்தார். பெரியவன் கையிலிருந்து தான் ரொக்கமாகப் பணம் வாங்கி அனுப்புவார். '' இவை யாருக்காக ?'' என்று கேட்காவிட்டாலும் ' அவை எங்கே என்றாவது கேட்க மாட்டாளா ?' என்று தவிக்கும் மனம். முடிவு வரை முள்மண்டிய பாதையிலே நடப்பவன் போல் எத்தனை கவனமாகக் காலடிகளைப் பதித்து, சாதுரியமாக நடந்து, எல்லையை அடைந்து விட்டாள் !

அவரது கவனம் எதிரே யிருந்த சைக்கிள் மீது பாய்ந்தது. ஒரு சக்கரம் பழுதாகி மூலையிலே கிடக்க, விரைந்து களைத்த முதியவரென அது நொடித்து நின்ற காட்சி அவரைக் கடந்த காலச் சுவட்டுக்குள் இழுத்துக் கொண்டு சென்றது.

அந்தத் துவிச்சக்கர வண்டிக்கும், அவர் வாழ்க்கைக்கும் ஏதோ தொடர்பு இருந்திருக்க வேண்டும். இல்லையெனில் இல்லற யாத்திரை தொடங்கிய முதல் மாதமே அந்த வண்டியும் அவரை வந்து அடைந்திருக்குமா? அவரைப் போல் வாழ்க்கை யாருக்குக் கிட்டியிருக்கும் ? உள்ள நேரத்தையெல்லாம் போலி நாகரிகத்துக்கும், சூழ்நிலைக்கும் இரையாக்கி விட்டு, ஏதோ குறிப்பிட்ட கடமைக்கு வாழ்கிறார்களே, இக்காலத்துப் பெண்கள், அது போலவா ? பாகீரதி கொள்ளை கொள்ளையாக அள்ளிக் கொடுத்த அத்தனை இன்பமும், பரிவும் இன்ப ஊற்றாகப் பெருக்கெடுத்தோடிய காலம்.

ஊருராகச் சுற்றுப்பயணம் செல்லும் வேலை. வாகன வசதி முறையாக இல்லாத கிராமங்களைச் சுற்றி வருவதற்குள் கொப்புளித்து விடும் பாதங்களைக் கண்டு கண்ணீர் விட்டு விடுவாளே பாகீரதி.

வீட்டுக்குள் நுழையும்பொழுதே வராந்தாவில் நிறுத்தி வைத்திருந்த சைக்கிள் வண்டியைக் கண்டு வியப்புற்றார். கண்ணைப் பறிக்கும் புத்தப் புது வண்டி !

''யார் சொத்து இது?''

''எல்லாம் நம்முடையதுதான்!''

''இது என்ன புது ஏற்பாடு?''

''ஆடிக்கு வைரபேசரி வேண்டாமென்று அண்ணாவை எனக்கு இதை வாங்கி அனுப்பச் சொன்னேன்'' என்றாள் பெருமிதத்துடன்.

"பேஷ். உனக்கு அனுப்பி வைத்தானா? குஷாலாக ஏறி இரண்டு சுற்றுச் சுற்றி வா" என்றார் கேலியாக.

"ஐயே பேச்சைப் பார். எங்கே தெருக் கோடி வரை போய்ப் பாருங்கள்" என்றவள் கொடிபோல் தூணைச் சுற்றி அணைத்தபடி நின்றுகொண்டு அவர் பவனி வருவதை எத்தனை ஆதுரமாக நோக்கினாள்? அசட்டுப் பெண்? எந்த வேளையில் அதன்மீது அமர்ந்தாரோ அவரது பிரயாணமே துவிச்சக்கரத்தின்மீது அமைந்து விட்டது.

இரண்டாம் பிரசவத்துக்காகப் பாகி பிறந்தகம் போக அன்று மாலை நல்ல வேளை பார்த்திருந்தது. அசாதாரணப் பதற்றம் அவரை இயக்கியது. சைக்கிளின் அசுரகதியில் பாதையின் நொடிகூடச் சரியாகப் புலப்படவில்லை. இடைவழியில் ஏதோ இடறினாற் போல் உணர்வு! பாதையிலிருந்து பந்து போலத் தூக்கியெறியப்பட்டார். அந்தச் சம்பவந்தான் அவரை முறையான பாதையினின்றும் தூக்கி எறிந்து விட்டதோ?

அவர் நினைவுபெற்றபொழுது வயதான ஒரு மாதும், இளமங்கையும் நின்று கொண்டிருந்தனர். சூடான பாலைக் கொடுத்து உபசரித்தாள் கிழவி. விலாவிலும், இடுப்பிலும் ஊமை அடி பட்டிருந்தது. பாகியின் ஞாபகம் முன்னே தள்ளியது.

"மிக்க நன்றி. நான் வருகிறேனம்மா." அவரது பார்வை நழுவிப் பெண்ணின்மீது லயித்தது. யுகம் யுகமாக உறவாடியது போன்ற நெருக்கம் அவளது அதரங்களுடே குமிழியிட்டன. அணைபோட முடியாத வெள்ளத்தின் கம்பீரம் பெருக்கெடுக்கும் தோற்றம்! வேரோடு மன விருட்சத்தையே ஆட்டி அலைக்கழித்து விடுமோ? அவர் விடைபெற்றுக் கொண்டு விட்டார்.

அதற்குப் பின்னர் அந்த வழியாகச் சென்றால்கூட ஏதோ ஊடுருவித் துளைப்பது போன்ற குறுகுறுப்பு எழும். அன்று வழி மறித்து உள்ளே அழைத்துச் சென்றாள் கிழவி. செவ்வாழைக் குருத்துப் போலச் சிலிர்த்து நின்றாள்.

ஊஞ்சலில் அமர்ந்தபடி மெல்ல ஏறிட்டு நோக்கினார். கிழவியின் உபசரணைகள் வேம்பாகக் கசந்தன. 'என்ன பாட்டி தடபுடல் படுகிறதே? பேத்திக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதோ?" என்றார்.

"உங்கள் ஒத்தாசையில்லாமலா?" கிழவி தயங்கினாள். "ஆனால் இப் பெண்தான் பிடிவாதம் செய்கிறது" என்றாள்.

"என்ன...?"

"உங்களைத்தான் மணந்து கொள்வாளாம்..." தடம் புரண்ட வண்டிபோல் அவர் தடுமாறி விழுந்தார். "விசுக்"கென்று அவர் எழுந்த அதிர்ச்சியில் ஊஞ்சல் அதிர்ந்தது.

"பாட்டி! நான் மணமானவன். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை. உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள்" என்று வாசலை நோக்கி நடந்தார்.

"எல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டோம். ஆனால் மைதிலி தன்னையே அழித்துக் கொண்டு விடும் பிடிவாதக்காரி..."

அவர் பெடலை மிதித்துச் சைக்கிள் மீது ஏற முயன்றார். "அம்மா! சக்கரங்களைப் பூட்டுவதற்கும், சுழற்றுவதற்கும் இதுபோல் நான் ஓர் இயந்திரமல்லவே!" என்றார் உஷ்ணமாக.

சைக்கிளின் பிடிமீது மெல்லிய கரங்கள் படிந்தன. "இந்த இயந்திரத்துக்கு இரு சக்கரங்கள் இசைய அமைந்திருப்பதால், உங்கள் பிரயாணத்தின் உல்லாசம் குறையவில்லையே?" என்ற மைதிலியின் முகத்தில் மகிழ்ச்சி அரும்பு கட்டியது. மனக் குடலைக்குள் கொட்டிக் கிடந்த வண்ண மலர்களை அவரது காலடியிலே கொட்டிய அந்த வினாடியே அந்தப் பலவீனத்துக்கு அவர் அடிமையாகி விட்டார்.

சட்டத்தின் தடையில்லை. பழைய நினைவுகளினின்றும் துண்டித்துத் தன் வசப்படுத்திக் கொள்ளவில்லை மைதிலி. கணவனின் புதிய தொடர்பைக் கண்டு சந்தேகத்தையோ, வெறுப்பையோ வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை மூத்தவள்.

மைதிலியின் மனம் உணர்ச்சிகள் பாயும் காட்டாற்று வெள்ளம் தனது உரிமைகளைப் பகிர்ந்து வழங்கிய மூத்தாளிடம் அவளுக்கு மட்டற்ற அன்பு. "அக்காவுக்குத் தெரியா





மேட்டூரில் நிறுவப்பட்டிருக்கும் பிரும்மாண்டமான அலுமினியத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினார் திரு லால்பகதூர் சாஸ்திரி. மத்திய சர்க்கார் உள்நாட்டுத்துறை அமைச்சருடன் கம்பெனி நிர்வாகிகளும் தமிழ்நாட்டு அமைச்சர்களும் காட்சி தருகிறார்கள்.

மலா இருக்கும்? என்னைப் பற்றிக் கேட்டிருக்கிறாரோ?'' என்பாள் மைதிலி. ''உன்னைப் போல் அசட்டுப் பிடிவாதமும், பதற்றமும் அவளுக்குக் கிடையாது'' என்பார்.

நேருக்கு நேர் ஏற்பட்ட சந்திப்பை அவள் எப்படி ஒதுக்கினாள்? பாகி, குழந்தைகளுடன் பின் வரிசையில் அமர்ந்து சர்க்கஸ் வேடிக்கைகளை ரசித்துக் கொண்டிருந்தார் ஈசுவரன். முன் வரிசையில் பட்டுப் புடவை சரசரக்க மைதிலியைக் காணவும் அவர் மனம் திடுக்குற்றது. மறுவினாடியே மகிழ்ச்சி தலை தூக்கியது. இந்தச் சந்திப்பிலாவது அறிமுகம் ஏற்பட்டு அவரது அகப் போராட்டத்துக்கு முடிவு ஏற்படக் கூடாதா?

மைதிலியின் வதனம் பூரிப்பால் மலர்ந்தது. சந்திப்பினால் ஏற்பட்ட பதற்றம் பார்வையிலே தெரிக்க, இரண்டு கலர்ப் புட்டிகளை உடைத்துக் குழந்தைகளுக்கு அனுப்பினாள்.

ஈசுவரன் தவிப்போடு பாகியை நோக்கினார். ''அவள் யார்?'' என்று கேட்கப் போகிற அந்த வினாடிக்காக எத்தனை வருடங்கள் தவம் கிடந்தார்? அந்த வினாடி....இதோ....பாகியின் பார்வை எங்கேயோ ஊடுருவியது. புலப்பாடுகளின் சாளரங்களையே இழுத்துத் தாழிட்டு விட்டவள்போல அசையாது உட்கார்ந்தாள். எந்தச் சலனத்தையும் பிரதிபலிக்காத முகமூடி அவள். ஆட்டம் முடிந்ததும், குழந்தைகளை அழைத்துக் கொண்டு நறுக்கென்று வெளியேறி விட்டாள்.

ஒற்றைச் சக்கரம் போலக் கழன்று அவள் பிரிந்துவிட்டாளோ! ''பாகி! இத்தனை அழுத்தத்திலும் என்னை நீ வதைத்திருக்கக் கூடாது?'' ஈசுவரன் துயரத்தால் துடித்தார்.

இரண்டு சக்கரங்களையும் இழந்து மூலையிலே அனாதையாகக் கிடந்தது அந்தத் துவிச்சக்கர வண்டி. அதே ஆசனத்தில் தான் சாய்ந்து கிடந்தார் ஈசுவரன்.

பாகி விடுதலை பெற்று முழுதாக ஆறு மாதங்கள் முடியவில்லை; பேசி வைத்தாற் போல மைதிலியும் கிளம்பி விட்டாள். பாகியின் மௌன யாத்திரை அவரையே கலக்கி விட்டது. மைதிலியைக்கூட மரணப் படுக்கையில் உதாசீனம் செய்து விட்டார். வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது. பெட்டி, படுக்கையுடன் வாசு இறங்கினான். ''வாசு! இது என்ன திடீர்ப் பயணம்?''

''அவசர காரியமாக வந்தேன். இன்னும் இரண்டு நாட்களில் புறப்படுகிறேன். அப்பா, நீங்களும் இனி என்னோடு கிளம்பவேண்டும்!''

''யோசித்துச் சொல்கிறேனே வாசு.''

''யோசனை எதற்கு அப்பா? இனி இங்கிருக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை. சில்லறைச் சாமான்களை விற்றுவிட்டு, வீட்டை வாடகைக்கு விடவேண்டியது தான்'' என்றான் வாசு.

வாசு உள்ளே சென்ற சில நிமிடங்களில் கணபதி உள்ளே வந்தார். அவரைக் காணவும் உணர்ச்சிகள் புரண்டு வந்தன. ''என்ன, கணபதி! காரியங்கள் முடிந்து விட்டனவா?''

''உம்...''

''பாவம் மைதிலி! இறுதி யாத்திரை உரியவர் கையால் கிடைக்கவில்லையென்ற குறையோடு போயிருப்பாள்.''

''அவளுக்கு என்ன குறை? பத்து மாதங்கள் சுமந்து பெறாவிட்டாலும், மகனே வந்து கடைசிக் காரியத்தை நடத்தி விட்டானே'' என்றார் கணபதி.

அதிர்ச்சியுடன், ''யார் வாசுவா?'' என்றார்.

''ஆமாம், அப்பா! அம்மாவின் கடைசி ஆசையும், சித்தியின் கோரிக்கையும் அது தான்'' என்றான் வாசு சலனமின்றி. அவனது நெடிய உருவிலே பாகி, மைதிலியின் உருவங்கள் மாறி மாறித் தோன்றின. பாகியைப் போல் மைதிலியும் அழுத்தக்காரிதான்! மனப் போராட்டம் முற்றுப்பெற்ற உயிர்ப்பு பெருமூச்சாக வெடித்து வந்தது.

வாசு உள்ளே வந்து சைக்கிளையும் அதன் பாகங்களையும் எடுத்தான்; அவர் மனம் குலுங்கியது. ''வாசு, அதை என்ன செய்யப் போகிறாய்?''

''வெறும் உடைசல். பழைய விலைக்குத் தள்ளி விடலாமே?''

''வேண்டாம் வாசு. ஒரு காலத்தில் அந்த இரு சக்கரங்களின் சுழற்சியிலே, உல்லாச பவனி வந்த நினைவுகளுடன் அந்த இயந்திரம் மூலையிலே உறங்கட்டும்!'' என்று கலங்கிய தந்தையை அனுதாபத்தோடு நோக்கினான் வாசு. அந்தத் துவிச்சக்கர வண்டி மீண்டும் தன் யதாஸ்தானத்தைச் சரணடைந்தது.

நாவல் பிறக்கிறது

நான் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும் போதே எழுத்தாளனாகி விடுவது என்பது நிர்மானமாகிவிட்ட விஷயம். இந்த நிர்மானத்தை என்னிடம் வளர்த்து விட்டவர் தகப்பனார்.

என் தந்தையே இலக்கியாசிரியனாக வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் அவருக்கு ஏற்பட்ட குடும்பப் பொறுப்புகள் - என் தாத்தா என் தகப்பனாருக்கு இள வயதில் மூன்று தம்பிகளையும் இரண்டு தங்கைகளையும் விட்டு விட்டு மறைந்து போனார். அவரை இலக்கியாசிரியராக அனுமதிக்கவில்லை. தபாலாபீஸில் உத்தியோகம் ஏற்று, சிறுவர்களை வளர்த்துப் பெரியவர்களாக உருவாக்கும் பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. மாதம் பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் சம்பளத்தில் குடும்பம் எனும் பெரும் பளுவை அவர் ஏற்று நடத்த வேண்டியிருந்தது. 1903-ம் வருஷ வாக்கில் அவர் எழுதி அவசரமாக வெளியிட்ட ஓர் ஆங்கிலக் கட்டுரை காரணமாகத் தபால் இலாகாவில் அவருடைய இரண்டு மூன்று வருஷத்திய வருஷாந்திரச் சம்பள உயர்வைத் தடைசெய்தது. அவர் தொடர்ந்து எழுதவில்லை.

ஆனால் நான் நாலாவது பாரம் வாசிக்கும்போதே எனக்கு இலக்கிய அறிவை ஊட்ட, இலக்கிய லட்சியத்தை ஏற்படுத்தித் தரப் போதிய இலக்கியப் பரிச்சயம் அவருக்கு இருந்தது. என்னுடைய பதினைந்தாவது வயதில் என் கையில் ஜாக் லண்டன் என்கிற அமெரிக்க ஆசிரியர் எழுதிய மார்டின் ஈடன் என்கிற நாவலைப் படிக்கத் தந்து, அதிலிருந்து ஓர் இலக்கியாசிரியன் எப்படிப்பட்ட போராட்டங்களை யெல்லாம் மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும் என்பதை நான் அறிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். இன்னமும் கூட இலக்கியாசிரியரின் வாழ்வு பற்றிய என் சிந்தனைகள் பலவும் அடிநாளில் அந்த நாவலைப் படித்ததால் ஏற்பட்டவைதான்.

கல்லூரியில் படிக்கும்போதே ஆங்கிலத்தில் கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும் எழுதத் தொடங்கிவிட்டேன் நான். நான் வேலைக்குப் போக வேண்டிய அவசியமில்லாமல் என் தகப்பனார் பார்த்துக் கொண்டார். பிற்காலத்தில் என் தகப்பனாருக்குக் குடும்ப பாரம் அதிகம் இல்லை - வருவாயும் தாராளமாக மாதம் இருநூறு முந்நூறு வந்தது. அவர் செலவோ சொல்பம்தான். மாதம் முப்பது நாற்பதுக்கு மேல் ஆகாது. பாக்கியை எனக்குத் தந்து விடுவார். புஸ்தகங்கள் வாங்கிப் படிப்பதிலும் என் லட்சியத்தை வளர்த்துத் திடப்படுத்திக் கொள்வதிலும் அதைச் செலவிட்டேன் நான்.

கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு ஒரு டைப்ரைட்டருடன் சென்னைக்கு வந்து. லைப்ரரி லைப்ரரியாகத் தேடிப் போய், வாங்க முடியாத நூல்

க. நா. சுப்பிரமணியம்



களைத் தேடிப் படித்தேன். படிக்கிற இன்பத்துக்காகவே பலமொழிகளையும் நானாகவே கற்றுக்கொண்டேன். நாலைந்து ஆண்டுகளில் ஆங்கிலத்தில் எழுதிச் சிறிது வெற்றியும் கண்டேன். முக்கியமாக ஜான் ஹெய்ன்ஸ் ஹோம்ஸ் நடத்திய யூனிடி என்கிற பத்திரிகையில் என் கட்டுரைகள் சில வெளிவந்தன. அப்போது பிரசித்தமாக இருந்த கோல்டன் டிக் என்னும் இலக்கிய மாத சஞ்சிகையில் என் கதைகள் சில வெளிவந்தன. இந்தப் பத்திரிகையில் வெளியிட்ட ஒரு சிறுகதைக்கு நான் ஏராளமான குறிப்புகள் - நமது பழக்க வழக்கங்களை விளக்கி எழுத வேண்டி ஏற்பட்டது. அப்போதுதான் ஆங்கிலத்தில் எழுதுவதை விடத் தமிழில், நம்மவர்களுக்காகவே எழுதலாமே என்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்தை என் தகப்பனார் ஆமோதிக்கவில்லை. தமிழில் எழுதுவது பயனற்ற வேலை என்று அவர் கருதினார். அவர் தலைமுறைக் கருத்து அது.

ஆனால் தமிழில் எழுதுவது என்கிற என் சிந்தனை வளர்ந்து வந்தது. அந்தச் சமயத்தில் பி. எஸ். ராமையா நடத்திக் கொண்டிருந்த மணிக்கொடிப் பத்திரிகையும் என் கவனத்தைக் கவர்ந்தது. தமிழில் எழுதத் தொடங்கினேன். சிறு சிறு கதைகள் எழுதி மணிக்கொடியில் வெளியிட்ட பிறகு, எனக்குப் புதுமைப்பித்தனுடைய நட்புக் கிடைத்தது. சிறுகதைகள் மட்டும் எழுதுவது போதாது, நாவல்களும் எழுத வேண்டும் என்று இருவரும் 1932, 1937 வாக்கில் பேசிக் கொள்ளத் தொடங்கினோம். புதுமைப்பித்தன் மூக்கபிள்ளை, மூக்கபிள்ளை (ஒவ்வொரு தடவையும் அதில் 'ப்' எழுத்து வந்து விடக் கூடாது என்று சேர்த்துச் சொல்வார்) என்று தாம் எழுத நினைத்த ஒரு நாவலைப் பற்றிப் பேசுவார். நான் என் மூதாதையர்கள் சென்னையையொட்டிய பிரதேசத்திலிருந்து கிளம்பி, ஹைதர் காலத்தில் தஞ்சை ஜில்லாவில் திருவாலங்காட்டில் குடியேறியது பற்றி ஆங்கிலத்தில் எழுதுவதாகத் திட்டமிட்டிருந்த ஒரு நாவல் பற்றிப் பேசுவேன். (இந்த நாவலில் சில அத்தியாயங்கள் தவிரப் பாக்கி இன்னமும் தமிழிலோ ஆங்கிலத்திலோ எழுதப்படாமலேதான் இருக்கிறது.)

இந்தச் சூழ்நிலையில் நான் 1938-ல் இரண்டு மாதங்கள் சேலத்தில் ஒரு ஹோட்டலில் போய் உட்கார்ந்து கொண்டு ஒரு நாவலை எழுதி முடிப்பது என்று தீர்மானித்தேன். நாற்பத்தைந்தே நாட்களில் ஒரு நாவலை எழுதி முடித்து விட்டு, அடுத்த பத்து நாட்களில் அதைத் திரும்பவும் எழுதி விட்டேன். இந்த இரண்டாவது தடவை எழுதியது பல அநாவசியமான பகுதிகளை அகற்றவும், நாவலைச் சுருக்கமாக எழுதவும் எனக்குப் பயன்பட்டது. அந்த நாவலுக்கு மையமாக அமைந்த அனுபவம் பின் வருவதுதான். என் சித்தப்பா ஒருவர் அடிநாளிலே என் தகப்பனார் ஆதரவில் படித்து மெட்ரிகுலேஷனுக்குப் பணம் கட்டி விட்டு, என் தகப்பனார் ஏதோ காரணமாகக் கோபித்துக் கொண்டார் என்பதற்காகப் பரீக்ஷை எழுதாமலே வீட்டை விட்டு ஓடிவிட்டார். இந்தியா முழுதும் சுற்றித் திரிந்து பல வேலைகளில் அமர்ந்து சொந்தமாக வியாபாரமும் செய்து, லக்ஷக்கணக்கில் பொருளீட்டினார். இருபது வருஷங்களுக்குப் பிறகுதான் அவர் இருப்பிடமே என் தகப்பனாருக்கும் பாட்டிக்கும் தெரிய வந்தது. என் பாட்டியின் வற்புறுத்தலுக்கிணங்கி அவர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பானை பிடித்தவள் பாக்கியம் அவர் தேடியிருந்த பணமெல்லாம் பத்து ஆண்டுகளில் கரைந்து விட்டது. அவர் மனைவியும் முதல் பிரசவத்தில் இறந்து விட்டாள்; குழந்தையும் உயிருடனில்லை. இப்போது அந்தச் சித்தப்பாவுக்கு நான்தான் வாரிசு. ஆனால் எனக்குத் தருவதற்கு அவரிடம் சொத்து ஒன்றுமில்லை.

என் கல்லூரி விடுமுறை நாட்களைத்தான் கல்கத்தாவில் அந்தச் சித்தப்பாவுடன் கழிப்பது வழக்கம். ஏழையாகிவிட்ட என் சித்தப்பா மறுபடியும் ஏராளமாகப் பொருளீட்டுவது பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தார். குதிரைப் பந்தயத்தில் சம்பாதிக்கலாம் என்பது அவர் நினைப்பு. அதற்கு அனுசரணையாக அவர் ஜோசியம் கற்றுக் கொண்டார். பணம் வரவில்லை; ஜோசியம் நன்றாக வந்தது. தம் ஜோசியத்தின் மூலம் என் எதிர்காலத்தைக் கண்டு சொல்ல நிறையவே வைத்திருந்தார். ஆனால் எதுவும் சொல்லவில்லை. சொல்ல மறுத்தார். இதை வைத்து நாவல் எழுதத் தீர்மானித்தேன் நான்.


நான் நாவல் எழுதுகிறபோது என் சித்தப்பா உயிருடனிருந்தார். (பின்னர் சந்நியாசம் வாங்கிக்கொண்டு பல வருஷங்களுக்குப் பிறகுதான் மறைந்தார்) அவர் தம் மறைந்த நாளைக் குறிப்பிட்டு விட்டு, குறிப்பிட்ட நேரத்தில் சிறப்பாகவும் கற்பனை செய்தேன். தம் வாரிசுக்கு விட்டுச் செல்லச் சொத்தில்லா விட்டாலும் ஒரு ஜோசிய பூர்வமான உயில் எழுதிவைத்து அடுத்த ஆண்டில் நடக்கப் போவதை எழுதி வைத்தார் என்று கற்பனை செய்தேன். இதற்காகப் புதுசாகக் கல்யாணமான வாலிபன் ஒருவனைச் சிருஷ்டித்துக்கொண்டேன். அவன் லக்ஷியவாதி; இலக்கியாசிரியன். நல்ல உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு, 'எழுதப் போகிறேன்' என்று வந்துவிடுகிறான். ஆனால் அவன் மனைவிக்கு உள்ளதெல்லாம் சாதாரணமான ஆசைகள்தான்-உத்தியோகம் பார்க்கிற கணவன், வேலைக்காரர்கள், கார், பங்களா, சௌகரியங்கள் என்று. இலக்கிய லட்சியம் புரியாத மனைவிவந்து தனக்கு வாய்த்தது பற்றி வருத்தம் அவ்வாலிபனுக்கு. அவ்வருத்தம் தீர அவன் அத்தை மகள் ஒருத்தி வருகிறாள். அவன் இலக்கிய வாழ்விலே பங்கு கொள்கிறாள்-கன்னி விதவை. படித்துக் கொண்டிருப்பவள். இந்தப் போக்கின் முடிவைத்தான் ஜோசியர் கிருஷ்ணசாமி சர்மா தம் ஜோசியத்தினால் கண்டு உயிலாக எழுதித் தருகிறார் என்று கற்பனை செய்து கொண்டேன். அப்போது இருதார மணத் தடுப்புச் சட்டம் இல்லை.

கதையைப் பூரணமாக உருவாக்க எனக்கு இன்னொரு அனுபவமும் உதவியது. நான் சேலம் போகு முன் 1937 கடைசியில் சுவாமி மலையில் ஒரு சமயம் என் பாட்டி தனது எண்பதாவது வயதில் சாகக் கிடந்தாள். (அப்போது அவள் மறையவில்லை. இரண்டொரு வருஷங்கள் கழித்தே மறைந்தாள்.) ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் நான் முன்பின் பார்த்திராத உறவினர்கள், நண்பர்கள் பலர் வந்து போனார்கள். அதை மனத்தில் கொண்டு, குடும்பம் என்கிற தத்துவம் நம்மிடையே எப்படி ஆட்சி செலுத்துகிறது என்பதை என் நாவலில் விவரிக்க முற்பட்டேன்.

கதையோ, சம்பவங்களோ, ஜோசியமோ முக்கியமல்ல. ஆனால் குணசித்திரங்கள், மனப்போராட்டம், உலகமே ஒரு குடும்பம் என்கிற சித்தாந்தம் இவற்றில் நம்பிக்கை வைத்து நான் 1938ல் சேலத்தில் உட்கார்ந்து எழுதிய நாவல் சர்மாவின் உயில். எனக்குத் திருப்தி தந்த முதல் நாவல் அது.



குழந்தைகள் எல்லோரும் விரும்புவது ப்ரௌன் அன்டு போல்ஸனில் தயாரித்த ப்ளாமாஞ்ச்



ப்ரௌன் அன்டு போல்ஸன் பிளேவர்ட் கார்ன் ப்ளவர் வாய்க்கு ருசியான ஒரு சிறந்த பதார்த்தம்

ப்ரௌன் அன்டு போல்ஸன் ப்ளேவர்ட் கார்ன் ப்ளவரினால் இதைத் தயாரிக்கும்போது எப்பொழுதுமே மிகச் சிறந்த பதார்த்தமாகிறது. ஏனென்றால் ப்ரௌன் அன்ட் போல்ஸனின் கார்ன் ப்ளவர் மிருதுவாக, சரியான அளவுக்குக் கலங்கக்கூடியது. ஒருக்காலும் கட்டி பிடிப்பதில்லை. மேலும் இது சுவை மிகுந்த 5 வித வாசனைகளில் கிடைக்கின்றது. வனில்லா, ராஸ்பெரி, கேரமல், ஸ்ட்ருபெரி, மற்றும் பைனாபிள் வாசனைகளில் கிடைக்கின்றன. ப்ரௌன் அன்டு போல்ஸனின் மற்ற சாதனங்கள் என்னவென்றால் – பேட்டன்ட் கார்ன் ப்ளவர், ரெய்ஸ்லி, வெய்டி கஸ்டர்ட் மற்றும் கஸ்டர்ட் பவுடர்.



ப்ரௌன் அன்டு போல்ஸன் பிளேவர்ட் கார்ன் ப்ளவர்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரைவேட் லிட்.

இலவசம்: இங்கிலீஷ், ஹிந்தி, தமிழ், தெலுங்கு, குஜராத்தி, மலையாளம், வங்காளம், மராத்தி, அல்லது உருது பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அழகான சமையல் புத்தகம் இலவசமாக வேண்டுவோர் இதிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்துவிடவும்).

தபால் செலவிற்காக 25 ந. பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்பு தான் இத்துடன் அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/குமாரி ....

....

விலாசம் ....

டிப்பார்ட்மென்ட் நம்பர்: KLK5

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.

த. பெ. நிர். 994, பம்பாய்—1.

இந்த இலவச அளிப்பு இந்தியாவிற்கு மாத்திரம்தான்.

இந்தியாவிற்கான ஏஜென்டுகள்:
பாரி அன்டு கோ. லிட்.

உயிர் நாடகம்

க. பஞ்சாபகேசன்

மிக நீளமான 'க்யூ'. முன்னே பருத்த மனிதர் ஒருவரும் பின்னே ஆஜானுபாகுவாக உயர்ந்த ஒரு மனிதரும் என்னை நசுக்கிக் கொண்டிருக்க, 'க்யூ'வில் நான் இருந்த இடத்துக்கும் டிக்கெட் கௌண்டருக்கும் இடையில் மனிதத் தலைகள் ஏராளம்.

பாம்பு 'உஸ் உஸ்' என்று மூச்சு விடுவதைப் போல் க்யூவில் நபர்கள் மூச்சுவிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு மணி நேரமாக நிற்கிறோம். அந்த மனித மலைப்பாம் பின் வால்தான் நீண்டு கொண்டே சென்றது. 'கௌண்டர்' திறக்கவில்லை.

வேதாந்தமும் சுய அபிப்பிராயமும் ஒரு 'க்யூ'வில் நின்றால் மனிதனுக்குத் தன்னாலேயே ஏற்பட்டு விடுகின்றன.

என் முன்னாலிருந்த பருத்த மனிதர் முணகினார்: "இத்தனை பேருக்கும் டிக்கெட் கிடைத்துவிடவா போகிறது?"

பின்னாலிருந்த உயர்ந்த மனிதர் பதில் சொன்னார்: "எல்லாருக்கும் ஆசைதான், புதிய படத்தைப் பார்க்க வேண்டுமென்று. நேற்றைக்குத்தான் 'ரிலீஸ்' ஆகியிருந்தாலும், நாளைக்கென்றால் பழசாய்ப் போய் விடுமல்லவா? கடச்கடப் பார்த்துச் கடச்கடக் குடும்பத்திலும் பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் அபிப்பிராயம் சொல்லணுமே!"

இந்தக் குத்தும் ஹாஸ்யத்தை நான் உள்பட அங்கே அது காதில் விழுந்த 'க்யூ' நபர்களில் சிலரும் சேர்ந்து சிரித்தோம். சமூகம் கேட்டுக் கொண்டு வருவதைத் தானும் கேட்டுக் கொண்டே அத்தனை எளிதாகப் பின் எப்படித் தான் சொல்ல முடியும்?



மூத்தினை நாள் தான் வெளி வந்த படம். பிரபல காதல் ஜோடி நடிக்கும் படம். முன்னாலெல்லாம் தேர்த்திருவிழாவுக்குப் போகும் கூட்டம் இப்படித் தியேட்டரில் திரண்டு கொண்டிருந்தது.

மத்தியான ஆட்டம் அப்போதுதான் முடிந்திருந்தது. எங்கள் 'க்யூவில்' பரபரப்பு ஏற்பட்டது. இதோ டிக்கெட்

கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். எனக்கு உள்ளத்துள் பரபரப்பு; டிக்கெட் கிடைக்காமலா போய்விடும்? எனக்கு முன்னே இத்தனை பேர்கள் நின்றாலும், 'க்யூ'வில் எனக்குப் பின்னே இத்தனை பேர் நம்பிக்கையுடன் நிற்கிறார்களே! எனக்குக் கிடைக்கா விட்டால் அவர்கள் அத்தனை பேருக்கும் கூடக் கிடைக்காதே. வாழ்க்கையில் நம்பிக்கை வேண்டும்!

என் மனத்தில் இன்னொரு படபடப்பு! பெண்கள் 'க்யூ' வரிசையில் நிற்கும் என் மனைவிக்கும் டிக்கெட் கிடைக்க வேண்டுமே! அன்று காலையிலிருந்து இதுவரை வேறெதற்கும் வேண்டாத தெய்வத்தை அப்போது வேண்டினேன், அவளுக்கும் அவசியம் டிக்கெட் கிடைக்க வேண்டுமே என்று.

முன்னே பருத்த மனிதரின் குரல் மீண்டும் கேட்டது. ''சேச்சே, நம்மைவிட இந்தப் பெண்கள் மிக மிக மோசம். அந்த 'க்யூ'வைப் பாருங்கள்! அடிதடி ஒன்றுதான் குறைச்சல்!....இதில் நம்ம 'வீட்டில்' வேறே அங்கே மாட்டிக் கொண்டிருக்கிறாள்! எல்லாவற்றுக்கும் நமக்குச் சமதை! நாம் பார்த்தபிறகு பார்க்கக் கூடாதாம்.''

'ஓகோ, இந்த மனிதரின் சம்சாரமும் அந்தப் பெண்கள் 'க்யூ'வில் மாட்டிக் கொண்டிருக்கிறாளோ' என்று எண்ணினேன்.

இதற்குள் பின்னால் உயர்ந்த மனிதர் பேசினார்: ''நம்ம வீட்டிலும்தான் சார் அங்கே நின்று அவஸ்தைப்படுகிறது. இதில் நிறை மாதம் வேறே. என்னத்தைச் சொல்கிறது? சொன்னால் கேட்கிறாளா? அப்புறம் பிரசவம் ஆகிவிட்டால் மூன்று மாதங்களுக்குச் சினிமா கினிமா என்று பார்க்க முடியாதாம்...பிடிவாதம் பிடித்து வந்து விட்டாள். இதில் பொருளாதாரப் பிரச்னையும் சிக்கனமும் வேறே. அவளுக்கு அந்த எட்டணா வகுப்பில் டிக்கெட் அவசியம் கிடைத்து விடுமாம்....''

என் மனம் சிறிதே சஞ்சலப்பட்டது. வேதனைகளுக்கு நடுவே மனத்தைக் குதூகலமாக வைத்துக்கொள்ள மனிதன் போட முயலும் போலித் திரை அந்த வேதனைகளை மறைப்பதாக இல்லை.

இதற்குள் 'க்யூ'வில் பரபரப்பு; அபரிமிதமாக ஏற்பட்ட நெருக்கம். சொர்க்க வாசல் திறந்தது மாதிரி, ஒரு பர்லாங்கு தூரத்துக்கு அப்பால் எங்கள் கௌண்டர் 'பட்'டென்று திறந்து கொண்டது. ஒன்றரை ரூபாய் ஸ்தானத்துக்காக அத்தனை கௌரவக் குறைவான அடிபிடி வேண்டாம்.

நானும் அதிலேயேதான் நின்று கொண்டிருந்தேன்; எனக்கு முன்னே பருத்த மனிதரும் பின்னே உயர்ந்தவரும்கூட அதிலேயேதான் நின்று கொண்டிருந்தார்கள்.

'க்யூ'வில் மெதுவாக முன்னே நகர்ந்து கொண்டே எங்கள் மூவர் கண்களும் சற்றுத் தூரத்தில் இதே பரபரப்பில் நகர்ந்து கொண்டிருந்த பெண்கள் 'க்யூ' வரிசையை நோக்கிக் கொண்டிருந்தன.

என் மனைவி என்னைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே 'க்யூ'வில் நகர்ந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் படித்துப் படித்துச் சொல்லியிருந்தேன். நடுத்தர வாழ்க்கையில் இருப்பவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதென்பதெல்லாம் வெறும் போலி வேஷம் என்றுதான் அவளுடன் எனக்கு வாதம்.

இப்போது பார்த்தால், அவள் ஆசையாக வாங்கிக் கட்டிக் கொண்டிருந்த ஆகாச வர்ண 'டிஷ்யூ' சேலை இப்படியா கலைந்து நசுக்கப்பட வேண்டும்? பத்து நிமிஷங்களுக்குப் பிறகு மெனக்கெட்டு இட்டுக் கொண்ட விசேஷ வர்ண குங்குமப் பொட்டும் கண் மையும் கரைந்து இயற்கையான அவளது தாமரைப் புஷ்ப முகாரவிந்தத்தை எப்படி மாற்றிக் கொண்டிருந்தன! இரண்டு பேரும் 'சீசர்' செய்து கொண்டு உயர் வகுப்புக்குப் போகலாம் என்றவளுக்கு 'வீண் செலவு. அந்தக் காசுக்கு ஒருபடி அரிசி வாங்கலாமே' என்றவனுடைய கஷ்டம் மனசுக்கு வருத்தமாகவே இருந்தது.

பெண்கள் 'க்யூ'வில் என் மனைவிக்குப் பின்னே நின்று கொண்டிருந்த பெண்மணி—

பின்னால் திரும்பி அந்த உயர்ந்த மனிதரைப் பார்த்தேன். அவர் குரலில் அசட்டுப் படபடப்பு தொனித்தது. ''படட்டும் கஷ்டம். இந்த நிலையில் 'க்யூ'வில் நின்று கொண்டு டிக்கட் வாங்க வேண்டுமாம், ஸார்! சரியாக ஒன்பது மாதம் ஆகிறது. சொன்னால் வீட்டில் ரகளை நேரும். நல்லவேளை அந்த முன்னாலிருக்கும் பெண்மணி நல்லமாதிரியாக இருக்கிறாள். இவள் நிலைமையைப் புரிந்து கொண்டு நசுக்காமல் தான் நசுங்கிக் கொண்டு போகிறாளே!''

என் மனைவியை அவர் புகழ்ந்ததில் எனக்கு சந்தோஷம் ஏற்பட்டாலும் பொதுவாக அவர்மேல் எனக்குக் கோபமே ஏற்பட்டது. அவரை நோக்கிச் சொன்னேன்:

''என்ன இருந்தாலும் இப்படிச் செய்யக் கூடாது ஸார் நீங்கள்! இந்நிலையில் அவர்களைச் சினிமாவுக்கு அழைத்து வரலாமா? அதிலும் இப்படி 'க்யூ'வில் சங்கடப்படும்படி நிறுத்தி வைக்கலாமா?''

உயர்ந்த மனிதர் வெள்ளிடைமலையாகவே பேச ஆரம்பித்தார்: ''சிக்கனம் சார் சிக்கனம்! நாளைக் காலையில் பிரசவம் நேர்ந்தால் மருத்துவப் பெண்ணுக்குக் கொடுக்கப் பணம் கிடையாது. இன்று இப்படிச் சினிமா பார்த்தாகிறது. பார்த்தாகிறதா? இல்லை யில்லை. பார்ப்பதற்கு இந்தக் கடின ஒத்திகை நடந்தாகிறது...'இருக்கிற வரை செலவழிப்போம்: இல்லாதபோது சும்மா யிருப்போம்' என்று ஏழைகளுக்குக் கொள்கை இருக்கலாம், ஸார்; ஆனால் நமக்கோ இல்லாதபோதும் கடன் வாங்கிப் பவிஷு பண்ணியாக வேண்டும்...சத்தம் போட்டுச் சொன்னால்கூட வெட்கம் ஸார்! இப்படி நிற்பதில் எட்டணா கடன்கூட என்னுடன் இந்தக் 'க்யூ'வில் நிற்கிறது!''

இதற்குள் பெண்கள் 'க்யூ' வரிசையை ஒட்டி ஓர் ஆணின் பலத்த குரல் கேட்டது. கையில் நீளமான ஒரு சவுரியைச் சுழற்றிக் கொண்டே அவன்—தியேட்டர் சிப்பந்திகளில் ஒருவன்—பலத்த குரல் கொடுத்துக்கொண்டே 'க்யூ'வை யொட்டிக் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். ''இது யாருடைய சவுரி, அம்மா? கீழே விழுந்து கிடந்திச்சு. சவுரிக்குடையவங்க வாங்கிக் கிடலாம்!''

'க்யூ'வில் நகர்ந்து கொண்டிருந்த எனக்கு கொஞ்சநஞ்சமிருந்த உற்சாகமும் அடங்கிப் போய் விட்டது. அங்கே அவனுடைய அந்தக் குரல் மனித நாகரிகத்தை நடுச் சந்தியில் வைத்து ஏலம் போடுவதாகவே இருந்தது. மிக வேகமாக அந்த 'க்யூவி'லிருந்த பெண்கள் அத்தனை பேரையும் என் கண்கள் நோட்டமிட்டன. சவுரிக்குடையவள் முன் வந்து வாங்கிக் கொள்ளுவாளா? யாரும் முன் வரவில்லை. பல பெண்கள் தலைகுனிந்தது மாதிரி இருந்தது. சிலர் அதை வேடிக்கையாக நினைத்துச் சிரித்துப் பேசிக் கொண்டார்கள்; ஓரிரு பெண்மணிகள் தங்களுக்குச் சவுரி வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்பதைக் காட்டிக் கொள்ளுவதற்காகத் தங்களது நீளமான பின்னல்களை முன்னே இழுத்து விட்டுக் கொண்டார்கள்.

பத்து நிமிஷங்கள் கத்திவிட்டுச் சவுரியுடன் தியேட்டர் சிப்பந்தி ஓய்ந்தான். வாழ்க்கையில் மனித நாகரிகம் இவ்வளவுதான் என்று அந்தச் சவுரியை ஒரு காட்சிப் பொருளாக்கிக் காட்டிச் சென்று விட்டான் அவன்.

நேரம் சென்றது. எனக்கு முன்னே இன்னும் பத்துத் தலைகள்தான். அதே மாதிரி பெண்கள் வரிசையில் என் மனைவிக்கு முன்னேயும் பத்துப் பேர்கள்தாம். கௌண்டர் தெய்வங்கள் மூடப்படாமலிருக்க வேண்டும்.

முன்னால் பருத்த மனிதர், "எனக்குக் கிடைத்து அவளுக்குக் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?" என்றார். அவர் சொல்லி வாய் மூடவில்லை, பெண்கள் பக்கத்துக் கௌண்டர் 'பட்'டென்று மூடிக்கொண்டது!

எங்கள் மூவர் மனைவிகளுக்குமே டிக்கெட் கிடைக்கவில்லை!

டிக்கெட் கிடைக்கப்பெறாத பெண்கள் பிரிந்து தியேட்டர் முகப்புக்கு வரும் நேரம்.

எங்கள் 'க்யூ' மிக வேகமாக, நகர்ந்து கொண்டிருந்தது. இன்னும் ஐந்தே பேர்கள் தான் பாக்கி. பருத்த மனிதர் துடித்தார். பரிதாபமாக என்னைத் திரும்பிப் பார்த்து, "இந்த மாதிரி சமயத்தில் நீங்கள் என்ன ஸார் செய்வீர்கள்?" என்றார்.

எனக்குப் புரியவில்லை. "என்ன சொல்கிறீர்கள்?" என்றேன்.

"என் மனைவிக்கு டிக்கெட் கிடைக்கவில்லை. எனக்குக் கிடைக்கும் போலிருக்கிறது... முடிவு செய்வது எப்படி?"

நான் என்ன பதில் சொல்லட்டும்? அவர் வீட்டில் சௌகரியா சௌகரியங்கள் எப்படியோ? யாருக்கு யார் அடங்கினவர்களோ?

இதற்குள்—

பருத்த மனிதரின் முறை வந்ததும் சன்னிதானம் 'படீரெ'ன்று மூடிக் கொண்டது.

ஒரு துள்ளலில் விலகிக் கொண்டார் பருத்த மனிதர். "நல்லவேளை. பிழைத்தேன்! பின் எப்படித்தான் முடிவு செய்வது?" என்று கூவிக்கொண்டு.

அவர் இரண்டடி எடுத்து வைத்திருக்க மாட்டார், கௌண்டர் மறுபடியும் திறந்து கொண்டது. உள்ளேயிருந்து குரல்: "மறதியாக மூடிவிட்டேன்—இரண்டே டிக்கெட்! வாங்கிக் கொள்ளுங்கள்."



அமெரிக்கா வருமாறு அமெரிக்க அரசாங்கம் அனுப்பிய அழைப்பை நடிகர் சிவாஜி கணேசன் ஏற்றுக் கொண்டுள்ளார். அழைப்புப் பத்திரங்களை அமெரிக்கத் தகவல் நிலையப் பண்பாட்டுத் துறை அதிகாரி மிஸ் மார்த்தா பர்ன்ஸ் நேரில் சென்று வழங்கினார்.

நான் 'குபீரெ'ன்று பாய்ந்து என் கையைக் கௌண்டருக்குள் பணத்துடன் நீட்டினேன். இரண்டு டிக்கெட்டுகளும் பாக்கிச் சில்லறையும் உள்ளங் கையில் விழுந்தன. கையை வேகமாக வெளியே இழுக்கவும் அந்தச் சின்னக் கதவு 'படீ'ரென்று மூடிக் கொள்ளவும் சரியாக இருந்தது.

எல்லோருக்கும் லட்சியம் ஒரே மாதிரியாக இருந்த அந்தச் சமயத்தில் அது நிறைவேறியவர்கள் தியேட்டருக்குள் சென்று கொண்டிருந்தார்கள்; நிறைவேறாதவர்கள் 'உடனே பார்த்தால்தான் தலைவெடிக்காமல் இருக்குமா?' என்று ஆறுதலுடன் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

பருத்த மனிதர் தமது மனைவிக்காக நின்று கொண்டிருந்தார், என் கையிலிருந்த டிக்கெட்டுகளின் மேலே கண் வைத்துக்கொண்டு.

உயர்ந்த மனிதர் அவரருகில் நின்றவண்ணம் தமது மனைவிக்காகக் காத்திருந்தார்.

நானும் நின்று கொண்டிருந்தேன், கையில் பச்சை வண்ணமான இரு டிக்கெட்டுகளுடன் அவளுக்காக.

முதலில் பருத்தவரின் மனைவி வந்தாள். படபடப்பான பேச்சோடு. "உங்களுக்கும் கிடைக்கவில்லையா?"

"இல்லை."

"வந்ததுதான் வந்தோம், ஏன் வீட்டுக்குத் திரும்பிப் போகவேண்டும்? பணம் போனால் போகிறது. வெளியே விலைக்குக் கிடைக்குமா பாருங்கள்!"

பச்சை டிக்கட்டுகளுடன் நின்று கொண்டிருந்த எனக்குச் சிலிர்த்தது.

இதற்குள் அந்த உயர்ந்த மனிதரின் மனைவியும் தளர்நடை போட்டுக் கொண்டு வந்தவள் தியேட்டர் வராந்தாவில் உட்கார்ந்து விட்டாள். பாவம், நிறைமாதக் கர்ப்பிணி.

உயர்ந்தவர் அவளிடம் போய், "வீட்டுக்குப் போக வேண்டியதுதானே?" என்றார்.

"ஆமாம். போகும் வழியில் மருத்துவச்சிக்கும் சொல்லிவிட்டுப் போக வேண்டும்.... எனக்கு வலிக்கிறது!" என்றாள் அவள்.

என் இதயம் புல்லரித்தது.

கையில் அக் காகிதப் பூக்கள் படபடத்தன. அதைக் கொண்டு நான் உள்ளே போய்த்தான் சினிமா பார்க்க வேண்டுமா? வெளியே இந்த உயிர் நாடகத்தைப் பார்த்தது போதாதா?

இதற்குள் அருகில் என் மனைவியின் அன்புக் குரல் கேட்டது. "நீங்கள் சமர்த்து, இரண்டு வாங்கி விட்டீர்களே? என்ன யோசனை? உள்ளே போகலாமா? படம் ஆரம்பிக்க இன்னும் இரண்டு நிமிஷம்தான் இருக்கிறது!"

இந்த அன்புக் குரலை அடித்துக் கொண்டு போயின என் நினைவில் எழுந்த இரு வாயுவேகமான குரல்கள்:

'வெளியே எங்காவது டிக்கெட் விலைக்குக் கிடைக்குமா என்று பாருங்கள்!'

'போகும் வழியில் மருத்துவச்சிக்கும் சொல்லி விட்டுப் போக வேண்டும். எனக்கு வலிக்கிறது.'

காலையில் பிரசவம் நேர்ந்தால் மருத்துவப் பெண்ணுக்குக் கூடக் கொடுக்கப் பணம் இல்லை என்றாரே அந்த உயர்ந்த மனிதர்? வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகலாம்; ஆனால் அதை முழுமையாக வெறும் கூந்தல் சவுரி என்று ஒதுக்கிவிட முடியுமா?



நான் உடனடியான தீர்மானத்துக்கு வந்தேன். நேரே அந்தப் பருத்த மனிதரிடம் போனேன். "இந்த இரண்டு டிக்கெட்டும் உங்களுக்கு வேண்டுமா ஸார்? ஒரு டிக்கெட்டுக்கு இரண்டரை ரூபாய், ஸார்!" என்று கூறினேன். அவர் திகைத்தார்.

"என்ன ஸார்! நீங்களும்?"

"சீக்கிரம் சொல்லுங்கள் ஸார்! வெளியே மூன்று ரூபாய்கூட...."

"சரி கொடுங்கள், ஸார்!" மனைவியின் முகத்தில் 'சரி' என்ற குறிப்பைப் பார்த்தவுடன்தான் பருத்த மனிதர் ஐந்து ரூபாயை என் கையில் வைத்தார்.

"இதெல்லாம் என்ன?" என்ற என் மனைவியின் முணுமுணுப்பையும் பொருட்படுத்தாமல் அந்த உயர்ந்த மனிதரை என் அருகில் வரும்படி சமிக்ஞை செய்தேன்.

அவர் கையில் இரண்டரை ரூபாய்களை வைத்தேன். "மருத்துவத்துக்கு அட்வான்ஸ் கொடுத்து விட்டுச் சீக்கிரம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போங்கள். உங்கள் மனைவியின் முகத்தில் வேதனையைப் பார்க்க என்னால் பொறுக்க முடியவில்லை, ஸார்!" என்று கூறிக் கொண்டு என் மனைவி பின்தொடரத் தியேட்டருக்கு வெளியே வேகமாக நடந்தேன்.

அந்தி வேளையின் குளிர்ந்த தென்றல் வெந்துகொண்டிருந்த என் எண்ணச் சுமைகளுக்கு ஆறுதலான குளுமையை அளித்தது.

சைக்கிள் ரிக்ஷாவில் நானும் அவளும் போய்க் கொண்டிருந்தோம். அவள் ஒரு குழந்தை போல் என் கையைப் பற்றிக் கொண்டு, "ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? உங்கள் மனசு எனக்குப் புரிந்து விட்டது. சினிமாவுக்குப் போகவில்லை என்று எனக்கு ஒன்றும் வருத்தமில்லை. ஒரு நல்ல காரியம் செய்தீர்களே, எனக்குப் பெருமையாக இருக்கிறது. பாவம், பிள்ளைத்தாய்ச்சி எதற்காகக் 'க்யூ'வில் வந்து நிற்கிறாள்? உங்களுக்கு வேடிக்கை தெரியுமா? டிக்கெட் கிடைக்கவில்லை என்ற அதிர்ச்சியில்தான் அவளுக்கு வலி ஏற்பட்டு விட்டது போலிருக்கிறது. அப்போதே நான் வாழ்த்தி விட்டேன், அவளுக்கு ஆண் குழந்தையாகப் பிறக்கட்டுமென்று. நீங்கள் மருத்துவத்துக்குப் பணமே உதவி விட்டீர்கள்!" என்றாள்.

"நானா உதவினேன்? அந்தப் பருத்த தம்பதிகளின் சினிமா வெறி அல்லவா உதவியது? இருந்தாலும் சவுரி தன் கூந்தலிலிருந்து அவிழ்ந்து போனதுகூடத் தெரியாமல் ஒரு சினிமா வெறி வேண்டாம்!" என்றேன் நான். அதற்குப் பிறகு எங்களுக்குள் பேச்சு ஒன்றும் நடக்கவில்லை.

அன்றிரவின் பின் சாமம். ஜன்னலிலிருந்து பின்னிலவு பால் போல் கட்டில் மேல் விழுந்து கொண்டிருந்தது. திடீரென்று விழித்துக் கொண்ட நான் அருகில் அவள் தூங்காமல் விசித்து விசித்து அழுது கொண்டிருந்ததைக் கவனித்துத் திடுக்கிட்டேன். அவளை அணைத்தவண்ணம் "என்ன இது, எதற்காக அழ வேண்டும்?" என்றேன்.

"சொன்னால் வருத்தப்பட மாட்டீர்களே" என்று அவள் விம்மலில் குழந்தைபோல் என் கைகளில் துவண்டாள்.

"என் கண்மணி அல்லவா? இதென்ன அசட்டுத்தனம்? ஏன்..."

அவள் தனது மலர் விரல்களால் என்வாயை மெதுவாகப் பொத்தினாள்.

"இனி நான் எங்கே வெளியே போனாலும் உங்களோடுதான் போவேன், வருவேன், அதுவும் சேர்ந்து! உங்களைப் பிரிந்துபோனால், கூந்தலைப் பிரிந்துபோன வெறும் சவுரிதான் நான்! இன்றைக்கு நல்ல பாடம் கற்றுக் கொண்டேன்..."

"என்ன சொல்கிறாய் நீ?" என்றவளை அவளது கரங்கள் இறுகப் பற்றிக்கொள்ள, அவள் வாய் என் காதில் முணுமுணுத்தது. "யார் சவுரி என்று ஏலம் போட்டாற்போல் கத்தினானே, அது என்னுடைய சவுரிதான். இனி செத்தாலும் உங்கள் கௌரவத்தை விண்டிக்க மாட்டேன்!"



ஒலவக்கோடு தென்னிந்திய ரயில்வே டிவிஷனல் ஆபீசைச் சேர்ந்த திரு எஸ். வெங்கடேசனின் சகோதரி சௌ. மாலதி திரு அர்த்த நாரியை மணந்து கொண்டார்.



பொன்னேரி டாக்டர் திரு சாம்ப சிவன் அவர்களின் குமாரி சௌ. பிரமசந்திராவை வருமான வரி இலாகா இன்ஸ்பெக்டர் திருசூரியநாராயணமூர்த்தி மணம் புரிந்தார்.



போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் காரியாலய உதவி டைரக்டர் திரு ஆர். பி. விசுவநாதன் அவர்களின் புதல்வி சௌ [illegible]ாலாவுக்கும் திரு ரங்கசாமிக்கும் திருமணம் நடந்தேறியது.



திருச்சி இ. ஆர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு எஸ். [illegible]ாபநாதன் அவர்களின் புதல்வி சௌ. சுகந்தாவுக்கும் திரு வேங்கட ராமனுக்கும் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.



மத்திய சர்க்கார் சிறு தொழில் உதவி டைரக்டர் திரு நடேசன் அவர்களின் புதல்வி சௌ. மீராவுக்கும் திரு சீனிவாசனுக்கும் அமோகமாகக் கல்யாணம் நடைபெற்றது.



கரூர் திரு வி. எம். சின்னுசாமி அவர்களுக்கும் சௌபாக்கியவதி பத்மாவதிக்கும் சமீபத்தில் பெரு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர்நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர்நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் சேர்த்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

DCG. 32 QT-TAM.



ரசிகர்களைச் சோகத்தில் ஆழ்த்திச் சொர்க்கத்துக்கே அனுப்பிவிட வேண்டும் என்பது தான் பழனியப்பா புரொடக்ஷன்ஸாரின் ஆசை, முடிவு. தானாகக் கனியாத கனியைத் தடிகொண்டடித்துக் கனியவைத்தகதைதான்.

வெள்ளித்திரையில் ஒரு பெண்ணைத் தியாக சிகரமாகக் காட்ட என்னவெல்லாம் பாடாய்ப்படுத்தி யிருக்கிறார்கள்! லக்ஷ்மியும், மாலினியும் அக்கா-தங்கை. லக்ஷ்மி, தகப்பனார் நிச்சயித்த வரனை ஏற்க விரும்பாமல், தன் மனம் நாடிய காதலனுடன் ஓடிப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு வறுமையின் காரணமாகப் படாதபாடெல்லாம் பட்டு வில்லனின் விஷப் பார்வையில் சிக்கி வீராங்கனையாக எதிர்த்து நிற்கிறாள். லக்ஷ்மியின் கணவனை வில்லன் திருட்டுக் குற்றம் சுமத்திச் சிறைக்கு அனுப்ப, தரையில் விழுந்த மீனாய்த் தவித்த லக்ஷ்மியை அவள் தங்கை மாலினி மீண்டும் தந்தையிடம் அழைத்துச் செல்கிறாள். வில்லன் மாலினியையும் கெடுக்க முயன்றபோது, லக்ஷ்மி அவனைக் கொன்று விடுகிறாள்; தங்கையின் வாழ்வை வளமாக்கித் தான் சிறை புகுந்து விடுகிறாள். லக்ஷ்மி கைவிலங்குடன் சிறைக்குச் செல்லும்போது சிறைசென்ற அவள் கணவன் விடுதலை யடைந்து வீடு திரும்புகிறான்.

காந்தன்



இதுவரை ஏதாவது புரியவில்லையென்றால் அது என் குற்றமில்லை. திரைக்கதையில் உள்ள குற்றந்தான்.

தந்தை நிச்சயித்த வரனை மகள் ஏற்காததில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவன் ஒரு பித்துக்குளி. ஆனால் காதலனோடு வீட்டை விட்டு வெளியேறிப் பதிவுத் திருமணம் செய்து கொண்டு கணவன் சிறை புகுந்ததும் தந்தையின் காலில் விழுவதைக் கண்டு நம்மால் உருக முடியவில்லையே! ஆனால் அவளை வெறுத்து உதறும் தந்தையின் மௌன நடிப்பு நன்றாயிருக்கிறது. தந்தையாக வருபவர் பழகிப் போன 'சினிமாத் தந்தை' டி. பாலசுப்ரமண்யம்.

பழைய நடிகை பி. எஸ். சரோஜா லக்ஷ்மியின் பாகத்தை ஏற்று நடித்திருக்கிறார். அந்தப் பாத்திரத்தை உயர்வாகக் காட்டுவதற்காக முயன்றுள்ள இடங்களிலெல்லாம் திரைக் கதை அசடு வழிகிறது. தங்கையிடம் சட சடவென்று வீரவாசகங்களைப் பொழிந்து "என்னைப் பார்! என்னைப் பார்!" என்று லக்ஷ்மி முழங்கிய காட்சி தமிழ்ப்படங்களின் ஆரம்பகாலத்தை நினைவூட்டுகிறது.

மாலினியாக வரும் எல். விஜயலக்ஷ்மி இன்னும் ரொம்ப ரொம்பக் கற்கவேண்டும். எதுகையும் மோனையும் மோதும் வசனங்களைத் தங்கு தடையில்லாமல், உணர்ச்சியும் இல்லாமல் ஒப்பிக்கிறார்!

வில்லனாக வரும் எம். என். நம்பியார் நன்றாக நடித்திருக்கிறார். நம்பியார் மட்டும் இல்லையென்றால் இந்தப் படத்தின் மற்ற நடிகர்களை நம்பி யார் போய்ப் பார்ப்பார்கள்?

லக்ஷ்மியின் கணவனாக வரும் டி. ஆர். மகாலிங்கம் சொந்தக் குரலில் மூன்று பாட்டுகள் பாடுகிறார். நல்லகாலமாகப் பாதிப் படத்துக்குப் பிறகு அவரைத் திரையில் காணோம்.

லக்ஷ்மியின் அத்தை மகனாக வரும் வி. ஆர். ராஜகோபாலைப் பற்றி என்னத்தைச் சொல்ல! அசட்டுக் கதைக்கேற்ற அசடு வழியும் கதாநாயகன். ஆதிகாலத்துச் சதாரத்தில் வரும் அழகு என்ற அசட்டுப் பாத்திரத்தை நினைவூட்டுகிறார்.

படத்தின் வசனத்தை அடுக்கு மொழியாக அள்ளி வீசித் தடுக்கித் தடுக்கி விழுந்திருக்கிறார்கள்.

ஒளிப்பதிவு மிகவும் நன்றாயிருக்கிறது.

"இந்தப் படத்துக்கு யார் கதாநாயகன்? வி. ஆர். ராஜகோபாலா, இல்லை, டி. ஆர். மகாலிங்கமா?" என்று என் நண்பர் ஒரு கேள்வியைப் போட்டார்.

"கதையே என்னவென்று புரியாதபோது அதற்கு நாயகனைப் பற்றி ஏன் ஸார் கவலைப் படுகிறீர்கள்?" என்று பதிலுக்கு ஒரு கேள்வியைப் போட்டேன்.

"என்னைப் பார்!"—பெயரை இப்படிப் போட்டாலாவது யாராவது வந்து பார்க்க மாட்டார்களா என்ற ஆசை போலும்!

எல்லாம் உனக்காக

காந்தன்

பெரிய பணக்காரரான வெங்கடாசலத்தின் மகள் சரளா கார் விபத்திலே கால் ஊனம் அடைகிறாள். முடமாகிவிட்ட மகளின் வாழ்வு முடமாகி விடாமல் இருக்க, ஏழை ஆனந்தனுக்கு அவளை மணம் முடித்து வைக்க விரும்புகிறார் அவள் தந்தை. விவாகம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்குள் அவள் கால்கள் குணமாகா விட்டால், ஆனந்தன் அவளை விவாகரத்து செய்துவிட்டு வேறு பெண்ணை மணக்கலாம் என்ற ரகசிய ஒப்பந்தத்துடன் ஆனந்தனின் தந்தை இந்த விவாகத்துக்குச் சம்மதிக்கிறார். விவாகம் நடந்து குழந்தையும் பிறந்து விடுகிறது. சரளாவின் கால்கள் குணமாகவில்லை. ஒப்பந்தப்படி நடக்கும்படி ஆனந்தனின் தந்தை வெங்கடாசலத்தை மிரட்டுகிறார். ஆனந்தனுக்கு மறுமணம் நடக்கப் போவதை யறிந்து சரளா துடிக்கிறாள். வெங்கடாசலத்தின் ரகசிய ஒப்பந்தம்தான் இந்தச் சின்னக் கதையை 15,719 அடிகளுக்கு நீட்டியிருக்கிறது.

முடமான தம் பெண்ணின் வாழ்வு மலர வேண்டும் என்பதற்காக எந்தத் தந்தையாவது தாமாகவே விவாகரத்து யோசனையைச் சொல்வாரா?

கதாநாயகிக்கு மட்டும் கால் முடமாகும் அளவுக்கு ஏற்பட்ட விபத்து மற்றவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டது எப்படி?

மொத்தத்தில் கதை ஒரே சல்லடை. எத்தனை ஓட்டை என்று எண்ணுவது?

சாவித்திரி செல்வச் செருக்கில் மிதந்த போதும், கால் ஊனமடைந்து உள்ளம் உடைந்த போதும், ஆனந்தனை மணந்து ஆனந்த வாழ்க்கை நடத்தியபோதும், ரகசிய ஒப்பந்தத்தைப் பற்றி அறிந்து உள்ளம் வெந்து, தந்தையிடம் நொந்து கொண்டு பேசும்போதும் நடிப்பு நன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் பாச மலருக்கு விசம் கம்மிதான்.

அடுத்தபடி எஸ். வி. ரங்காராவைக் கூற வேண்டும். மகளிடம் உயிரையே வைத்திருந்த தந்தையின் உணர்ச்சி, உள்ள நெகிழ்ச்சி ஆகியவைகளை அவரால் நம் முன் நிறுத்த முடிவது பாராட்டுக்குரியது. கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்யாமல், இயல்பாகவே பாவங்களை வெளிக் காட்டுகிறார். ரகசிய ஒப்பந்தத்தைப் பற்றி மகள் கேட்டபோது உள்ளம் வெடித்து அவர் துடித்ததை யாரும் மறக்க மாட்டார்கள். இருந்தாலும் படிக்காத மேதைக்கு ஒருபடி குறைச்சல்தான்.

ஆனந்தனாக வரும் சிவாஜி நன்றாக நடித்திருக்கிறார். ஆனால் அவருக்கு அளித்திருக்கும் பாகம் போதாது.

குடிசைகள் தீப்பற்றி எரியும்போது அவர் ஓடியதைப் பார்த்ததும் எங்கே இன்னொரு "விடி வெள்ளி" நம் தலையில் விடிந்து விடுமோ என்று பயந்தேன்! நல்ல வேளை. தீ விபத்தில் அவர் சிக்கவில்லை.

பாட்டியாக வரும் சுந்தரிபாய் பாராட்டும் வகையில் நடித்திருக்கிறார்.


டி. எஸ். பாலையா வழக்கம்போல் பணத்தாசை பிடித்த, அக்கிரமங்களுக்கு அஞ்சாத தகப்பன். இது ரொம்ப ரொம்பப் பழையது தானாலும் பல நாட்கள் கழித்துப் பார்ப்பதால் அவ்வளவு அலுப்பாக இல்லை.

எஸ். ஏ. நடராஜன் கண்ணாடிப் பெட்டியில் வைத்த பாம்புபோல் சீறவும் முடியாமல் படமெடுக்கவும் முடியாமல் தவிக்கிறார்.

சிவாஜிக்கு ஜோடியாகக் கதாநாயகியின் தோழியுடனேயே காதல் புரிந்து ஹாஸ்யமும் புரிய முயல்கிறார் டி. ஆர். ராமச்சந்திரன்.

படத்தின் சுவாரஸ்யத்தைக் குறைக்க, நடிகர்களின் நடிப்புத் திறனைக் குலைக்கத் தேர்தல் பிரசாரங்கள் நிறைய உதவுகின்றன. திருச்சி காவிரியில் சாக்கடை சங்கமமாகிச் சங்கடப்படுத்துவது போல், தேர்தல் திரைக் கதையின் சுவையைப் பாழாக்கி விடுகிறது.

கதாநாயகி முடமாகித் தவிக்கும்போது அவள் நன்றாக ஆடிப்பாடித் திரிந்த காலத்தில் எடுத்த திரைப்படத்தைப் போட்டுக் காண்பித்திருப்பது புதிது. பொருத்தமானதும் கூட. வேதனையால் கழலும் மின்சார விசிறி, பிலிம் சகடைகளின் நிழலைக் காட்டியிருப்பது நல்ல டைரக்ஷன்.




"மலரும்கொடியும் பெண்ணென்பார்" என்ற பாட்டு மிகவும் நன்றாயிருக்கிறது. மற்றவை மனத்தில் நிற்கும் படியாக ஒன்றுமில்லை.

கே. எஸ். கோபால கிருஷ்ணன் வசனம் நன்றாக எழுதியிருக்கிறார்.

இதெல்லாம் எதற்காக? "எல்லாம் உனக்காக" படத்தை ஒரு தடவை பார்த்து வையுங்களேன், சாவித்திரிக்காக!

தலைப்பு: ஸ்ரீ வள்ளியா? ஸ்ரீமதிவள்ளியா?

பழைமை: கதையிலும் கருத்திலும்.



புதுமை: வர்ணம், காட்சி ஜோடனை. முன்னதில் முன்னேற்றத்துக்குநிறைய இடமிருந்தாலும் பின்னது பிரமாதம்தான்.

நடிப்பு: முதல் பரிசு யானைக்கு. ரொம்ப ஜோர். பாவபூர்வமாகவே யல்லவா நடித்துவிட்டது!

சிவாஜி: கிழவனாகத் தோன்றும் போது அபாரமாக நடிக்கிறார். குமரக் கடவுளாக அசடு வழிகிறார். நல்ல நடிகருக்கு நடிப்புத் திறன் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்குத் தேகக் கட்டும் அவசியம்தான். அமெரிக்க நடிகர்களைத்தான் விரைவில் சந்திக்கப் போகிறாரே! அப்போதேனும்...

பத்மினி: திருமணமாகிவிட்ட போதிலும், அவர் தோன்றும் கடைசிப் படமல்ல இது. காத்திருந்து பார்ப்போமே?

மகாலிங்கம்: முன்பு வேலனாகத் தோன்றியவர் இன்று நாரதராக வருகிறார். பழைய முகம் என்றாலும் பழகிய குரலைக் கேட்கப் பலர் ஆவலுடன் இருப்பார்கள்.

சந்திரபாபு: 'ஐயோ, மச்சான் மன்னாரு' என்று அவர் பாடுவதும் ஆடுவதும் பாமரருக்குப் பிடிக்கும். ஆனால் பல காட்சிகளில் திரைக் கதைச் சகோதரர்களுடன் சேர்ந்திராமல் அவர் 'ஸ்டிரைக்' செய்திருப்பது ஏனோ? 'கால்ஷீட்' கொடுக்காத குறையோ?

இடைவேளை: சூடாக ஒரு கப் 'நரக' காப்பி கிடைக்குமானால்...



வசனம்: சிலேடைகள் கச்சிதமாக விழுந்துள்ளன பல இடங்களில். கசப்பும் தட்டுகிறது சில இடங்களில்.

புரட்சி: ஐந்தாறு பெண்கள் சேர்ந்துகொண்டு 'திலகத்தை' நையாண்டி செய்வதில் 'புரட்சி' வாடை வீசவில்லையா?

செலவு: ஏராளம். பலன் எதிர்பார்த்த அளவுக்கு இல்லையே?

மேக்கப்: விஷ்ணுவாகவும் பார்வதியாகவும் நடித்தவர்களை முறையே நீல பச்சை சாயங்களில் தோய்த்து எடுத்திருக்க வேண்டாம். இறுதிக் காட்சியில் பத்மினிக்கு மல்லவா பூசிவிட்டார்கள் பச்சை வர்ணத்தை!

நடனம்: 'செட்டு'க்காக ஒரு டான்ஸ். டான்ஸுக்காக ஒரு 'செட்' என்ற ரீதியிலே போய்க்கொண்டிருக்கும் தமிழ்ப்பட உலகில் யாரேனும் ஒருவர் துணிந்து இந்த 'எக்ஸ்ட்ரா'க்கள் அடிக்கும் கூத்தை நிறுத்த மாட்டாரா? தேவலோகம் வரையிலும் கூடக் காவடி தூக்கி வந்தும் கரகமாடியும் கழுத்தறுக்கும் அளவுக்கு இந்தப் பழக்கம் நமது படாதிபதிகளைப் பற்றியுள்ளதே! பத்மினியின் நடனம்—இதைவிடச் சிறப்பாக அவர் ஆடி நாம் கண்டிருக்கிறோம்.

செட்டுகள்: தேவலோகத்தில் ஓசியானிக் ஓட்டல் கட்டின மாதிரி.

ஒலிப்பதிவு: சிவாஜிக்கும் பத்மினிக்கும் மூக்கு அடைத்தது போல் பாட்டு ஒலிக்கிறதே, ஏன்?

டெக்னிக்: கனவுக் காட்சியை 'ஸ்லோ மோஷனில்' எடுத்திருப்பது நல்ல உத்தி. ஆனால் குமரக் கடவுளின் போர் முறைகள் அலாவுதீனும் அற்புத விளக்கும் படத்தை நினைவு படுத்துகின்றனவே. சிவாஜியின் ஆறு உண்மைத் தலைகளையும் பொய்யான அட்டைத் தலைகளையும் மாறி மாறிக் காட்டுவது அருவருப்பைத் தருகிறது.



நீளம்: கம்மிதான்; பெருமூச்சு விடுங்கள், தாராளமாக!

டைரக்ஷன்: வள்ளியைத் தேடி வேடனாக வந்த முருகன், அவள் தோழிகள் ஒவ்வொருவரையும் விழி பிதுங்க உற்றுப் பார்த்து ஆராய்வது—ஐயா டைரக்டரே! உமக்கு ஆபாசம் என்று தோன்றவில்லையா?

மொத்தத்தில்: சோதனை வள்ளிக்கு மட்டுமில்லை நமக்கும்தான், சில இடங்களில்!



க்ளாக்ஸோ

அருந்தி குழந்தைகள் நன்கு வளர்கின்றன



போதிய தாய்ப்பாலற்ற குழந்தைகளுக்கு க்ளாக்ஸோவே சிறந்த பாலுணவு. க்ளாக்ஸோ சுத்தமானது. எளிதில் ஜீரணமாகக் கூடியது. மேலும், குழந்தையின் நல்வளர்ச்சிக்கு அவசியமான இரும்புச்சத்தும், வைட்டமின் 'டி'யும் க்ளாக்ஸோவில் சேர்க்கப்பட்டுள்ளன. இலவசமாக க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம் பெற விரும்புவோர், 50 ந. பைசா தபால் வில்லைகளை (தபால்செலவிற்காக) மேற்கண்ட விலாசத்திற்கு அனுப்புங்கள்: க்ளாக்ஸோ, உட்ஸ் ரோடு, மதராஸ்-2

Glaxo



பாரெக்ஸ் — தாய்ப்பால் அல்லது புட்டிப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு, 4–5 மாதம் முதல் பாலுணவைத்தவிர பாரெக்ஸ் தானிய உணவும் அவசியம்.

க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்.

பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புது டில்லி   டிப்போக்கள்: ஸ்ரீநகர் • கௌஹாத்தி • விஜயவாடா



"நிலாச் சாப்பாட்டுக்கு நாங்கள் போகப் போகிறோம். என் சிநேகிதன் சங்கர் ஸ்வீட் எடுத்து வருகிறான். மற்றொருவன் கேஸரி எடுத்து வருகிறான் இன்னொருவன் பழங்கள் எடுத்துக் கொண்டு வருவான்."

"அதுசரி, நீங்கள், என்ன எடுத்துக் கொண்டு போகிறீர்கள்?"

"நான் என் குழந்தைகளை எடுத்துக் கொண்டு போவேன்."

★

இரண்டு பக்கமும் ஒட்டியவாறு



வீடுகள் இருக்க, மத்தியில் குடியிருப்பது மகா அவதியாகும். எந்த வீட்டுப்பேச்சை ஒட்டுக் கேட்பது என்பதே பெரிய சங்கடமாகி விடுகிறது.

ஒட்டுக்கேட்பவர்

★

மனைவி : உங்களுக்குக் கொஞ்சமாவது பரோபகார சிந்தை இருக்கா! கஷ்டப்படுகிறவர்களை என்றைக்கேனும் நீங்கள் காப்பாற்றி இருக்கிறீர்களா?

கணவன் : ஓ! உன் தகப்பனார் உனக்குக் கல்யாணம் செய்துவைக்க எவ்வளவு கஷ்டப்பட்டார். நான் வந்துதானே அந்தக் கஷ்டத்தை என் தலையில் கட்டிக் கொண்டேன்.

★

அதிகாரி (நாடகக் காரசிடம்) : என்ன ஐயா, இவ்வளவு குறைவாக



வசூல் காட்டுகிறீர்! 'பிரமாதமாக ஓடுகிறது' என் றெல்லாம் விளம்பரம் செய்கிறீரே, அது எப்படி?

நாடகக்காரர் : அதில் என்ன சார் தவறு? ஒவ்வொரு ஊரை விட்டும் எங்கள் நாடகம் எவ்வளவு ஜரூராக ஓடியது என்பதை நீங்கள் எங்கே பார்த்திருக்கப் போகிறீர்கள்!

"உங்களுக்குத் தலைக்கு மேல் கடன் இருந்ததே என்ன செய்தீர்கள்?"

"அதைவிட்டுச் சற்று நகர்ந்து நின்று கொண்டு விட்டேன்."

★

அந்தப் பிளாஸ்டிக் - ரப்பர் டப்பி



யில் மைசூர்ப்பாகு போட்டுவைத்திருந்தேன் பாருங்கள். முழுவதையும் பாழாய்ப் போன எலி தின்று விட்டது - மைசூர்ப்பாகு நீங்கலாக.

★

"டாக்டர் என் மனைவியை ஏதாவது தேகப் பயிற்சி செய்ய வேண்டும் என்றார். அதிலிருந்து ஏதேனும் சொன்னால் ஒரே பாய்ச்சலாகப் பாய்கிறாள் சொன்னதைக் கேட்காமல் எகிறிக் குதிக்கிறாள். அறுபது நாழியும் தலைகீழாக நிற்கிறாளே."

★

அன்பே! நீ உன் கடைக்கண்ணின்



ஒரு கோடியால் என்னைப் பார்க்கலாகாதா? ஏன் இப்படி நேருக்கு நேராகப் பார்க்கிறாய்? உன் விழிகளைக் கண்டாலே பயமாக இருக்கிறதே!

★

ஜோஸ்யர் : உங்கள் கணவரிடம் பகவன் நாமாவையே நினைத்துக் கொண்டிருக்கச் சொல்லுங்கள்.

அவள் : அவர் கேட்கமாட்டார்! அவர் எப்பொழுது பார்த்தாலும் ராஜிநாமாவைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

★

மானேஜர் (பியூனிடம்) : என் பென்ஸில் எங்கே?

பியூன் : அதோ, காதில்இருக்கிறதே.

மானேஜர் : எந்தக் காதில் என்று சீக்கிரம் சொல்லு. இரண்டு காதுகள் இருக்கின்றனவே?



சிரிக்காதே!



திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

14

மனிதனுடைய ஆடம்பர வாழ்க்கை எப்படி முடிகிறது என்பதை உள்ளத்தில் தைக்கும்படி பாடுகிறார் திருமூலர்.

வாழ்வு நிலையற்றது. எனவே இப்பொழுது இக்கணமே இறைவனிடத்தில் உள்ளத்தைச் செலுத்துங்கள் என்பதை உணர்த்துவதற்காக "யாக்கை நிலையாமை"யைப் பலவிதத்திலும் எடுத்துக் கூறுகிறார்.

மனித சமூகத்தில் சிறப்புக்கள் பெற்ற மகனை 'நம்பி' என்று சொல்வது மரபு. முனிவர் அப்படிப்பட்ட ஒரு நம்பியின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லுகிறார்.

மன்றத்தே நம்பி
  மாடம் எடுத்தது.

[மன்றம்—பல தெருக்கள் கூடுகிற சிறந்த இடம். அப்படிப்பட்ட உயர்வான ஓர் இடத்தைச் சம்பாதித்து; நம்பி—இந்தத் தலைமகன். மாடம் எடுத்தது—மாளிகை கட்டி நிறுத்தினான். தொழிலைக் கருதி 'எடுத்தது' என்று அஃறிணையில் முடிகிறது வினைமுற்று.]

மன்றத்தே நம்பி
  மாடம் எடுத்தது ;
மன்றத்தே நம்பி
  சிவிகைபெற்று ஏறினான் –

[மன்றத்தே—பலர் அறியும்படியாகவே, பொது இடங்களில் எல்லாம். சிவிகை பெற்று ஏறினான்—பல்லக்கில் ஏறிச் சென்றான்.]

மன்றத்தே நம்பி
  சிவிகைபெற் றேறினான் ;
மன்றத்தே நம்பி
  முக்கோடி வழங்கினான் ;

மேலும் நம்முடைய நம்பியானவன் செல்வம் மிகுந்து பொது மக்களுக்கு ஆடம்பரத்தோடு மூன்று கோடிப் பொன் நன்கொடை வழங்கினான்.

இப்படியெல்லாம் ஊரார் அறியும்படி செயல்கள் புரிந்த நம்பி,

சென்றத்தா என்னத்
  திரிந்திலன் தானே !

[சென்றத்தா என்ன — சென்று அத்தா என்ன. சென்று — போய் ஒழிந்து. அத்தா என்ன — 'அப்பா அப்பா' என்று மற்றவர்கள் கூவிக் கதறி அழைத்தும். திரிந்திலன் தானே —திரும்பி வரவில்லையே. போனவன் போனவன்தான். இறந்தொழிந்தான்.]

மன்றத்தே நம்பி
  மாடம் எடுத்தது :
மன்றத்தே நம்பி
  சிவிகைபெற் றேறினான் :
மன்றத்தே நம்பி]
  முக்கோடி வழங்கினான் :
சென்றத்தா என்னத்
  திரிந்திலன் தானே !

இதுவும் நாடகப்பாணியில் அமைந்த பாட்டு.

இந்த உடம்புக்குள் தொண்ணூற்றாறு தத்துவங்கள் இருந்து செயல் புரிகின்றன என்று நம்முடைய நாட்டு ஞானிகள் சொல்லி யிருக்கிறார்கள். இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களும் உடம்பில் உயிர் இருக்கும் வரைதான் வேலை செய்யும். உயிர் நீங்கியதும் இந்தத் தத்துவங்களும் வேலை செய்யாமல் நின்றுவிடும். அதாவது தொண்ணூற்றாறும் சரியாக வேலை செய்வதே உயிரின் இயக்கம். இதைப் பாடுகிறார் முனிவர்.

முப்பதும் முப்பதும்
  முப்பத்து அறுவரும்
செப்ப மதிளுடைக்
  கோயிலுள் வாழ்பவர்

[செப்ப மதிலுடைக் கோயில்—அழகான மதிற் சுவர் கட்டிய ஓர் அரச மாளிகை. இந்த அரண்மனையுள்ளே தொண்ணூற்றாறு ஏவலாளர்கள் வேலைசெய்கிறார்கள். முப்பது,முப்பது, முப்பத்தாறு என்பது தொண்ணூற்றாறு தத்துவங்கள்.]

யோகமுறைப்படி இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களும் 30, 30, 36 என்று மூன்று நிலைகளாக நின்று இந்த உடம்புக்குள்ளே கருவிகளை இயக்குகின்றன. பேசுதல், கேட்டல், உணவை உட்கொள்ளுதல், ஜீரணம் செய்தல் முதலிய பல தொழில்கள் இந்த உடம்புக்குள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றையே தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்றனர் நம்முடைய பெரியோர்கள்.

தத்துவங்களைப் பணியாளர்களாக வைத்து உயர்நிலையில் பாடுகிறார் முனிவர்.

செப்ப மதிலுடைக்
கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும்
ஓட்டெடுத் தார்களே

[சிதைந்தபின்—உயிர் நீங்கி இந்த உடல் விழுந்ததும், ஒப்ப அனைவரும்—அந்தத் தொண்ணூற்றாறு பேரும் சேர்ந்து ஒன்றாகவே. ஓட்டெடுத்தார்களே—ஓட்டம் எடுத்தார்கள். ஒரே ஓட்டமாக ஓடிவிட்டார்கள், அரசன் ஒழிந்ததும் ஏவலாளர்கள் ஓடி விடுவதுபோல. ஓட்டு—ஓட்டம்.]

முப்பதும் முப்பதும்
முப்பத் தறுவரும்
செப்ப மதிலுடைக்
கோயிலுள் வாழ்பவர்;
செப்ப மதிலுடைக்
கோயில் சிதைந்தபின்,
ஒப்ப அனைவரும்
ஓட்டெடுத் தார்களே!

உடலில் உயிர் இருக்கும் வரை தொண்ணூற்றாறு பேர் இதனுள் பரிபாலனம் செய்கிறார்கள். உடல் சிதைந்ததும் அத்தனை பேரும் ஓடி விடுவார்கள். எனவே இந்த உடம்பு திடமாக இருக்கும்போது இதனுள் மெய்ப்பொருளைக் கண்டு உய்ய வேண்டும் என்பதே முனிவருடைய அறவுரை.





புருட்னிக்கைக் குளிரச்செய்து
ரேடியாகப் பருகுங்கள்.
நண்பர்களுக்கும் அளியுங்கள்.

புத்தம் புதிய பழரச பானம் ருசிமிக்கது, உற்சாகமூட்டுவது!

மாங்கோ, கிரேப், பைன் ஆப்பிள் மற்றும் ஆரஞ்சு பானங்கள்—எல்லாமே தனிச் சிறப்பு வாய்ந்தவை!



fruitnik

புருட்னிக்

கரியமிலவாயு கலவாதது.

புருட்னிக் ப்ராடக்ட்ஸ்

பூந்தமல்லி ஹைரோடு, சென்னை-10

EP



14
நரிவேட்டை
கதை: ஜெயந்தி • சித்திரம்: விநு
இன்ஸ்பெக்டரைக் கண்டதும் ஓடிவிடும் ரவி, தன் பெட்டியை ஹோட்டல் டெலிபோனில் விட்டுச் செல்கிறான். அதனுள் போட்டோ பிலிம் சுருள்கள் இருப்பதைக் கண்ட வின்மி சந்தேகம் கொண்டு பெட்டியைக் குமாரிடம் சேர்ப்பிக்கிறாள்.
அன்றிரவு தன் பெட்டியைக் காணாது ஆத்திரமடைகிறான் ரவி.
பயந்துபோன வின்மி மெல்லத் தன்னை சுதாரித்துக் கொண்டு...
லக்ஷ்மி! பெட்டி எங்கே போய் விடும்? நன்றாகத் தேடிப் பார்!
ஒரு வேளை இன்று தங்கள் அறையைக் காலி செய்தவர்களில் யாரேனும் தவறுதலாக...
ஏமாற்றும் சாகசங்களை என்னிடம் காண்பிக்க வேண்டாம்!
வின்மி! நான் பொல்லாதவன்! உனக்குத் தெரியுமல்லவா?
வீரிட்டலறும் வின்மியின் வாயைச் சட்டென்று பொத்துகிறான் ரவி.
கூச்சல் வேறு போடுகிறாயா? கழுதை!



ரவி ஒரு சோபாவில் விஸ்பியைத் தள்ளிவிட்டு....
இது உனக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்!
அடப்பாவி! என் செல்வத்தை என்னடா செய்தாய்?
என்னிடம் விளையாடக் கூடாதென்று இப்போதாவது புரிந்து கொண்டாயா? நான் வருகிறேன்!
இந்த ரகளையைக் கேட்டுச் சில தலைகள் எட்டிப் பார்க்கின்றன.
தன் ஹோட்டலில் தங்கியுள்ள அவர்களை அமைதியாக இருக்கக் கோருகிறாள் விஸ்பி.
எனக்கு ஒன்றுமில்லை! கவலை வேண்டாம்!
ஸில்வானியா ஹோட்டலில்...
குமார்! எதற்கு என்னை அவ்வளவு அவசரமாக அழைத்தீர்கள்?
உடனடியாக இந்த பிலிம் சுருள்களை டெவலப் செய்ய வேண்டுமே
நடந்தவற்றைக் குமார் விளக்கியதும்...
நடுநிசியில் நடக்கிற காரியமா? நாளைக்காலை முதல் வேலையாக இதைக் கவனிக்கிறேன்.
...சரி!
மறுநாள்...
இந்தப் போட்டோக்களைப் பாருங்கள், குமார்! நம் நாட்டின் பாதுகாப்பு ரகசியங்கள்! பாரத தேசத்திலுள்ள விமான நிலையங்கள், கப்பல் தளங்கள் ராணுவ முகாம்கள், போர்த் தொழிற்கூடங்கள் எல்லாவற்றையும் படம் பிடித்திருக்கிறார்களே!
நான் எதிர் பார்த்ததுதான்!


இன்ஸ்பெக்டர்! என்னுடன் ஏதாவது முக்கியமாகப் பேச வேண்டியதிருந்தால் டெல்மோ ஹோட்டலுக்குப் போன் செய்யுங்கள். அங்குதான் நான் போகிறேன்.
ஆகட்டும், ஆனால் உங்கள் மனத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அது பறி போய் விட்டால் இன்ஸ்பெக்டராகிய என்னால் கூட மீட்க முடியாது!
லின்மியைக் காண வந்த குமார் அவளுடைய புது மாதிரியான தோற்றத்தைக் கண்டு வியக்கிறான்.
லின்மி, ஒரு கணம் அடையாளமே புரியவில்லை எனக்கு!
இந்தப் பாணி உடை தான் உனக்கு ரொம்பப் பொருத்தம். எப்போதுமே இப்படி அலங்கரித்துக் கொள்ளக் கூடாதா?
போதும் உங்கள் புகழ்ச்சி...
...வம்பு வளர்க்க எனக்கு நேரமில்லை. நீங்கள் வந்த விஷயம்?
லின்மி! உன் கோபம் எனக்குப் புரிகிறது. அந்தப் பிலிம் சுருள்கள் நீ குற்றமற்றவள் என்பதை நிரூபித்து விட்டன.
லின்மி! உன்னிடம் ஒரு பெரிய உதவி கோரி வந்திருக்கிறேன்.
தொடரும்

நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் விளங்க

பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம்

பவுடரை உபயோகியுங்கள்




ஆம், நறுமணமுள்ள புத்துணர்ச்சியளிக்கும் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரை உபயோகித்தால் மிக உஷ்ண காலத்திலும்கூட நீங்கள் குளுமையுடனும் புதுமலர்ச்சியுடனும் இருக்கலாம். இந்த மிருதுவான பவுடரை உங்கள் உடம்பின்மேல் தூவிக்கொண்டால் அது வியர்வையை உறிஞ்சி உங்களை நாள்முழுவதும் காலையில் இருக்கும் புதுமலர்ச்சியுடனும், நறுமணத்துடனும் விளங்கச் செய்யும். நீண்ட நேரம் புத்துணர்ச்சியுடன் இருக்க எப்பொழுதும் பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடரையே உபயோகியுங்கள்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப் பெற்றது)

JWT-P-1276

மணிபல்லவம்



13 - வேங்கை சீறியது

தந்தையார் உடன் அனுப்பியிருந்த ஊழியன் நிழலைப் போல் விடாமல் அருகிலேயே இருந்ததனால் நெய்தலங் கானலின் அழகிய கடற்கரையில் சுரமஞ்சரியும், வசந்தமாலையும் தங்களுக்குள் மனம் விட்டுப் பேசுவதற்காகத் தவித்துக் கொண்டிருந்தவற்றில் எதையுமே பேச முடியவில்லை.

சுரமஞ்சரி இளங்குமரனைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள். பெண்ணின் மனம் சந்தனப் பேழையைப் போன்றது. சந்தனப் பேழையில் சந்தனம் இருந்தாலும் மணக்கும். சந்தனம் இல்லா விட்டாலும் அது இருந்ததற்கு அடையாளமான மணம் கமழும். மனத்துக்குப் பிரியமானவர் அருகில் இருந்தாலும் விலகி இருந்தாலும் அவரைப் பற்றிய இனிய நினைவுகளை எண்ணுமலிருக்கப் பெண்ணால் முடிவதில்லை. சுரமஞ்சரியின் மனத்திலும் சந்தனப் பேழைபோல் இளங்குமரனின் நினைவுகள் மணந்தன.

நா. பார்த்தசாரதி

'பின்னால் துரத்திக் கொண்டு சென்ற நகைவேழம்பரால் ஓவியனுக்கு ஒரு துன்பமும் ஏற்பட்டிருக்காதானால் அவரிடம் தெரிவிப்பதற்கென நான் சொல்லி யனுப்பிய செய்தி அவரை எட்டியிருக்கும்' என்று நினைத்தாள் அவள்.

'நான் இடைவிடாமல் இளங்குமரனையே நினைத்துக் கொண்டிருப்பது ஏன்? எப்படி இந்தப் பித்துக் கொண்டேன்?' என்று தனக்குத்தானே ஒரு கணம் விலகி நினைக்கும்போது அவளுக்கு வெட்கமாகக் கூட இருந்தது.



'தன்னுடைய நெஞ்சத்தில் எனக்குச் சிறிதும் இடமளிக்காமல் என்னைக் கடிந்து ஒதுக்கும் அவர் என்னுடைய நெஞ்சில் புகுந்து இப்படி நினைவுகளாகத் தங்கி வேதனைப் படுத்துகிறாரே; வெட்கமில்லையா அவருக்கு?' என்று காதலனைப் பிரிந்த காதலி துயரப்படுவதாக வள்ளுவர் பெருமான் எழுதியுள்ள அழகிய குறள் ஒன்று சுரமஞ்சரிக்கு நினைவு வந்தது.

"தம்நெஞ்சத்(து) எம்மைக் கடி
கொண்டார் நாணார்கொல்
எம் நெஞ்சத்து ஓவா வரல்."

இந்தக் குறளின் தலைவியாகத் தன்னையும், தலைவனாக இளங்குமரனையும் கற்பனை செய்து பார்த்துக் கொண்டாள் சுரமஞ்சரி. கற்பனை மனத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் அது உண்மையல்ல, கற்பனை மட்டுமே என்பதால் துயரமும் அதிலிருந்தே பிறந்தது. 'என்னைப் பற்றி நினைத்து மகிழாதவருக்கு என் நினைவில் மட்டும் அடிக்கடி நுழைய உரிமை ஏது?' என்று குறளில் வந்ததைப் போல் எண்ணினாலும் 'அவரைக் கடிந்து கொள்ளத் தனக்கு என்ன உரிமையிருக்கிறதென்ற' வினாவும் அவள் மனத்திலேயே எழுந்தது.

அவர்கள் உட்கார்ந்திருந்த அதே நெய்தலங் கானற் கரையின் கோடியில் தான் காவிரி கடலோடு கலக்குமிடமும் இருந்தது. அந்தஇடத்தில் சோமகுண்டம் சூரிய குண்டம் என்று இரண்டு ஏரிகளும் அவற்றின் கரையில் காமவேள் கோட்டம் என்னும் கோயிலும் அமைந்திருந்தன. இந்தப் பிறவியில் இன்பத்தையும் மறுமையில் போக பூமியையும் தரக் கூடிய புண்ணியப் பயன் வாய்ந்த இந்த ஏரிகளுக்குப் பூம்புகார் மக்கள் இருகாமந் திணையேரி என்று பெயர் வழங்கினார்கள். மனம் விரும்பிய நாயகனை அடைவதற்கும், அடைந்த நாயகனைப் பிரியாமல் இருப்பதற்கும், இந்த ஏரிகளில் நீராடிக் காமவேள் கோட்டத்தை வணங்கி வலங் கொண்டு வழிபடுவது பூம்புகார்ப் பெண்களின் வழக்கமாயிருந்தது. இதனால் இருகாமத்திணை ஏரிகளின் கரையிலும் காமவேள் கோட்டத்திலும் இளம்பெண்களின் பெருங் கூட்டத்தை எப்போதும் காணலாம். இரண்டு பிறவிகளிலும் நுகர்வதற்குரிய ஆசைகளை இணைத்தலால் இரு காமத்து இணை ஏரி என்ற பெயரைத் தாங்கிக் கொண்டிருக்கும் இந்த இடத்துக்கு இதற்கு முன் சுரமஞ்சரி பல முறை சென்றிருக்கிறாள். ஆனால் தன் மனத்துக்குள் ஒரு விருப்பத்தையோ, அந்தரங்கமான குறிக்கோளையோ அமைத்துக் கொண்டு அதற்கு வேண்டுதலாக இதுவரை அவள் சென்றதில்லை. இப்போது அப்படிப் போக வேண்டிய அவசியம் வந்திருப்பதை அவள் உணர்ந்தாள். 'நீராடியும், வலம் வந்தும், வழிபட்டும், இன்னொருவருடைய மனத்தை நம் பக்கம் இழுத்து விடுவதற்கு இயலுமோ, இயலாதோ, அப்படிச் செய்கின்ற சடங்குகளால், செய்யப்படுகிற செயலின் மேல் நமக்குள்ள பக்தியும் சிரத்தையும் வளர்ந்து விடுகிறது. அதற்காகவாவது எல்லாரையும் போல நானும் அவற்றை விட்டு விடாமல் செய்ய வேண்டும்' என்று மனத்துக்குள் முடிவு செய்து கொண்டாள் சுரமஞ்சரி.

"வந்து வெகு நேரமாகி விட்டதே? புறப்படலாமா?" என்று வசந்தமாலை மாளிகைக்குத் திரும்புவதை நினைவூட்டினாள்.

"இப்போது திரும்பலாம். ஆனால் நாளைக்கு மறுபடியும் நாம் இந்தப் பக்கமாக வரவேண்டிய காரியமிருக்கிறது" என்று கூறிக்கொண்டே சுரமஞ்சரி எழுந்தாள்.

இருவரும் தேரில் ஏறிக்கொண்டதும் ஊழியன் தேரைச் செலுத்தினான். மணிகளை ஒலித்துக் கொண்டு தேர் விரைந்தது. சுரமஞ்சரியும், வசந்தமாலையும் மாளிகையை அடைந்தபோது முன் கூடத்தில் தந்தையார் அமர்ந்திருந்தார். மாலையில் பாண்டிநாட்டுக் கொற்கையிலிருந்தும், சேரநாட்டு விழிஞத்திலிருந்தும் வாணிகக் கப்பல்கள் வந்து துறை சேர்ந்திருந்தன போலும். தந்தையாருக்கு முன்னால் முத்துக் குவியலும், முற்றிப் பருத்து நீண்ட யானைத் தந்தங்களும் காட்சியளித்தன. அவற்றைத் துறைமுகத்திலிருந்து சுமந்து வந்த கப்பல் ஊழியர்கள் சுற்றிலும் அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். தந்தையார் அவர்களிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்.

இவற்றில் ஒன்றும் புதுமை இல்லை. அடிக்கடி அந்த மாளிகையில் தென்படுகிற காட்சிதான். சுரமஞ்சரியும், வசந்தமாலையும் உள்ளே போய்த் தங்களுக்காகக் காத்திருந்த தாயுடனும், வானவல்லியுடனும் உண்பதற்குச் சென்றார்கள்.

"இன்றைக்கு முத்துக் கப்பல் வந்திருக்கிறது அம்மா! நல்ல முத்துக்களாகத் தேர்ந்தெடுத்து எனக்கு ஒரு மாலை செய்து கொள்ளப் போகிறேன்" என்று வானவல்லி தாயிடம் கூறினாள்.

"உனக்குத்தான் நாலைந்து முத்து மாலைகள் இருக்கின்றனவே. இன்னும் எதற்கு...?"

"முத்துக்களில் ஒவ்வொன்றும் ஒரு சாதி அம்மா! இந்தக் கப்பலில் இன்றைக்கு வந்திருக்கிற முத்துக்கள் எல்லாமே நன்றாக விளைந்தவை. பொதிகளை இறக்கிப் பிரித்துக் குவித்தவுடனே நான் போய்ப் பார்த்தேன்."

"முத்துக்களைப் புகழ்ந்து நீ இவ்வளவு பேசுகிறாயே வானவல்லி! உன் பக்கத்தில் அமர்ந்து உண்ணுகிற சுரமஞ்சரியும் அவள் தோழியும் ஏன் இப்படிப் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள்?" என்று சொல்லி நகைத்துக் கொண்டே சுரமஞ்சரியையும், வசந்தமாலையையும் உற்றுப் பார்த்தாள் அன்னை.

"சுரமஞ்சரிக்கு இப்போது எதற்குமே நேரமில்லையம்மா! முன்பெல்லாம் மாலை வேளைகளில் மேன்மாடத்துக்குச் சென்று என்னை வேய்ங்குழல் வாசிக்கச் சொல்லி எதிரே அமர்ந்து நேரம் போவது தெரியாமல் கேட்பாள். இப்போதோ அவளும் அவள் தோழியும் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே வெளியே கடற்கரைக்கும், காவிரித் துறைக்கும் போகத் தொடங்கி விட்டார்கள். திடீரென்று மௌனமாகி விடுவதற்கும், திடீரென்று சிரிப்பதற்கும் அவளுக்கு ஏதேதோ புதுப் புதுக் கவலைகளும், மகிழ்ச்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன அம்மா" என்று முத்து

மாலையில் தொடங்கிய பேச்சு சுரமஞ்சரியைப் பற்றித் திரும்பியது.

தாங்கள் பழகுகிற முறையில் தாயும், சகோதரியும் மேலும் வேறுபாடு காணலாகாதே என்பதற்காகச் சுரமஞ்சரி அவர்களோடு சிரித்துப் பேச முயன்ருள். தோழியும் பேசினுள். ஆனுல் சுரமஞ்சரியும், தோழியும், பேசிய பேச்சிலும், சிரித்த சிரிப்பிலும், இயற்கையான உற்சாகம் இல்லை என்பதைத் தாயினுல் தெரிந்து கொள்ள முடிந்தது. 'இந்தப் பெண் எதையோ மனத்துக்குள் வைத்துக் கொண்டு கலங்குகிருள்' என்பது பெற்ற உள்ளத்துக்குப் புரிந்தது. சமயம் பார்த்துப் பெண்ணிடமிருந்து அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணினுள் தாய். அந்த மாளிகையில் அவளுக்கு இருக்கிற ஒரே மன நிறைவு, 'நம்முடைய பெண்கள் மகிழ்ச்சியோடு இருக்கிருர்கள்' என்பதுதான்! அதை இழக்க அந்தத் தாயுள்ளம் விரும்பாததில் வியப்பில்லை. தான் பெற்றவர்களின் மகிழ்ச்சியிலிருந்து தன்னுடைய மகிழ்ச்சியைத் தேடிப் பெறுகிறவள் தாய். அவள் தேடுகிற உள்ளங்களிலெல்லாம் மகிழ்ச்சியில்லையானுல் அவளுக்கும் மகிழ்ச்சி இல்லை.

உணவு முடிந்ததும் முத்துக் குவியலிலிருந்து நல்முத்துக்களைப் பொறுக்கி எடுக்கத் தாயையும் துணைக்கு அழைத்தாள் வானவல்லி. தான்மட்டும் தனியாகப் போனுல் தந்தையார் சீறி விழுவார் என்பது அவளுக்குத் தெரியும். தாயோ சுரமஞ்சரியையும், வசந்தமாலையையும் உடனழைத்தாள்.

"நீயும் வா சுரமஞ்சரி! உனக்கும், உன் தோழிக்கும் கூட மாலைக்கு முத்துக்கள் தேர்ந்தெடுக்கலாமே. ஏன் இப்படி மகிழ்ச்சியில்லாமற் காணப்படுகிருய்? என்னிடம் மனம் திறந்து சொல்லக் கூடாதா?" என்று கேட்டாள் தாயார்.

"அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா! களைத்துப் போயிருப்பதால் உங்களுக்கு அப்படித் தோன்றுகிறேன் போலிருக்கிறது. நீங்கள் போய் முத்துக்களைப் பாருங்கள். என்னிடம் வேண்டிய முத்து மாலைகள் இருக்கின்றன. நான் உறங்கப் போகிறேன், தளர்ச்சியா யிருக்கிறது" என்று கூறித் தோழியோடு தன் மாடத்துக்குப் புறப்பட்டுவிட்டாள் சுரமஞ்சரி.

மாடத்தை அடைந்து தானும், தன் தலைவியும் தனிமை பெற்றதும் வசந்தமாலை, "ஏனம்மா, நாளைக்கு மறுபடியும் நெய்தலங்கானலுக்குப் போக வேண்டுமென்றீர்களே? எதற்காக அங்கே போக வேண்டும்?" என்று கேட்டாள்.

"கடற்கரையிலேயே உன்னிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்தேனடி, வசந்தமாலை! தந்தையார் தேர் ஓட்டுவதற்காக நம்மோடு அனுப்பியிருந்த ஊழியன் நாம் எப்போது வாய் திறந்து பேசப் போகிறோம் என்று செவிகளைக் கூர்மையாக்கிக் கொண்டு பக்கத்திலேயே பழி கிடந்தான். அதனுல் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. நாளைக்குக் காலையில் விடிவதற்கு முன்பே துயிலெழுந்து யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் நடந்தே நெய்தலங் கானலுக்குப் புறப்பட்டு விட வேண்டும். கதிரவன் உதயமாவதற்கு முன்பே, சோமகுண்டம், சூரியகுண்டம், இரண்டு ஏரிகளிலும் நீராடிக் காமன் கோவிலை வலம் வந்து வணங்கிவிட்டுப் போனது தெரியாமல் மாளிகைக்குத் திரும்பிவிட வேண்டும்."

இதைக் கேட்டு வசந்தமாலை நளினமாகச் சிரித்தாள். சிரித்துக் கொண்டே சுரமஞ்சரியின் கண்களைப் பார்த்தாள்.

"அந்த இரண்டு ஏரிகளிலும் பொதுவாக எல்லாரும் நீராடுவதில்லையே, அம்மா! மனத்துக்குள் ஏதாவதொரு ஆசையை உருவேற்றிக் கொண்டு அது விளையவேண்டுமென்று அல்லவா அங்கு நீராடிக் காமன் கோவிலை வலம் வரு


PHILLIPS பிலிப்ஸ் ஸைக்கிள்
நேர்த்தியான அமைப்பும், அழகிய தோற்றமும் கொண்ட பிலிப்ஸ் ஸைக்கிள், இன்றைய கருத்துள்ள இளைஞர்களின் தேவைகளுக்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது. உறுதியான எஃகினால் தயாரிக்கப்படுவதால் எவ்வித கரடுமுரடான உபயோகத்திலும் உழைக்கவல்லது.
பிலிப்ஸ் ஸைக்கிளில் சவாரி செய்வது மாயக் கம்பளத்தில் செல்வதுபோல்!
70 வருஷங்களாக உலகப்பிரசித்தி பெற்ற பிலிப்ஸ் ஸைக்கிள் இப்பொழுது டி. ஐ. ஸைக்கிள்ஸாரின் நவீன தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது.
டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா, மதராஸ்
PHILLIPS
JWT TIC/PH-501a



வார்கள்? உங்களுக்கும், எனக்கும் இப்போது உடனே அந்த ஏரிகளில் நீராடித் தீரவேண்டிய அவசரம்ஒன்றுமில்லையே?''

''அப்படியானால் நீயும், நானும் ஆசைகளே இல்லாத மனத்தையுடையவர்களென்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா வசந்தமாலை ?''

''அதற்குச் சொல்லவில்லையம்மா, இரு காமத்தினை ஏரியில் நீராடிக் காமன் கோவிலை வலம் வருகிற ஆசை வேறு வகையைச் சேர்ந்தது. அங்கே நம்மைக் காண்கிறவர்கள் குறும்பு பேசி நகைப்பார்கள்....''

''குறும்புப் பேச்சுக்கும் நகைப்புக்கும் பயந்து நாணுவதாயிருந்தால் எந்தப் பெண்ணும் அங்கே போகாமல் அல்லவா இருக்க வேண்டும்? பொழுது புலர்ந்தால் நகரில் உள்ள பெண்களின் கூட்டமெல்லாம் அங்கேதானே போய்க் கூடுகிறது ?''

வசந்தமாலை பதில் கூறாமல் சிரித்துக் கொண்டே தலைவியின் மேல் பதியவிட்ட பார்வையை மீட்காமல் இரு விழிகளையும் மலர விரித்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அந்தப் பார்வை தாங்காமல் சுரமஞ்சரி நாணிக் குழைந்தாள்.


''என்னடி வசந்தமாலை? எதற்காக இப்படிப் பார்க்கிறாய் ?''

''ஒன்றுமில்லை ! உங்களுடைய ஆசைகளிலும், தோற்றத்திலும் புதுமைகள் பிறந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறேன் அம்மா ! நீங்கள் எவ்வளவோ மாறி விட்டீர்கள். உங்களுடைய பிடிவாதமான உறுதிகளையும், செருக்கையும், எங்கேயோ, தோற்கக் கொடுத்து விட்டீர்கள்...''

இதைக் கேட்டுச் சுரமஞ்சரி மேலும் நாணமடைந்தாள். அவள் கைகள் பக்கத்தில் வைத்திருந்த பூக்குடலையிலிருந்து ஒரு செந்தாமரைப் பூவை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தன. தாமரைப் பூவின் மெல்லினஞ் செவ்விதழ்களுக்கும் அவளுடைய கைகளுக்கும் வேறுபாடு தெரியாத விந்தை எழிலைப் பார்த்து, கை எது தாமரைப் பூ எது என்று மயங்கிக் கொண்டிருந்த வசந்தமாலை விரல்களிலிருந்த மோதிரங்களைக் கொண்டு கையை அடையாளம் கண்டாள். தன் தலைவியிடம் வியந்து கூறலானாள் அவள் :

''கமலத்தைப் பற்றியிருக்கும் இந்தக் கர கமலங்களைப் பிடிக்கப் போகிறவர் பாக்கியசாலியாகத்தான் இருக்க வேண்டும் அம்மா.''

''இல்லையே தோழீ ! அந்தப் பாக்கியசாலி இந்தக் கைகளையும் உதறிவிட்டுச் செல்கிற கல்நெஞ்சுக்காரராக அல்லவா



''இவர் ஏழை என்பதற்கு இதை விட அத்தாட்சி வேறு என்ன வேண்டும் ?''

இருக்கிறார் ?'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள் சுரமஞ்சரி.

அப்போது கீழே மாளிகையின் முன்புறத்தில் ஒருநாளுமில்லாத புதுமையாய் நகைவேழம்பர், தந்தையாரிடம் இடி முழக்கம் போன்ற குரலில் உரக்கப் பேசும் ஓசை மேன்மாடத்தையும் எட்டியது. தந்தையாரின் பதில் கேட்கவில்லை. ஆனால் எல்லை கடந்து சீறி ஒலிக்கும் நகைவேழம்பரின் குரலோ மாளிகையையே அதிரச் செய்து கொண்டிருந்தது. 'இந்த இரவு நேரத்தில் இவர் எதற்காக இப்படிப் பேய்க் கூப்பாடு போடுகிறார் ? யாருடைய குடி முழுகி விட்டது இப்போது ? என் தந்தையையே எதிர்த்துப் பேசுகிற அளவுக்கு இவரிடம் துணிவு வளர்ந்து விட்டதா? கீழே போய் என்னவென்று பார்த்து வா, வசந்தமாலை !'' என்று தன் தோழியை அனுப்பினாள் சுரமஞ்சரி. தானும் தன் தோழியும் பேசிக் கொண்டிருந்த பேச்சின் இனிய நினைவுகளிலிருந்து கீழே எழுந்த கூப்பாடு தங்களைக் கலைத்துவிட்டதே என்ற வருத்தத்தால் நகைவேழம்பர் மேல் சுரமஞ்சரிக்கு ஏற்கெனவே இருந்த சினம் பெரிதாய் மூண்டது.

கீழே சென்ற வசந்தமாலை சிறிது நேரத்தில் திரும்பி வந்து கூறினாள் :

''பிரளய காலமே முன்னால் வந்து சீறிக் கொண்டு நிற்பதுபோல் உங்கள் தந்தையாருக்கு முன் கூப்பாடு போட்டுக் கொண்டு நிற்கிறார் அம்மா நகைவேழம்பர். அவரைப் பார்க்கவே பயங்கரமாயிருக்கிறது. எங்கேயோ செம்மையாகத் தோல்வியடைந்து பூசைக்காப்பு வாங்கிக் கொண்டு வந்திருப்பார் போலிருக்கிறது. அடிபட்ட புலிபோலச் சீற்றம் கொண்டு அலைபாய்கிறார். இவ்வளவுக்கும் அசைந்து கொடுக்காமல் உங்கள் தந்தையார் கட்டுப்பட்டு அடங்கி

கிறார். அந்த அரைக் குருட்டு அவலட்சணத்துக்குப் பணிந்து பேசுகிறார்.''

''என்ன அநியாயமடீ இது? நான் போய்ப் பார்க்கட்டுமா?'' என்று கேட்டாள் சுரமஞ்சரி.

''உங்களால் பார்க்க முடியாதம்மா! தந்தையார் அவரை இழுத்துக் கொண்டு தமது அந்தரங்க மண்டபத்துக்குப் போய்க் கதவை அடைத்து விட்டார்.''

''ஐயையோ! அந்த ஒற்றைக் கண் வேங்கை தனிமையில் தந்தையாரை என்ன செய்தாலும் கேள்வி கேட்பார் இல்லையே?'' என்று பதறினாள் சுரமஞ்சரி.

''என்ன ஆனாலும் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை அம்மா! அவர்கள் இருவருமே எவரையும் நெருங்க விடாமல் தனித்துப் பேசப் போயிருக்கிறார்களே! நாம் என்ன செய்வது?'' என்றாள் தோழி.

14 - நேருக்கு நேர்

அமைதியான இரவு நேரத்தில் பட்டினப்பாக்கத்து மாளிகையில் பெருநிதிச் செல்வரின் தனிமையான அந்தரங்க மண்டபத்தில் அவரும், நகைவேழம்பரும் நேருக்கு நேர் நின்றார்கள். பெருநிதிச் செல்வரின் அளவிடமுடியாத நிதிச் செல்வமும் அந்த மண்டபத்தில்தான் இரத்தினக் குவியலாகவும், முத்துக் குவியலாகவும், தந்தங்கள் பட்டுப் பீதாம்பரங்கள், அணிகலன்களின் குவியலாகவும், பொற்காசுகளாகவும் குவிந்து கிடந்தன.

மண்டபத்துக்குள் கீழே கிடந்த இரத்தினக் குவியலிலிருந்து ஒரே ஒரு பெரிய சிவப்புக்கல் நகைவேழம்பருடைய முகத்திலும் போய்ப் பதிந்து கொண்டு மின்னுவது போல் அவரது ஒற்றைக்கண் சிவந்து



குரூரமாகமின்னியது. பெருநிதிச்செல்வர் தணிந்த குரலில் அவரிடம் கேட்டார் :

''இன்றைக்கு என்ன இவ்வளவு சீற்றம்? பிரளயம் புகுந்தது போல் புகுந்து மாளிகையையே ஒரு கலக்குக் கலக்கி விட்டீர்களே....?''

''எனக்கு உங்கள்மேல் அடக்க முடியாத கோபம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாளிகையையும், உங்களையும், இங்கு குவிந்து கிடக்கும் செல்வத்தையும் அழித்தொழித்துவிட்டுப் போய்க் காவிரியில் தலை முழுக வேண்டும் போல் அவ்வளவு ஆத்திரத்தோடு வந்தேன்.''

''காரணம் என்னவோ?''

''காரணமா? இதோ இந்தக் கையைப் பாருங்கள், தெரியும்!'' நகைவேழம்பர் தமது வலது கையைத் தூக்கிக் காண்பித்தார். மணிக்கட்டுக்குக் கீழே முழங்கையின் நடுவே ஒரு சுற்றுச் சிவந்து தடித்து வீங்கியிருந்தது அந்தக் கை.

''இந்தக் கை ஒத்துழைக்கவில்லையானால் நீங்கள் இவ்வளவு செல்வத்தைக் குவித்திருக்க முடியுமா?''

''முடியாது''

''இந்தக் கை ஒத்துழைக்க வில்லையானால் இவ்வளவு பெரிய மாளிகை வாழ்வும், எட்டிப் பட்டமும், பெருநிதிச் செல்வர் என்ற பீடும் நீங்கள் அடைந்திருக்க முடியுமா?''

''முடியாது.''

''இந்தக் கையின் துணையில்லையானால் பல்லாண்டுகளாக நீங்கள் செய்து வரும் கொலைகளும், பாதகங்களும், சூழ்ச்சிகளும் உலகத்துக்குத் தெரியாமல் காப்பாற்றியிருக்க இயலுமா?''

''இயலாது.''

''நீங்கள் செய்திருக்கிற கொடுமைகளும், துரோகங்களும் வெளியானால் *சுட்ட செங்கல்லைத் தலையில் வைத்து ஊர் சுற்றச் செய்து அவமானப்படுத்தி நாடு கடத்துவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லையே?''

---

* குடிப் பெருமை மீறிப் பெருங் குற்றஞ் செய்தாரை இப்படி அவமானப்படுத்துதல் அந்தக் காலத்து வழக்கம்.

"சந்தேகமில்லைதான்."

நகைவேழம்பரின் குரல் உரத்து ஓங்க ஓங்கப் பெருநிதிச் செல்வரின் குரலும், தோற்றமும் ஒடுங்கி நலிந்து கொண்டிருந்தன. ஒரு காலை நன்றாக ஊன்ற முடியாததால் ஏற்கெனவே சாய்ந்து கோலூன்றி நின்ற அவர் இந்தக் கேள்விகளால் தாக்குண்டு இன்னும் சாய்ந்தாற் போல் தளர்ந்து நின்றார். அவருடைய முகத்திலும், கண்களிலும், நடுக்கமும் பீதியும் தோன்றின. எதிரே நகைவேழம்பர் பாய்ந்து கிழிக்கப் போகிற புலியைப் போல் வலது கையைத் தூக்கிக் கொண்டு நின்றார். அவருடைய மௌனம், பேச்சைக் காட்டிலும் பயமூட்டுவதாயிருந்தது. மௌனத்தை உடைத்துவிட்டு அவரே பேசத் தொடங்கினார்:

"இந்தக் கை ஓங்கிய வாள் இதுவரை தவறியதில்லை என்பதும் உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"நன்றாகத் தெரியும்."

"இதே கை இன்று தவறி விட்டது என்பதைத்தான் இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன்."

"எங்கே தவறியது? எதற்காகத் தவறியது? யாரிடம் தவறியது? சொல்லுங்கள்! நாளைக்குச் சூரியோதயத்துக்குள் உங்கள் கையை இப்படி ஆக்கிய கை எதுவோ அதை உணர்வு செத்துப் போகச் செய்கிறேன்" என்று பரபரப்போடு வினவிய பெருநிதிச் செல்வரை நகைவேழம்பர் சொல்லிய பதில் திடுக்கிட வைத்தது.

"அந்தக் கையை உணர்விழக்கச் செய்வதற்கு உங்களாலும் முடியாது! உங்கள் பாட்டனார் வந்தாலும் முடியாது!"

"ஏன் முடியாது? என்னையும் உங்களையும் போலச் சூழ்ச்சியும், திறனும் உள்ளவர்களால் அழிக்க முடியாத வலிமைகூட இந்த நகரத்திலே இருக்கிறதா?"

"இருப்பதாகத் தான் தெரிகிறது. இல்லாவிட்டால் என்னுடைய இந்தக் கை இப்படி வீங்குமா?"

"யார் என்றுதான் சொல்லுங்களேன். நடந்ததை ஒன்றும் சொல்லாமல் ஆத்திரமாகப் பேசிக் கொண்டே போவதில் என்ன பயன்?"

நகைவேழம்பரின் குரல் சிறிது ஒலி குன்றியதும் பெருநிதிச் செல்வரின் குரல் பெரிதாய் ஒலித்தது. 'சுரமஞ்சரியும் அவள்தோழியும் முயற்சிசெய்து ஓவியனை விடுவித்து மணிமாலை பரிசளித்ததிலிருந்து தொடங்கித்தான் ஓவியனைப் பின்தொடர்ந்து சென்றபின் ஆலமுற்றத்தில் நிகழ்ந்தது வரை எல்லாவற்றையும் கூறினார் நகைவேழம்பர். நீலநாக மறவர் தம்முடைய கையைப் பற்றியதையும், தாம் அவரால் கீழே பிடித்துத் தள்ளப் பட்டதையும் மேலும் ஆத்திரம் மூளும் விதத்தில் விவரித்துச் சொன்னார் அவர்.

"நமக்கு எதிரிகள் வேறெங்கும் இல்லை. நம்முடைய மாளிகையிலேயே இருக்கிறார்கள்" என்று குறிப்பாகச் சொல்லிப் பெருநிதிச் செல்வரின் கோபமெல்லாம் சுரமஞ்சரியின்மேல் திரும்புமாறு செய்ய முயன்றார் அவர்.

ஆனால் பெருநிதிச் செல்வரோ, நீலநாக மறவருடைய பெயரைக் கேட்டதுமே அதற்குமேல் நகைவேழம்பர் கூறிய எதிலுமே கவனம் செலுத்த முடியாதபடி தளர்ந்து தரையிலே உட்கார்ந்திருந்தார்.

"ஆலமுற்றத்து மலையை நம்மால் அசைக்க முடியாதென்று தெரிந்தாலும் பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதமிட்டு வந்திருக்கிறேன்! நேர் வழியில் முடியாவிட்டாலும் ஏதேனும் சூழ்ச்சி செய்தாவது என் சபதம் நிறைவேற நாம் இருவரும் பாடுபட வேண்டும்" என்று நகைவேழம்பர் ஆவேசமாகச் சொல்லிய போதும் பெருநிதிச் செல்வர் தலையில் கையூன்றியபடி மௌனமாகவே அமர்ந்திருந்தார். நகைவேழம்பர் மறுபடியும் சீறினார்.

"ஏன் இப்படி உட்கார்ந்து விட்டீர்கள்? என் பேச்சு இலட்சியமில்லையா உங்களுக்கு....?"

"பதில் பேசுவதற்கு ஒன்றுமே தோன்றவில்லை நகைவேழம்பரே! இந்தப் பெரிய நகரத்தில் எந்த மனிதருக்கு முன்னால் அரச குடும்பத்துப் பிள்ளைகளும் வாளுடன் நிற்பதைக் கூட மதிப்புக்குக் குறைவாக நினைத்துப் பயப்படுவார்களோ அந்த மனிதரோடு மோதிவிட்டு வந்திருக்கிறீர்களே நீங்கள்."

பெருநிதிச் செல்வரின் குரல் சோர்ந்து ஒலித்தது.

(தொடரும்)




CHAMP

எங்கிருந்தோ வந்தான்!

அட்டைப் படக் கதை



எஸ்.டி.ஸ்ரீநிவாசன்

திண்ணைச் சுற்றிலும் ஒரே ஜனத் திரள். எதிரே ஹோம குண்டம். அதிலிருந்து எழும் புகைப்படலம். இடுப்பைக் கெட்டியாகப் பிடிக்கும் புதுப் புடைவை. அதன்மேல் ஒட்டியாணம். அன்றைய தினத்துக்கென்று பிரத்தியேகமாகப் பின்னப்பட்ட கூந்தல் பின்னல்; தலையில் பூபாரம். கழுத்தில் ரோஜா மாலை. இரண்டு மணி நேரமாக அக்னிக்கு அருகே உட்கார்ந்திருந்ததால் நெற்றியில் வேர்வைத் துளிகள். ஆயிற்று இன்னும் சில நிமிஷநேரம்தான். பிறகு அவள் பக்கத்தில் அமர்ந்திருப்பவன் மாங்கல்யம் கோத்த மஞ்சள் கயிற்றை அவள் கழுத்தில் கட்டி அவளை அவனுடையவள் ஆக்கிக் கொண்டு விடுவான்.

''கெட்டிமேளம், கெட்டிமேளம்!'' பந்தலிலிருந்து ஒரு குரல் கம்பீரமாக எழுந்தது.

''பெண்ணுக்குத் தாயார் எங்கே காணோம், சீக்கிரம் வரச்சொல்லுங்கள்...!'' மற்றொரு குரல் எழுந்தது.

தன் இடுப்பில் செருகியிருந்த கைக் குட்டையை எடுத்து முகத்தில் தேங்கி நின்ற வேர்வைத் துளிகளை மெதுவாகத் துடைத்துக் கொண்டாள் ரஞ்சனி. அதே சமயம் பரபரப்புடன் அவள் பக்கத்தில் ஓடி வந்தாள் லலிதா. ரஞ்சனியின் இடது காதில், ''அதோ! எங்க சார் கூட வந்துவிட்டார்'' என்றாள் மெதுவாக. குனிந்திருந்த தலையை நிமிர்த்திக் கூட்டத்தை ஒருதரம் கண்ணோட்டம் விட்டாள் ரஞ்சனி. தோரண வாயிலைத் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்தான் ராமகிருஷ்ணன். இடுப்பில் நான்கு முழ வேஷ்டி; கதர் ஜிப்பா; கதர் அங்கவஸ்திரம். வலது கையில் ஒரு சிறு தோல் பை; இடது தோளிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஒரு துணிப் பை. யார் இதுவரை தன் திருமணத்துக்கு வரக்கூடாது என்று அவள் லக்ஷம் தரம் தன் இஷ்டதெய்வத்தை வேண்டிக் கொண்டிருந்தாளோ அவன் கடைசியில் வரக் கூடாத அந்த இடத்துக்கு வந்து விட்டான். ரஞ்சனிக்கு அடிவயிற்றில் 'பகீர்' என்றது.

'தன் திருமணத்தைப் பற்றி ராமகிருஷ்ணனுக்கு யார் தெரிவித்திருப்பார்கள்? அதுவும் தங்கள் ஊருக்குப் பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடக்கும் தன் கல்யாணத்தைப் பற்றிய இடம், தேதி இவை அவனுக்கு எப்படித் தெரிந்திருக்கும்? ஒரு சமயம் லலிதா விளையாட்டுத்தனமாக அவனுக்கும் ஒரு பத்திரிகையை அனுப்பி யிருப்பாளோ?' குழம்பித் தவித்தது அவள் மனம்.

ராமகிருஷ்ணனின் வரவை அவளுடைய தந்தையேகூட எதிர்பார்க்கவில்லை என்பதை அவர் முகமே எடுத்துக் காட்டியது. ஒருவராலும் விரும்பப்படாத ஓர் இடத்துக்குப் பின் அவன் ஏன் வந்தான்? அவள் உள்ளத்துக்குத் தெரியும் அந்த காரணம். அதை நினைக்கும்பொழுதே அவள் உடம்பில் ஒரு வித நடுக்கம் கண்டது. அந்தக் கலவர நிலையில் சூழ்நிலையே அவளுக்கு மறந்துவிட்டது. சுற்றிலும் நடப்பதையே அவள் உணரவில்லை.

''எழுந்து எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணம்மா.... ரெண்டுதரம் சொல்லியாச்சு, எங்கேயோ கவனம் போல் இருக்கு. இன்னும் கொஞ்சநேரம்தான். அப்புறம் மாப்பிள்ளையைப் பற்றியோ...''—மந்திர உச்சாடனத்தின் இடையே சில வேடிக்கை வார்த்தைகளை உதிர்த்து வைத்தார் சாஸ்திரிகள். ஆனால் ரஞ்சனிக்கு வேடிக்கையா வேண்டிக் கிடந்தது அத்தருணத்தில்? விபரீதமானதொன்றும் நடந்துவிடக் கூடாதே என்ற கவலையல்லவா குடிகொண்டிருந்தது அவள் உள்ளத்தில்?

எல்லோரையும் வரவேற்பதுபோல் யாரோ ஒருவர் ராமகிருஷ்ணனையும் வரவேற்றார். கல்யாண வீட்டில் இது சகஜம்தானே!

ரஞ்சனியின் மனம் தாமரை இலைத் தண்ணீர் போல் தத்தளித்தது. எவ்வளவு மாற்ற முயன்றும் அவள் மனம் மட்டும் கடந்தகால நினைப்பிலேயே லயித்து நின்றது.

ரஞ்சனியின் தந்தை மதுரையில் ஒரு பெரிய ஜவுளிக்கடை வைத்திருந்தார். 'சௌராஷ்டிரா நகரி'ல் பெரிய பங்களா; கார் வசதி யெல்லாம் இருந்தது. அவர் பரம்பரைப் பணக்காரர். அதோடு வியாபாரத்திலும் நல்ல பணம் சம்பாதித்துச் சேர்த்திருந்தார். மூன்றாண்டுகளுக்கு முன் அவள் பி.யூ.ஸி.யில் தேறி பி.ஏ. முதல் வகுப்பில் சேர்ந்தபோது ராமகிருஷ்ணன் அந்தக் கல்லூரியிலேயே பி.ஏ. இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். படிப்பில் அவன் நல்ல கெட்டிக்காரன், நல்ல பேச்சாளி; கலாசாலை மாணவர் சங்கத்தில் தீவிரப் பங்கு கொண்டு அதன் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு வந்தான். ரஞ்சனியும் தன் பள்ளிக்கூட நாட்களில் பல பேச்சுப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவள். அந்த ஆண்டு

மாணவர் சங்கத்துக்கு நடந்த தேர்தலில் ராமகிருஷ்ணன் காரியதரிசியாகவும், ரஞ்சனி துணைக் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ராமகிருஷ்ணனோடு சேர்ந்து சங்கக் காரியங்களைக் கவனிக்க நேர்ந்தபோது, அவ னுடைய வேடிக்கையான பேச்சு, கண்ணிய மான நடத்தை, பெருந்தன்மையான போக்கு இவை அவளைப் பெரிதும் கவர்ந்தன. நெருங் கிய பழக்கம் அவள் மனத்தில் பல கற்பனை களை எழுப்பியது.

ஒருநாள், அவள் துணிந்து ஒரு காரியம் செய் தாள். தன் மனவெழுச்சிகளுக்கு அவள் எழுத் துருவம் கொடுத்துக் கடிதமாகவடித்தெடுத்து, சங்க சம்பந்தமான ஒரு 'பைலை' அவனிடம் கொடுக்கும்போது தான் எழுதிய கடிதத்தை அதனுள் வைத்துக் கொடுத்து விட்டாள். துணிச்சலோடு அவள் அந்தக் காரியத்தைச் செய்து விட்டாளே தவிர, பிறகு அவள் மனம் 'திக், திக்' கென்றது.

அன்று அவர்கள் இருவரும் அடுத்த வாரம் நடக்கவிருந்த தங்கள் கல்லூரி சங்கக் கூட்டத் தில் சொற்பொழிவாற்ற மதுரைப் பிரமுகர் ஒருவரை ஏற்பாடு செய்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். கல்லூரிக் கட்டிடம் சமீபித்துக் கொண்டிருந்தது. அதுவரை மௌனமாக நடந்துவந்த ரஞ்சனி, "மன்னித் துக் கொள்ளுங்கள். தங்கள் மனக்கருத்தை இம்மியளவும் அறிந்து கொள்ளாமல் சற்று அவசரப்பட்டுக்கொண்டு அந்தக் கடிதத்தை.. அதைத் தாங்கள் படித்திருப்பீர்கள்" என்று தடுமாறினாள் அவள்.

"ஓ! பார்த்தேன். படித்தேன். பதிலும் எழுதி இரண்டு தினங்களாக என்னிடமே வைத்திருக்கிறேன். ஆனால் கொடுப்பதற்குச் சற்றுச் சங்கோசமாக இருந்தது...இப்போது நீயாக மறுபடியும் அதைப்பற்றிப் பேச்செடுக் கவே...இதோ அது..." — தன் நோட்டுப் புஸ்தகம் ஒன்றில் வைத்திருந்த தன் பதில் கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். அவள் முகம் அதைக் கண்டவுடன் முழு மலர்ச்சி பெற்றது. சட்டென்று அவள் அதை வாங்கித் தன் புஸ்தகங்கள் ஒன்றினுள் வைத் துக் கொண்டாள்.

கல்லூரி முடிந்ததும் வீட்டை அடைந்த அவள் தன் அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டு அந்தக் கடிதத்தைப் பிரித்தாள்.

"உன் கடிதம் ஆச்சரியத்தைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியைத்தான் எனக்குக் கொடுத் தது. உன்னை வாழ்க்கைத்துணைவியாக நான் அடையும்படி நேர்ந்தால் அதை ஒரு பெரும் அதிர்ஷ்டமாகவே நான் கருதுவேன். ஒரு விஷயம் மிகத் தெளிவாக எழுத விரும்பு கிறேன். சமூகத்தில் அந்தஸ்துக்குத்தான் முதலிடம் உண்டு. அந்தஸ்து என்ற ஏணியில் நீ முதல் படியிலும் நான் கடைசிப் படியிலும் இருக்கிறோம். நான் அரசாங்க உபகாரச் சம்பளம் பெற்றுப் படிக்கும் ஓர் ஏழை மாணவன். நீயோ ஒரு பெரும் தனவந்தரின் புத்திரி. நம் இருவர் மனத்திலும் அன்பைப் படரவிட்டுக் கடைசியில் அது அந்தஸ்து என்னும் சக்கரத்தின் கீழ் நசுங்குண்டுபோனால் வாழ்வில் அதைக் காட்டிலும் பெருத்த ஏமாற் றம் ஒன்றுமே கிடையாது. பின் நமக்கு வாழ்வே கிடையாது என்றுகூட நான் உறுதி யாகச் சொல்வேன்."

பண்பும் அனுபவ ரீதியாகக் கிடைத்த உண் மையும் தோய்ந்த அவன் கடிதம் அவளிடம் அவனுக்கு ஏற்பட்டிருந்த அன்பை மேலும் இறுக்கத்தான் செய்தது. உடனே அவள் பதில் கடிதமொன்று எழுதினாள்.

"தங்கள் அன்பு கலந்த கடிதத்துக்கு நன்றி. நம் காதற் சங்கிலி தாங்கள் நினைப்பதுபோல் அந்தஸ்து என்ற கட்டாரியால் ஒருபோதும் அறுக்கப்படாது; அது அறுந்துபோக நான் விடமாட்டேன். மனம் நிறைந்த வாழ்வைத் தான் — பணத்தை விட மேலாக — என் தந்தை மதிப்பவர். தங்கள் மன நிலையை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்."

மறுநாளே இந்தக் கடிதத்தை அவனிடம் சேர்ப்பித்துவிட்டாள்; அவன் அதற்கும் ஒரு பதில் எழுதிக் கொடுத்துவிட்டான்.

"நம் பிணைப்பு எக்காரணத்தைக் கொண் டும் துண்டிக்கப்படாது என்று நீ உறுதி கூறுவது கண்டு மிகச் சந்தோஷம். நம் எண் ணங்களை நம் மனத்துக்குள்ளேயே கட்டுப் படுத்திக் கொள்வோம் - நம் பரீட்சைகள் முடியும்வரை. இனைற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது."

கண்ணியமான அவனுடைய இவ்வறி வுரைகள் அவள் மனத்தைக் கவர்ந்தன.

அந்த ஆண்டு அவன் பி. ஏ.யில் தேறி மறு ஆண்டுத் தொடக்கத்தில் மதுரையிலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் வேலையை ஏற்றான். ரஞ்சனியின் அதிர்ஷ்டம் ஒரு நண்ப ரின் சிபாரிசின் பேரில் ராமகிருஷ்ணனே ரஞ்சனியின் தங்கை லலிதாவுக்கு வீட்டில் டியூஷன் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டான். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் இருந்தது ரஞ்சனிக்கு.

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. இந்தக் குறுகிய கால எல்லைக்குள் அவர்களிடையே மாதத்துக்கு இரண்டு கடிதங்களாவது மாறிக்கொண்டு வந்தன.

அந்த ஆண்டு பொங்கல் திருநாள் வந்தது. இருவரும் தங்கள் புகைப்படங்களில் கை யெழுத்திட்டு மற்றவருக்கு அதைப் பொங்கல் பரிசாக அளித்துக் கொண்டனர்.

ஒரு நாள். இரவு சாப்பிட்டுவிட்டு ரஞ்சனி தன் அறையில் கல்லூரிப் பாடங்களைப் படித் துக் கொண்டிருந்தபோது கீழே ஹாலில் தந்தை தாயாருடன் பேசிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது.

"ரஞ்சனிக்குச் சீக்கிரம் கல்யாணம் பண்ணி விடலாம்னு பார்க்கிறேன்.."-அவள் தந்தை.

"இன்னும் ஒன்றரை வருஷம் போனால், அவள் பி. ஏ. முடித்து விடுவாள். அதன் பிறகு..." அவள் தாயின் குரல்.

"நாம் என்ன உத்தியோகத்துக்கா படிக்க வைக்கிறோம்? வீட்டிலிருப்பதைக் கல்லூரிக் குப் போகட்டுமே என்று அனுப்புகிறோம். போனவாரம் நான் சென்னைக்குப் போயிருந்த போது விசுவநாதனைப் பார்த்தேன். அவர் பிள்ளை எம். ஏ. பாஸ் பண்ணிவிட்டு 'லெக்சர ராக' இருக்கானும். இன்னும் ரெண்டு மூணு நல்ல வரன்களும் இருக்கு...சீக்கிரம் முடிச் சுட்டா நல்லது."

ரஞ்சனிக்கு மேற்கொண்டு பாடங்களில் புத்தி செல்லவில்லை. தான் ராமகிருஷ்ணனைக் காதலிக்கும் விஷயம் அவள் தந்தைக்குத் தெரியாது. மறுநாள் அவள் பூடகமாகத் தன் எண்ணத்தைத் தாயாரிடம் தெரிவித்தாள். அவள் அன்றிரவு சாப்பிட்டானதும்—ரஞ்சனி மாடிக்குப் போய் விட்ட பிறகு—தன் கணவரிடம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

''யார், லலிதா வாத்தியாருக்கா ரஞ்சனியைக் கொடுக்கணும் என்கிறே? சே, சே! அவன் பரம ஏழை. இப்பத்தான் அவன் வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கான். அவனை யாருக்குக் கொடுக்கணும் என்கிறது எனக்குத் தெரியும்.'' ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார் அவர்.

ரஞ்சனிக்கு அன்றிரவெல்லாம் தூக்கம் வரவில்லை. மறுநாளே ரஞ்சனியின் தகப்பனார் ராமகிருஷ்ணனைத் தன் இரண்டாம் மகள் லலிதாவுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வருவதையும் நிறுத்தி விட்டார்.

''உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன், என்னை மன்னித்து மறந்துவிடுங்கள்'' கண்களில் நீர் கோத்து நிற்கச் சொன்னாள் ரஞ்சனி ராமகிருஷ்ணனிடம். முன்னேற்பாட்டின்படி அவர்கள் அன்று வைகையாற்றங்கரையில் சந்தித்தனர்.

''என்ன ரஞ்சனி, காதலிப்பது என்பதை நீ ஒரு விளையாட்டாக வைத்துக்கொண்டு விட்டாயா? வேண்டுமானாலும் என்னைக் கவபத்தில் மறந்து விடலாம். ஆனால் என்னால் உன்னை என்றுமே மறக்க முடியாது...''

''என்னால் மட்டும் உங்களை மறக்க முடியுமா? ஆனால் அப்பா ஒரே பிடிவாதமாக இருக்கிறார்...''

''நம் காதல் விஷயத்தை அவரிடம் தைரியமாகச் சொல்கிறது...''

''ஐயய்யோ...என்னை அவர் சும்மா விட மாட்டார்.

''உனக்குத் தைரியம் இல்லாமற்போனால் நானே வந்து சொல்றேன்...''

''அது இன்னும் ரொம்ப ஆபத்து...''

''ஆபத்தைப் பார்த்தால் முடியுமா? காரியம் ஆகவேண்டுமே...?''

''எங்க அப்பா செய்த தீர்மானத்தை இனி ஒருவராலும் மாற்ற முடியாது...''

''நான் ஆரம்பத்திலேயே என்ன சொன்னேன்? சலனமற்றுக் கிடந்த என் உள்ளத்தில் ஆசையைத் தூண்டி, ஆர்வத்தை வளர்த்து, நம்பிக்கையை ஊட்டிவிட்டு இப்பொழுதுவந்து உன்னை மறந்து விடும்படி சொல்லுகிறாயே. காதல் என்பது உன்னைப் பொறுத்தவரை சட்டைக்குள் கோட்டுக்கும் சமமோ, விருப்பப் பட்டபோது போட்டுக் கொள்வதற்கும் வேண்டாதபோது கழற்றி எறிந்து விடுவதற்கும்?'' கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன.

துக்கத்தால் ரஞ்சனியின் நெஞ்சு விம்மியது.

''நடந்ததெல்லாம் கனவென்று நினைத்து மறந்து விடுங்கள். நான் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது இதுதான்...''

''ரஞ்சனி! நடந்ததை யெல்லாம் மறந்து விட்டு நீ மட்டும் வேறு ஒருவனை மணந்து ஆனந்தமாக வாழ்வது, நான் என் ஆயுள் முழுதும் உன்னை நினைந்து நினைந்து உருகிச் சாவதா? அது ஒருகாலும் முடியாது. எனக்கு வாழ்வில்லை யென்றால், நான் உன்னையும் வாழவிட மாட்டேன். நீ எழுதிய கடிதங்கள் அத்தனையும் உன் புகைப்படமும் கூட என்னிடம் பத்திரமாக இருக்கு. உன் திருமணத்தின்போது அவைகளை உன் கணவன் பார்க்கும்படி உனக்குத் திருமணப் பரிசாக அனுப்பி வைக்கிறேன். பின் உன் மணவாழ்வு என்ன ஆகிறது என்று தெரிந்துகொள்வாய்.'' அவன் 'விர்' ரென்று எழுந்து போய்விட்டான்.

வீடு திரும்பிய அவள் மன நிம்மதியின்றிக் காலம் தள்ளினாள். இதனிடையே அவளுடைய தகப்பனார் அவளை ஒரு பணக்கார வரனுக்கு—மாப்பிள்ளை வாசுதேவன் ஒரு பட்டதாரி; நல்ல உத்தியோகத்தில் இருந்தான்—ஏற்பாடு செய்தார். கல்யாணம் சென்னையில் நடந்தது.

மாங்கல்ய தாரணம் முடிந்தது. ஆனால் ரஞ்சனியின் மனம் எந்த இன்பத்திலும், கேளிக்கையிலும் ஈடுபடவில்லை.

ராமகிருஷ்ணன் மெதுவாகக் கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு வாசுதேவனருகே வந்து, ''வாசு! கங்கிராஜுலேஷன்ஸ்! இதோ உனக்கு என் பரிசு'' என்று சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த 'கான்பூர்' தோல்பையைத் திறந்து, அதனுள், ஒரு நீண்ட ஒட்டப்பட்ட 'கவரை' எடுத்துப் போட்டு,

பையை மூடி, " இதனுள் இருக்கும் 'கவரை' நீயும் உன் மனைவியும் தனியாக இருக்கும் போது திறந்து பாருங்கள் " என்று கூறிக் கொடுத்து விட்டு எழுந்தான்.

ரஞ்சனியின் உடல் வேர்த்துக் கொட்டியது; ராமகிருஷ்ணனும் வாசுதேவனும் நண்பர்கள் என்று அப்போது வெளியான உண்மை அவள் மண்டையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போல் இருந்தது : இது பிரச்னையை மேலும் சிக்கலாக்கியது. தோல் பையில் கவரில் அவளுடைய காதல் கடிதங்கள்! வஞ்சம் தீர்த்துக் கொண்டு விட்டான் ராமகிருஷ்ணன்! உதயமாகும்பொழுதே தன் வாழ்வு அஸ்தமித்து விட வேண்டியதுதானு! துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது அவளுக்கு.

" எங்கு கிளம்பி விட்டாய்? முதலிலே நீ கல்யாணத்துக்கு வருவாயோ வராமல் ஏமாற்றிவிடுவாயோ என்று நினைத்தேன்..."

" ஒரு முக்கிய கல்யாணத்துக்கு வராமல் இருந்துவிடுவேனு? நான் சொன்னேனே அந்த 'இண்டர்வியூ' அது இன்று ஒரு மணிக்கு. இதோ சாப்பிட்டுவிட்டுக் கிளம்புகிறேன்..."

" ஓ! அதுவா! வெற்றி கிடைக்கட்டும்... அப்படியானும் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பு...."

ராமகிருஷ்ணன் சாப்பிடச் சென்றுன்.

அதன்பிறகு என்ன சடங்குகள் நடந்தன என்பதே ரஞ்சனிக்கு ஞாபகமில்லை.

மணி மூன்று. எல்லோரும் சாப்பிட்டாயிற்று. அப்பொழுதுதான் ரஞ்சனிக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது. ஆயினும் தனக்கேற்பட்ட மனக்கலக்கம் காரணமாக யாருடனும் கலகலப்பாகப் பேசாமல் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

" அக்கா! அக்கா! உன்னை அத்திம்பேர் கூப்பிடுகிறார்..." ஓடி வந்து ரஞ்சனியின் கையைப் பிடித்து இழுத்தாள் தங்கை நீலா.

" போடீ, அந்தப் பக்கம்!" எரிந்து விழுந்தாள் ரஞ்சனி.

எதற்கு அவர் கூப்பிடுகிறார் என்று ரஞ்சனிக்குத் தெரியும். அந்தக் கவரும் அதனுள் தன் காதல் கடிதங்களும் இப்போது அவர் கையில் இருக்கும். போவதா வேண்டாமா? ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை அவளால்.

இதற்குள் அவள் அம்மா ஒரு டம்ளரில் காப்பியுடன் வந்து " இந்தா! இதை மாப்பிள்ளை கிட்டே கொண்டு போய்க் கொடு" என்றாள்.

புதுப் புடவை சலசலக்க - தன் வாழ்வை மலர்விக்க வந்த தன் அன்புக் கணவனோடு தனிமையில் இரண்டொரு வார்த்தைகள் பேசப் போகும் மகிழ்ச்சிக்குப் பதில், உடம்பெல்லாம் 'வெட வெட' வென்று நடுங்க, பலிபீடத்துக்குச் செல்லும் ஆடு போல் அவள் தன் கணவன் இருந்த அறையினுள் நுழைந்தாள், கையில் காப்பியுடன். கணவனின் கையில் ராமகிருஷ்ணன் கொடுத்த கவர் இருந்தது-பிரிக்கப்பட்டு.

காப்பி டம்ளரை மெதுவாகக் கணவன் முன்வைத்தாள்.

" இப்படி வா! நாம் இருவரும் தனியாக இருக்கும் போது பார்க்க வேண்டும் என்று ராமகிருஷ்ணன் கொடுத்தானே, அது என்ன தெரியுமா? இதோ பார்..." கவரிலிருந்து ஒரு பெரிய கடிதத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தான். ஓர் அழகிய குழந்தையின் உருவம் அதில் வரையப்பட்டிருந்தது. " இறைவன் இந்தப் பரிசை உங்களுக்கு விரைவில் கொடுக்கட்டும் " என்ற எழுத்துக்கள் அதன் அடியில் காணப்பட்டன.

" அவன் மகா குறும்புக்காரன். நல்ல சித்திரக்காரனும்கூட. அவனே இதை வரைந்திருக்கிறுன். பள்ளியில் என்னுடன் படித்தவன். ஏழை, ஆனல் மிகவும் கெட்டிக்காரன். வயதான தாயார் இருக்கிறுள். இவனுக்குக் கல்யாணம் செய்து தன் கண்ணுல் பார்த்து விட வேண்டும் என்று அவளுக்குக் கோடி ஆசை. ஆனல் இவன் ஒரே பிடிவாதமாகக் கல்யாணமே வேண்டாம் என்கிறுன்." அவன் பேசிக் கொண்டே போனுன். ஆனல் அவன் வார்த்தைகளா அவள் காதுகளில் விழுந்தன? தன் மனத்தை அழுத்திய ஒரு பெரும் பாரம் ஒரு கணப்பொழுதில் இறங்கிவிட்ட நிம்மதியில் அவள் மனம் எங்கெங்கோ அல்லவா சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது?

கல்யாணமாகி அவள் மதுரைக்குத் திரும்பிய இரண்டாம் நாள் மாலை. எண்ணத்தை எங்கோ லயிக்கவிட்டு மாடியில் தன் அறையில் உட்கார்ந்திருந்த அவளிடம் அவள் கடைசித் தங்கை நீலா ஒரு பெரிய கவரைக் கொண்டு வந்து கொடுத்து, " லலிதாவுடைய 'சார்' கொடுக்கச் சொன்னார் " என்று சொல்லி விட்டுக் கீழே ஓடிவிட்டாள்.

பரபரப்புடன் ரஞ்சனி அதைப் பிரித்தாள். " சகோதரி ரஞ்சனிக்கு ஆசீர்வாதம். எட்டாத கனியைப் பறிக்க நினைத்து, கிடைக்காத ஏமாற்றத்தில் அன்று வைகையாற்றங் கரையில் உன்னிடம் தாறுமாருகப் பேசிவிட்டேன். ஒரு குற்றமும் செய்யாத உன்னைப் பழிவாங்குவதில் எனக்கென்ன லாபம் என்று என் விவேகம் பிறகு எனக்கு இடித்துக் கூறியது. எனக்குக் கிட்டாத வாழ்வு உனக்காவது கிட்டியதே என்று நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். உன் காதல் கடிதங்கள் என்னிடம் இருக்கும்வரை உன் வாழ்வில் உனக்கு நிம்மதி இருக்காது என்று எனக்குத் தெரியும். என்றைக்காவது அவைகளை நான் உன் கணவனுக்குக் காட்டி விடுவேனே என்ற பயம் உன் மனத்தில் இருந்து கொண்டே இருக்கும். ஆகவே அவைகளை இத்துடன் உனக்கே திருப்பி அனுப்பி வைக்கிறேன்; இனி ஒருவருக்கும் வேண்டப்படாத அவைகளை உன் கையாலேயே, நீயே அழித்து விடு. உன் மணவாழ்வில் உனக்கு எல்லாவித பாக்கியங்களையும் அருளும்படி இறைவனைப் பிரார்த்திக்கிறேன் — ராமகிருஷ்ணன்"

இந்தக் கடிதத்துடன் அவனுக்கு இதுவரை அவள் எழுதியிருந்த அத்தனை கடிதங்களும் இருந்தன.

அவள் கைகள் அந்தக் கடிதங்களைச் சுக்கல் நூறுகக் கிழிக்க, அவள் நயனங்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் அவைகளின்மேல் விழுந்தது.


நான பலவீனமடைந்து களைப்புற்று வீட்டு வேலைகள் செய்ய முடியாமல் சிரமப் பட்டேன்.
எங்கள் அடுத்த வீட்டு மாமி தினமும் இரண்டு வேளை போர்ன் வீடா அருந் தவேண்டுமென்று சொன் ஞள்.
அவர்களுடைய டாக்டரும் அதையேதான் சொன்ஞராம். நானும் அதைக் கடை பிடித்தேன். சக்தியும் பல மும் பெற்றேன்.
இப்பொழுது உடம்பும் முன் போல நன்ருகிவிட்டது.
எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி.
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURY'S SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
நான் என் வேலைகளை சக்தியுடன் செய்து வருவதற்குக் காரணம்
Cadbury's
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்



33. இத்தாலியின் எழில் நகரங்கள்!

சோமு

அற்புதத் திருநகரமான வெனிஸிலிருந்து புறப்பட்டுக் கலைத் திருநகரான ஃப்ளாரன்ஸ் சென்றேன்.

'ஃப்ளாரன்ஸ்' என்று நினைத்துப் பார்க்கும் போது இன்றைக்கு என் கண்முன் நிற்பவை, அழகழகான சலவைக்கற் சிற்பங்களும் சுந்தர ஓவியங்களுமே! விவிலிய வேதத்திலிருந்தும் கிரேக்க புராணக் கதைகளிலிருந்தும் பற்பல நிகழ்ச்சிகளைச் சிற்பமாகவும் சித்திரங்களாகவும் செய்து நிறுத்தியிருக்கிறார்கள், இத்தாலி தேசத்தின் பழம் பெரும் கலைஞர்கள்! அங்குள்ள கிறிஸ்து கோவில்கள் எல்லாம் மிகவும் பழைமையானவை. பளிங்குக் கல்லாலான சிற்பங்கள் ஆயிரக்கணக்கில் நிரம்பியிருக்கின்றன! கோவிற் கதவுகளிலும் தூண்களிலும் மேல் விதானங்களிலும் செய்யப்பட்டுள்ள சித்திர சிற்ப வேலைப்பாடுகளைப் பார்த்த போது, நம்முடைய தமிழ்நாட்டுப் பழங்காலப் பெருமைகளையே நினைத்துக் கொண்டேன்!

கி. மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து எத்தனையோ பல சரித்திர மாறுதல்களை உருவாக்கிக் காலதேவனுடைய நாடக அரங்கமாக விளங்கி வந்திருக்கிறது, ஃப்ளாரன்ஸ் நகரம்! இத்தாலி தேசத்தின் தெய்வ பக்திக்கும், சமய வரலாறுகளுக்கும், கலையாற்றலுக்கும், உல்லாச நிகழ்ச்சிகளுக்கும் மகத்தான சான்றாகத் திகழ்கிறது இந்தத் தொன்மையான எழில் நகரம்.

இந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்த முதல் நாள் இரவு, 'நைட் கிளப்' என்று அழைக்கப்படும் விடுதியில் சுவையான ஒரு சங்கீதக் கச்சேரிக்குச் சென்றேன்! இத்தாலி தேசத்தின் புகழ் பெற்ற பாடகி ஒருத்தி மிகவும் தொன்மையான இத்தாலி மொழிப் பாடல்களைப் பழைய மரபுப்படி பாடினார். 'கர்நாடக சங்கீதம்' என்று நாம் சொல்லுகிறோமே, இது போல அந்த நாட்டின் பழைய இசைமுறை அது! கச்சேரியின் முடிவில் நமது வித்வான்கள் சில்லறை உருப்படிகள் பாடுவது போல், அந்தப் பாடகியும் இத்தாலியின் எளிமையான நாட்டுப் பாடல்கள் சிலவற்றைப் பாடினார்.


பழைய சம்பிரதாயத்தைச் சேர்ந்த இத்தாலியப் பாடல்களிற் பல, நமது தென்னாட்டு ராகங்களின் சாயலிலே இருந்தன! முக்கியமாகக் கல்யாணியும் மோஹனமும் அடிக்கடி வந்து நடனமாடின. அந்த அம்மாள் பாடிய நாட்டுப்பாடல்கள் எளிமையும் உல்லாசமும் நிரம்பியனவாய்க் கேட்பதற்கு உற்சாகமாக இருந்தன. பாடுகிற முறையில் குரலானது அநாயாசமாக ஏறியும் இறங்கியும் நெளிந்தும் வளைந்தும் துள்ளியும் குதித்தும் இயங்கக்கூடிய விதத்தில் நன்றாகப் பயிற்சி செய்திருக்கிறார். பொதுவாக மேனாட்டுப் பாடகர்கள் எல்லாருமே குரலுக்கும் அதன் வளத்துக்கும் பயிற்சிக்கும் மிகவும் முக்கியம் கொடுக்கிறார்கள். 'ரோட் என்ஜின்' நகருவது போன்ற கரகரப்பே அவர்களுடைய குரலில் கிடையாது! பாட்டைக் கேட்கும்போது, முதலில் இயற்கைக் குரலாக இல்லையே என்று ஒரு விநோத உணர்ச்சி நமக்கு உண்டாகிறது! ஆனால் சில நிமிஷங்களில் செவி அந்த ஒலியின் இனிமையில் இணைந்து விடுகிறது. அப்போது அந்த விநோத உணர்ச்சி அகன்று சங்கீதத்தின் சாகசத்தை அனுபவிக்க ஆரம்பித்து விடுகிறோம்.

முதல்நாள் ஏற்பட்ட இந்தக் கச்சேரி அனுபவத்துக்குப் பிறகு மறுநாளும் சில இசை நிகழ்ச்சிகளுக்குப் போயிருந்தேன்.

இசை அனுபவங்கள் தவிர, ஃப்ளாரன்ஸ் நகரத்திலுள்ள பழைமையான கோவில்களையும் சிற்பங்களையும் சென்று பார்த்தது, ஓர் அரிய கலையனுபவமாக இருந்தது. மிக்கல் ஆன்ஜிலோ என்ற புகழ் பெற்ற சிற்பி நிர்மாணித்துள்ள பளிங்குச் சிலைகள் எல்லாம் அரிய பெரிய அற்புதங்கள்! மனிதன் கலையின் மூலம் எப்படித் தெய்வத்தன்மை பெற்று, அமர சாதனைகளை இந்த மண்ணிலே செய்து நிறுத்திப் பூலோகத்தைத் தேவலோகமாக்குகிறான் என்பதற்கு மிக்கல் ஆன்ஜிலோவின் படைப்புக்கள் நிரந்தரமான சான்றுகள்! அவனுடைய சிலை ஒவ்வொன்றும் கல்லால் ஆன ஒரு காவியம்! முக்கியமாக, பகல், இரவு, அந்தி, சூரியோதயம் என்று நான்கு சிலைகள் செய்திருக்கிறான். பகல், அந்தி இரண்டையும் இரண்டு ஆடவர்களின் சிலைகளாகவும், இரவையும் உதயத்தையும் இரண்டு பெண்களாகவும் உருவகம் செய்து பளிங்குக் கல்லிலே காலம் எனும் கனவாக நிர்மாணித்திருக்கிறான். இந்த நான்கு சிலைகளையும் பார்த்தால் அந்த இடத்திலிருந்து மேலே நகர முடியாது. அப்படி உள்ளத்தை இழுக்கின்றன அந்தச் சிற்பங்கள்!

ஃப்ளாரன்ஸ் நகரத்தில் நான் கண்டுகளித்த சிற்பங்கள் ஏராளம்! இரண்டு மூன்று நாட்கள் அந்த இன்பமயமான சிற்ப விருந்தை உட்கொண்டு விட்டு, அங்கிருந்து ரோமாபுரிக்குச் சென்றேன்.

ரோமாபுரி என்று தமிழில் அழைக்கிற அந்த நகரத்தை, 'ரோம்' என்று ஆங்கிலத்தில் அழைத்த போதிலும் அதனுடைய இயற்பெயர் "ரோமா!" "ரோமா" என்ற அந்தப் பெயரைச் சொல்லி அவர்கள் தேசியப் பாடல்கள் பாடும்போது, உள்ளம் அந்தத் திருநாமத்தின் இனிமையிலே சொக்குகிறது! ரோமாபுரிக்குச் சென்ற முதல் நாளே இந்த அனுபவம் எனக்கு ஏற்பட்டது.



பீஸாவின் சாய்ந்த கோபுரம்

ஆம்; ரோம் நகரத்துக்குச் சென்ற முதல் நாள் இரவு, எங்களுக்கு ஒரு பெரிய இரவு விடுதியிலே நேர்த்தியானதோர் விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த விருந்தில் என்னைக் கவர்ந்த அம்சம், உண்டி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே விடுதிப் பாடகர்கள் எங்களைச் சுற்றி ஆடிக்கொண்டே வந்து பாடிய அருமையான பாடல்களே! இந்தப் பாடல்களிலே பல, ரோமாபுரியாகிய அன்னையைத்துதிசெய்யும் தேசியப் பாடல்கள். ''ரோமா ரோமா'' என்று முடிந்தது அவற்றின் பல்லவி! அசைப்பிலே அந்த வார்த்தை நம்முடைய தென்னிந்தியச் செவிகளுக்கு ராமா ராமா என்பது போல் விழுகின்றன! ''அந்த ராம சௌந்தரியம் என்னால் அறிந்து சொல்லப்போமோ'' என்ற ராம நாடகக் கீர்த்தனைதான் என் நினைவுக்கு வந்தது! ''ராம சௌந்தரியம்'' என்பதை 'ராமா ஆ சௌந்தரியம்' என்றுதானே பாடுகிறார்கள்! என்னுடைய மனம் ''அந்த ரோமா ஆ சௌந்தரியம்'' என்று பாட ஆரம்பித்தது!


அந்த ரோமா சௌந்தரியம்! ஆமாம். அதை எப்படி அளந்து சொல்வது! நகரத்தின் அழகும் மாண்பும் வர்ணித்துமுடியாது! மிக்கல் ஆன்ஜிலோ என்ற அந்த அதிசயச் சிற்பியின் கலைக் கோலமே இந்த நகரம் என்று சொல்ல வேண்டும்! கி.மு. 753ல் கட்டப்பட்ட பூர்விக நகரத்தின் தொன்மையான சின்னங்களும், புதிதாக எழுந்துள்ள நவீன நகரத்தின் காட்சிகளும் அருகருகே நின்று மூவாயிரம் ஆண்டுக் கதைகளை மோன மொழியிலே பேசுகின்றன! ஆன்ஜிலோ திறமையுள்ள சிற்ப வெளியில் மார்க்கஸ் ஆரீலியஸ் என்ற சக்கரவர்த்தியின் பிரும்மாண்டமான வெண்கலச் சிலை கம்பீரமாக நிற்கிறது! 161—180 இல் செய்யப்பட்ட இந்த அழகான சிலை எப்படி யுத்த வீழ்ச்சிகளிலிருந்து இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது, பிறகு எப்படி 1538-ல் மிக்கல் ஆன்ஜிலோ இந்தச் சிலையைக் கண்டெடுத்து இங்கே கொண்டு வந்து நிலைநிறுத்தினான் என்பது பற்றிப் பல வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. குதிரைமீது அமர்ந்து காட்சிதரும் மார்க்கஸ் ஆரீலியஸ், அரசர்களில் ஒரு முனிவர். முனிவர்களில் ஓர் அரசர்! நமது பாரத நாட்டு ஜனகரைப் போன்ற ராஜரிஷி அவர். தத்துவ தரிசனமும், அரசியல் மேதையும், ஒருங்கே இணைந்து திகழ்ந்த இந்தச் சக்கரவர்த்தியின் ஆத்ம சிந்தனைகளைத்தான், நம்முடைய ராஜாஜி அவர்கள் தெள்ளிய தமிழில் மொழிபெயர்த்து அரியதொரு புத்தகமாக நமக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்த மன்னரின் வெண்கலச் சிலை கம்பீரமும் செய்நேர்த்தியும் கொண்டு அற்புதமாக நிற்கிறது ரோமாபுரியிலே!

''எல்லா வீதிகளும் ரோமுக்கே செல்கின்றன'' என்று ஓர் ஆங்கிலச் சிலேடை வசனம் உண்டு. ரோம் நகரத்தை நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் வருகிற சாலைகளைப் பார்த்தால், இந்த வசனத்தின் அழகு புலனாகிறது. உலகக் கலைகளின் சரித்திரம், சமயத்தின் சரித்திரம், மனித குலத்தின் சரித்திரம் எல்லாம் சேர்ந்து, பல நூறு ஆண்டுகளை உட்கொண்டு நிற்கின்றன இந்த நகரத்திலே!

எங்கு பார்த்தாலும் அரசர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ராணிகள், பெரமுகிகள், எழில் மங்கையர் ஆகியோரின் சிற்பங்கள், சித்திர சாலைகள், பழம் பெரும் கோவில்கள், நகர வளைவுகள், பூர்விக நகரத்தின் சிதைந்த சின்னங்கள், பூம்புனல் ஊற்றுகள்! ஊருக்குள்ளே உலவ ஆரம்பித்தால், உலக சரித்திரம் என்ற பெரிய வனத்துக்குள் புகுந்து உலவுவது போன்ற உணர்ச்சியே உண்டாகிறது!

ரோமாபுரி வட்டத்திலே மிகவும் முக்கியமான பகுதி 'வாடிகன்' நகரம்! இது போப் ஆண்டவரின் புனித பூமி. பூரண சுதந்திரம் பெற்ற ஒரு தனி நாடாகவே விளங்குகிறது இந்த எல்லை. கத்தோலிக்கர்களுக்குள்ள மத பக்தியும் குருபக்தியும் அத்தனை உயர்வானவை!

பீடர் முனிவரின் உடம்பை அடக்கம் செய்து அதன் மீது கட்டப்பட்டுள்ள பெரும் கோவில் உலகப் புகழ் பெற்றது. ஆங்கிலக் கவிதை இலக்கியத்தில் இதைப் பற்றிய பாடல்கள் மிகவும் அழகானவை. பீடர் சதுக்கம் என்ற பிரதேசமே புண்ணியம் நிரம்பிய திருத்தலம். இந்தக் கோவிலினுள் நுழையும்போது எந்த மதத்தைச் சார்ந்தவருக்கும் இதயம் நெகிழும். கோவிலின் கருவறையை நோக்கி நடக்கும் போது ஒரு பரவசம் உண்டாகிறது. பீடர் முனிவரின் கல்லறையைச் சுற்றி எண்பத்தொன்பது சுடர்விளக்குகள் நந்தாவிளக்காக எரிகின்றன. ஆலிவ் எண்ணெயில் தகளியும் திரியுமாகச் சுடர் விளக்குகளைப் பார்த்ததும், எனக்கு நம்முடைய கோவில்களிலே இருப்பது போன்ற உணர்ச்சியே ஏற்பட்டது. இந்தக் கல்லறைக்கு மேலே வெண்கலத் தூண்களாலான மண்டபம். முறுக்கிய கயிறு போன்ற தூண்கள் அவை. மேலே உருண்டைக் கலசமும் சிலுவையும் எழிலோடு காட்சி தருகின்றன. அங்கே நிலவிய சாந்தி உள்ளம் முழுவதையும் நிரப்பியது. கல்லறை தவிர, இந்தக் கோவிலில் உள்ள பீடர் முனிவரின் உருவச்



"பிரார்த்தனை ஊற்று"

சிலை அபார அழகோடு கூடியது. வலது கையை உயர்த்தி ஆசீர்வாதம் வழங்குகிற நிலையில் முனிவர் வீற்றிருக்கிறார். எப்படிப்பட்ட கல் மனமும் நெகிழும்படியான தோற்றம் அது!

தெய்வாம்சமான இந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டே, பிராகாரத்தின் வலப் பக்கம் சென்றேன். என்னோடு வந்த இத்தாலிய நண்பர் ஒரு பெரிய நிலைக்கதவுக்கு அருகிலே என்னை அழைத்துச் சென்றார்.

"இதுதான் புனித வாசல் "Porta Santa" என்று சுட்டிக் காட்டினார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தக் கதவைத் திறப்பார்களாம், கிறிஸ்துமஸ் பண்டிகையின் முன் தினம்! போப்பாண்டவர் தமது அடியார்களின் பரிவாரம் புடை சூழ நடந்து வந்து, புனிதத் தண்ணீர் தெளித்து இந்தப் புனித வாசலைத் திறந்து உட்செல்வார். அவரைப் பின்தொடர்ந்து பக்தகோடிகள் செல்வார்கள். இப்படிச் சென்றால் பாவங்களிலிருந்து விடுபட்டு சுவர்க்க பதவி கிடைக்கும் என்று ஐதிகம். அதாவது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தச் சுவர்க்க வாசலில் நுழைந்து, பக்தர்கள் தங்களைப் பாவங்களிலிருந்து விடுவித்துக் கொள்கிறார்கள், புனிதம் பெறுகிறார்கள். பளிங்குக் கல்லாலான இந்த வாசற்கதவின் முகப்பில், கறுப்புச் சலவைக் கல்லால் சிலுவை பதித்து உயரம் உயரமான எழுத்துக்களிலே ஏசுபெருமானின் திருமொழிகளைப் பொறித்திருக்கிறார்கள். ஒவ்வோர் எழுத்தும் ஐந்தடி உயரம். ஏசுபெருமானின் அந்த வாசகம் இதுதான்: "பீடர்! இதோ உம்மிடம் என் ராஜ்யத்தின் திறவுகோலைத் தருகிறேன்!"

இதைப் பார்த்ததும் நம்மூரில் வைகுண்ட ஏகாதசியின் போது சுவர்க்க வாசல் திறப்பது ஞாபகம் வந்தது. இத்தாலிய நண்பர் என்னிடம் சொன்னார்: "எங்கள் குருமார்களுக்கு எங்களிடம் எல்லையற்ற கருணை உண்டு. இதனால் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தச் சுவர்க்க வாசலைத் திறந்து, எங்களை எங்களுடைய பாவங்களிலிருந்து கடைத்தேற்றுகிறார்கள்!"

"உங்கள் குருமார்கள் இருபத்தைந்து ஆண்டுக்கு ஒரு முறைதான் உங்களுக்குப் பாப மன்னிப்பு அளிக்கிறார்கள். எங்களுடைய ஆச்சாரியர்கள் ஆண்டுதோறும் எங்களுக்குச் சுவர்க்க வாசலைத் திறந்து கொடுக்கிறார்கள்!" என்றேன். அவருக்கு ஒரே வியப்பு. "இந்தப் பண்டிகை உங்கள் நாட்டில் எப்பொழுது நடைபெறுகிறது?" என்று கேட்டார். "ஆண்டுதோறும் மார்கழி என்கிற எங்கள் தமிழ்மாதத்தில் இந்தத் திருநாள் நடைபெறும். அதாவது டிசம்பர் பாதிக்கு மேல் ஜனவரி பதினைந்துக்குள். கிட்டத்தட்ட உங்களுடைய கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டித்தான் எங்கள் வைகுண்ட ஏகாதசி என்ற இந்தத் திருவிழாவும் நடைபெறும்! அதிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது!" என்றேன். இது நடந்தது சென்ற அக்டோபர் மாதத்தில்! நவம்பரில் இந்தியா திரும்புவதாக இருந்ததால் "வருகிற வைகுண்ட ஏகாதசியன்று நான் என் தாய் நாட்டில் இருப்பேன்!" என்று அவரிடம் மகிழ்ச்சியோடு சொன்னேன்!

வைகுண்ட வாசலிலிருந்து புறப்பட்டு, "பிரார்த்தனை ஊற்று" என்ற புனிதமான இடத்துக்குச் சென்றோம். பரிசுத்தமான தண்ணீர் குதித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டு பாய்ந்து வந்து சலவைச் சிலைகளோடு கூடிய ஒரு தடாகத்தில் சிறு சிறு அருவிகளாக விழுகிறது. கண்ணாடி போன்ற தண்ணீர்! இந்தப் பிரார்த்தனை ஊற்றைப் பார்த்தவாறு நின்று கொண்டு, கைகளிலே காசு வைத்துக் கொண்டு நம்முடைய பிரார்த்தனைகளை மனத்துக்குள் சொல்லிக் கொள்ள வேண்டும். பிறகு மறுபக்கம் திரும்பி நின்று கொண்டு, பின்புறமாக அந்தக் காசுகளை ஊற்றுக்குள்ளே எறிந்து விட்டுத் திரும்பிப் பாராமல் நடந்து வந்துவிட வேண்டும். இப்படிச் செய்தால் நமது பிரார்த்தனை நிறைவேறும் என்றும், மீண்டும் மன மகிழ்ச்சியோடு நாம் ரோமாபுரிக்கு இன்னொருமுறை வருவோம் என்றும் மேனாட்டு மக்கள் நம்புகிறார்கள். நான் இந்த ஊற்றுக்குச் சென்ற போது ஏராளமான ஆங்கில மக்கள் மொய்த்து நின்றார்கள்.

விஞ்ஞான அறிவும், நவீன நாகரிக வாழ்க்கை முறைகளும், இயந்திர சாதனங்களும் மிகவும் முன்னேறியுள்ள மேலை நாட்டு மக்களுக்குத் தெய்வ பக்தியும் பழைமையான நம்பிக்கைகளும் இதயத்தில் எப்படி வேரூன்றி நிற்கின்றன என்பதை ரோமாபுரியின் பிரார்த்தனை ஊற்றும், சுவர்க்க வாசலும் இன்றைக்கும் நிரூபித்துக் கொண்டு நிற்கின்றன.

பிரார்த்தனை ஊற்றிலிருந்து புறப்பட்டுத் தொலை தூரத்தில் உள்ள 'டிவோலி' என்ற இத்தாலியக் குற்றாலத்துக்குச் சென்றேன். மலைச் சரிவிலே விதம் விதமான பளிங்கு ஓடைகள். அவற்றிலே பளிங்குத் தண்ணீர்! குதித்துப் பாடி ஆடிக்கொண்டு அருவி அருவியாக விழுகிறது தண்ணீர்! கிட்டத்தட்ட ஆயிரம் அருவிகளைச் செயற்கையாகச் செய்து பளிங்கு ஓடைகளிலே ஓட விட்டிருக்கிறார்கள்.



"விஞ்ஞானம் ரொம்ப முன்னேறியிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வருகிறது. இன்னும் கொஞ்ச நாளில் நாலு ஏக்கர் நிலத்துக்கு வேண்டிய எருவைச் சட்டைப் பாக்கெட்டிலேயே எடுத்துப் போகலாம் போலிருக்கே!"

"ஆமாம்! இன்னொரு பாக்கெட்டில் அதில் விளைந்த அரிசியையும் எடுத்துப் போகலாம்!"

இந்த அருவி யுலகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு, அன்றிரவு 'ரோமன் போரம்' என்ற சரித்திர வெளியிலே நடைபெற்ற ஒரு நாடகத்துக்குச் சென்றேன்.

'ரோமன் போரம்' என்பது பூர்விகமான ரோம் நகரத்தின் பாழுடைந்த பிரதேசம். அந்தப் பாழ்வெளியிலே பழைய ரோமாபுரியின் பாழுடைந்த கோவில்கள், கலைகள், நகர வளைவுகள், அங்காடிகள் முதலியன சின்னங்களாக நிற்கின்றன! இப்படிப்பட்ட ஒரு திறந்த வெளி அரங்கில், ஒளியையும் ஒலியையும் கொண்டு ரோம் நகரத்தின் வரலாற்றை ஒலி நாடகமாக நடத்திக் காட்டினார்கள். இந்த ஒளி-ஒலி நாடகம், ஒரு கலையற்புதம் என்றே சொல்லுவேன்! நடிகர்களே கிடையாது! மேடைக் காட்சிகள் ஏதுமில்லை! வர்ண விசித்திர ஒளியையும் இசை ஒலியையும், குரல்களையும் கொண்டு, கி. மு. 753 — லிருந்து இன்றுவரையுள்ள ரோமாபுரியின் சரித்திரக் காட்சிகளைப் பேராற்றலோடு சித்திரித்தார்கள்! வாத்திய கோஷ்டியில் நூறு வாத்தியங்கள். பாடகர்கள் ஐம்பது பேர்! ஐந்நூறு வாத்தியங்கள். அறுபது ஒலி இணைப்புக் கருவிகள். இத்தனை சாதனங்களையும் இயக்குவது 'இலக்ட்ரானிக் ப்ரெய்ன்' என்ற இயந்திர சாதனம்! இரவு ஒன்பதே கால் மணிக்குத் தொடங்கிப் பதினொரு மணி வரை நடைபெற்றது இந்த ஜாலம்! நம்மை இந்த உடம்போடு தூக்கிச் சென்று, ஏதோ ஒரு மோகன உலகிலே விட்டது போல் இருந்தது! நாடகம் முடிந்து என்னுடைய அறைக்குத் திரும்பிய பிறகும், இரவு முழுதும் அந்த ஒளியும் ஒலியும் என்னைப் பின்தொடர்ந்து வட்டமிட்டுக் கொண்டேயிருந்தன!

சரித்திரச் சிறப்பும், தெய்வ சாந்நித்யமும் நிரம்பிய இந்த ரோமாபுரியின் புனிதமான பல இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு, அங்கிருந்து பீஸா நகரத்துக்குச் சென்றேன்!

பீஸா என்றதும், உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரம் நினைவுக்கு வருகிறதல்லவா! இந்தச் சாய்ந்த கோபுரம் மெய்யாகவே ஒரு விநோதமான காட்சிதான்! எட்டு அடுக்காக வட்டம் வட்டமான மாடங்கள் கொண்ட இந்த மாபெரும் கோபுரம் தனது மேனியை ஒரு புறம் சாய்த்துக் கொண்டு நிற்கிறது! இந்த மாடங்களிலே ஏறிச் செல்வதற்காகச் சுருண்டு செல்லும் படிக்கட்டு ஒன்று இருக்கிறது! 293 படிகள் கொண்ட இந்தச் சுருளான வரிசையிலே ஏறிச் சென்று, உச்சி மாடத்தில் நின்று பார்த்தால் பீஸா நகரம் முழுதும் நேர்த்தியான ஒரு சொப்பனமாகக் கண் முன்னே தெரிகிறது!

சாய்ந்த கோபுரத்துக்கு எதிரே ஒரு பெரிய கிறிஸ்து கோவில் இருக்கிறது. மிகவும் பழைமையான கோவில் இது! "மொஸெய்க்" என்று அழைக்கப்படுகிற கற்பதிப்புக் கலையலங்காரமும், சிற்பங்களின் அழகும் மிக மிக நேர்த்தி! இந்தக் கோவிலைத் தவிரப் பீஸா நகரத்தில் மிகவும் முக்கியமான கலை விருந்துச் சாலையாக விளங்குகிறது இங்குள்ள காட்சி நிலையம்! விதம் விதமான ஓவியங்கள், நெஞ்சையள்ளும் சிற்பங்கள், வர்ணக் கற்களைக் கொண்டு பதித்த அலங்கார வேலைப்பாடுகள் எல்லாம் சமய வரலாறுகளையும் கடவுட் கருத்துக்களையும் ஆயிரம் ஆயிரம் கற்பனைகளோடு பேசுகின்றன! கலைஞர்களுடைய மனப் பறவை பூரண சுதந்திரத்தோடு எட்டுத் திசையும் பதினாறு கோணமும் பறந்து செல்ல வேண்டும் என்றால், அதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய ஒரே சாதனம் தெய்வபக்திதான் என்பதையும், கடவுட் கருத்து ஒன்றுதான் வேறு எந்த உணர்ச்சியையும் விடக் கலைஞர்களின் கற்பனைக்கு விசாலமாக இடம் தருகிறது என்பதையும் இங்கே நன்கு உணரலாம்!

கலை நினைவுகளோடு பீஸாவிலிருந்து புறப்பட்டு, மோட்டார் வண்டியிலேயே மிலான் நகரம் போய்ச் சேர்ந்தது எங்கள் பிரயாண கோஷ்டி! நகரத்துக்குள் நுழைந்ததுமே புகைவண்டி நிலையத்தைப் பார்த்ததும் அப்படியே அசந்து போய் விட்டேன்!

அதை ஒரு புகைவண்டி நிலையம் என்று சொல்வதைவிட அதையே ஒரு நகரம் என்று சொல்லிவிடலாம். அத்தனை பெரிது! அத்தனை வசதிகள்! பாங்குகள், தபாலாபீஸ்கள், உள் வீதிகள் என்று போய்க் கொண்டேயிருக்கிறது அந்த மின்சார ஒளி நகரம்!

மிலான் நகரத்திலுள்ள பழைய கிறிஸ்து கோவிலும் பிரும்மாண்டமானது! இதன் ஸ்தூபியில் ஒரு கிறிஸ்து சிலை, தங்கமுலாம் பூசப்பட்டுத் தெய்வ ஒளியைப் பரப்பிக் கொண்டு நிற்கிறது. இவ்வூரிலுள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம் உலகப் புகழ் பெற்றது!

சரித்திரக் காட்சிகள், கலையற்புதங்கள், தெய்வத மாண்புகள், விஞ்ஞான விந்தைகள் ஆகிய அனைத்தும் ஒன்று சேர்ந்த இத்தாலி தேசத்தில் என்னுடைய சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு, மிலான் நகரத்திலிருந்து ஸ்விட்ஸர்லாந்து நோக்கிப் புறப்பட்டேன்! (தொடரும்)


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
குடும்பம் முழுவதிற்கும்
மிக்க உகந்தது !
பெரிய எகானமி அளவு புட்டியினால்
பணம் மிச்சமாகிறது ! மூன்று விரு
விருப்பான வாசனைகளில் கிடைக்கும்:
லவண்டர், மல்லிகை, ரோஜா.
PALMOLIVE
HAIR OIL
PCH/613 TAM.


டிக்-20
மூட்டைப்பூச்சிகளைக்
கொல்லுகிறது
Geigy
கெயிகி
டயஸினான்
TIK-20
TATA-FISON
ஓர் டாடா-பைஸன் தயாரிப்பு.

சிக்கனம் எதற்கு?

ஏ. எஸ். எஸ்

சங்கரனுக்கு மயக்கம் வந்துவிடும்போலிருந்தது.

பின்னே, சாதாரணக் கேள்வியா அது? இதுவரை, பெற்றவர்களும், உற்ற நண்பர்களும் மட்டுமே அவனிடம் அப்படிக் கேட்டிருக்கிறார்கள். ஊதாரிச் செலவுக்குச் சிகரமான அவன் மனைவி சியாமளாவின் வாயிலிருந்தே அந்தக் கேள்வி வருவதென்றால்?

அதிர்ந்து போய் உட்கார்ந்திருந்த சங்கரனை மறுபடியும் உலுக்கினாள் சியாமளா அதே கேள்வியால்.

"காலத்துக்கும் இப்படியே தான்தோன்றித்தனமாகச் செலவு செய்து கொண்டேபோனால் குடும்பம் என்ன ஆகிறது" என்று கேட்டாள் சியாமளா.

ஒன்னரை அங்குல கனத்துக்கு ஸ்னோவும் பவுடருமாய்ப் பூசி மெழுகியிருந்த தன் மனைவியின் முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு முணுமுணுத்தான் சங்கரன்.

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன்."

"மூன்று குழந்தைகளாச்சு — இன்னொன்றும் பிறந்து விட்டால்?"

"ரொம்பக் கஷ்டந்தான்!"

"சொல்லுங்கள். இப்படிச் சம்பாதிக்கிறீர்களே, உங்களுக்கென்று ஒரு 'பேண்ட்' தைத்துக் கொள்ள முடிகிறதா?"

"எங்கே, நானும்தான் நாலு மாதங்களாய்ப் பார்க்கிறேன். முடியவில்லையே."

"ஒரு சேவிங்ஸ் அக்கவுண்ட்டா, இன்ஷூரன்ஸா ஒண்ணும் கிடையாது. திடீர்னு நமக்கொரு கஷ்டம் வந்துட்டா கைதூக்கி விட யாரு இருக்கா!"

"யாருமில்லே. குடும்பம் நடுத்தெருவிலே நிற்க வேண்டியதுதான்!"

"நமக்கு எவ்வளவு வந்தாலும் விடியாது. மாதம் முழுதும் செலவு, செலவு — இதோ பாருங்க இந்த மாதத்திலே விருந்து அனுவசியச் செலவுகளைக் குறைந்து விட்டால் என்ன?" என்று கேட்டாள் சியாமளா.



"செய். எனக்குச் சந்தோஷம்" என்றான் சங்கரன். தன் மனைவி சியாமளாவுக்கும் சிக்கனப் படுத்துவதில் இவ்வளவு அக்கறை வந்து விட்டதா என்று அதிசயப் பட்டான் சங்கரன்.

"அப்படிச் சொன்னால் மட்டும் போதுமா? நீங்களும் ஒத்துழைத்தால் தானே ஏதாவது மீந்து வைக்கலாம்."

"சரி — என்ன செய்ய வேணும் சொல்லு."

சியாமளா உடனே தன் கோரிக்கைகளையெல்லாம் அடுக்கிக்கொண்டே போனாள். சங்கரன் எல்லாவற்றுக்கும் தலையசைத்துக்கொண்டே போனான்.

"டிபன் செலவைக் குறைக்கணும். ஆபீஸ் கேண்டீனுக்குள் நுழையவே கூடாது."

"மகாராணி உத்தரவு!" என்று கூறி வாய் புதைத்து நின்றபடியே கூறினான் சங்கரன்.

"காசு வைத்துச் சீட்டாடக் கூடாது."

"ஆகட்டும்!"

"சினிமா.... நாடகம்...."

"அடியோடு மறந்து விடுகிறேன்!"

"பஸ்ஸை ஒதுக்கி விட்டுக் கால்நடையாகவே ஆபீசுக்குப் போய் வாருங்களேன்."

சங்கரன் முகத்தைச் சுளித்தான்.

"அது ரொம்பக் கஷ்டமாயிற்றே?" என்று இழுத்தான் சங்கரன்.

"கஷ்டத்தைப் பார்த்தால் முடியுமா? அந்த வகையில் தினம் முப்பது நயே பைசா மிச்சமாகிறதே."

"சரி — பாதயாத்திரையே போகிறேன்!" என்று வழிக்கு வந்தான்.

"அப்பாடா! இனிமேல் மாதம் பதினேந்து ரூபாய் மிச்சம் பிடித்து விடலாம்."

சியாமளா சொல்லி வாய் மூடுவதற்குள் வாசற்புறமிருந்து ஒலித்தது ஒரு குரல்! "போதாது அம்மா!"

சங்கரன் திரும்பிப் பார்த்தான். ஜவுளிக் கடைச் சிப்பந்தி! அவன் எதற்காக இங்கே வந்து நின்றுகொண்டிருக்கிறான்?

சியாமளா கலவரத்துடன் ஏதோ சைகை செய்தாள். ஆனால் வந்தவன் அவளைக் கவனிக்காமல் தன்பாட்டுக்குப் பேசிக்கொண்டு போனான்.

"நேற்று நீங்கள் எடுத்து வந்த பட்டுச் சேலையின் விலை இருநூறு ரூபாயாச்சே. மாசம் இருபது ரூபாயாவது குடும்பச் செலவில் மிச்சம் பிடித்தால்தானே பத்து மாதத் தவணையில் எங்கள் பாக்கியை நீங்கள் கட்டி முடிக்க முடியும்?"

சியாமளா அசட்டுத்தனமாகச் சிரித்துக் கொண்டு தன் கணவன் பக்கம் திரும்பினாள். அடுத்த கணம் அவள் அப்படியே பிரமித்து நின்று விட்டாள்.

சங்கரன் மூர்ச்சைபோட்டுக் கீழே விழுந்து கிடந்தான்!

பரங்குன்றம் மேய பரமன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

ஒரு பழைய கதை: ஓர் ஊரிலே ஒரு பூதம் வாழ்கிறது, கற்முகி என்ற பெயரோடு. அப்பூதம் சிவபூசையில் தவறியவர்களை யெல்லாம் பிடித்துச் சிறையில் அடைத்து வைக்கிறது. அப்படி ஆயிரம் பேரைச் சேர்த்தபின் அத்தனை பேரையும் அப்படியே கொன்று தின்பது என்ற விரதம் பூண்டிருக்கிறது. 999 பேரை, ஆம், சிவபூசையில் தவறியவர்களைத் தான், பிடித்துச் சிறை வைத்து விடுகிறது. கடைசியாக ஆயிரம் ஆக்க ஒரு நபரைத் தேடிக் கொண்டிருக்கிறது. அந்த நபர் நக்கீரர் உருவத்தில் வருகிறது. மதுரை சங்கப் புலவர்களுள் சிறந்தவராக இருந்தவர் நக்கீரர். இறைவனோடேயே வாதிட்டவர்; நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று கூறி அஞ்சா நெஞ்சனாக வாழ்ந்தவர். அவர் ஒரு குளக்கரையில் ஒருநாள் காலை உட்கார்ந்து சிவபூசை செய்கிறார். அக்குளக் கரையில் ஓர் அரசமரம்; அந்த மரம் குளம் இவைகளில் ஒரு விநோதம்; அந்த மரத்தின் இலை தரையில் விழுந்தால் பறவையாக உயிர் பெறும்; தண்ணீரில் விழுந்தால் மீனாக மாறும். நக்கீரர் பூசை செய்து கொண்டிருந்த போது ஓர் இலை பாதி தண்ணீரிலும் பாதி தரையிலுமாக விழுந்தது. தரையில் விழுந்தது பறவையாகவும் தண்ணீரில் விழுந்தது மீனாகவும் மாறுகின்றன. இரண்டும் ஒன்றை ஒன்று விடாமல் பற்றி இழுத்துக் கொண்டிருக்கின்றன. இந்த அதிசயத்தைக் கண்ட நக்கீரர் மனம் மலைப்புறுகிறது. செய்து வந்த சிவபூசை தவறுகிறது. பூதந்தான் எப்போது என்று காத்திருக்கிறதே. உடனே 'லபக்' என்று நக்கீரரைப் பிடித்துக் கொண்டு போய்ச் சிறையில் தள்ளிவிடுகிறது. ஆயிரம் பேர்கள் கிடைத்த உற்சாகத்தில், அவர்களையெல்லாம் உண்பதற்கு முன் நீராடிவரச் செல்கிறது. பூதத்தின் வரலாற்றைச் சிறையிலிருந்த மற்றவர்களிடம் கேட்டுத் தெரிகிறார் நக்கீரர். உடனே தம்மையும் மற்றவர்களையும் விடுவிக்க, முருகனைத் துதிக்கிறார். அப்படி அவர் பாடிய பாட்டுத்தான் பத்துப் பாட்டில் முதல் பாட்டான திருமுருகாற்றுப்படை என்பது வரலாறு. இந்த வரலாற்றை, பகழிக் கூத்தர் திருச்செந்தூர் பிள்ளைத் தமிழில் பாடியிருக்கிறார்.

ஏர்கொண்ட பொய்கைதனில்
  நிற்குமொரு பேர் அரசின்
  இலைகீழ் விழில் பறவையாம்,
  இதுநிற்க, நீர்விழில் கயலாம்,
  இதுஅன்றி ஒரிலை அங்கு இங்குமாகப்
பார்கொண்ட பாதியும் பறவைதானாக
  அப்பாதியும் சேலதாக,
  பார் கொண்டிழுக்க அது
  நீர்கொண்டிழுக்க இப்படி கண்டது
  அதிசயம் என்ன
நீர்கொண்ட வாவிதனில்
  நிற்குமொரு பேழ்வாய் நெடும் பூதம்
  அது கொண்டுபோய்
  நின்வரை எடுத்து அதன்கீழ் வைக்கும்
  அதுகண்டு நீதிநூல் மங்காமலே
சீர்கொண்ட நக்கீரனைச்
  சிறைவிடுத்தவா! செங்கீரை ஆடிஅருளே!
  திரைஎறியும் அலைவாய்
  உகந்த வடிவேலனே செங்கீரை
  ஆடிஅருளே!

என்பது பாட்டு. இப்படி நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடுவதற்குக் காரணமாயிருந்த குளமும் மரமும் இருந்த தலம் தான் திருப்பரங்குன்றம். அதனாலே முருகாற்றுப்படையில் சொல்லப்படும் ஆறுபடை வீடுகளில் முதல் படை வீடாகத் திகழ்வதும் திருப்பரங்குன்றம்தான். அந்தத் திருப்பரங் குன்றத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

மதுரைக்குத் தென்மேற்கே ஆறு மைல் தூரத்தில் திருப்பரங்குன்றம் இருக்கிறது. மதுரையில் இறங்கி பஸ்ஸிலோ, காரிலோ செல்லலாம். இல்லை, திருப்பரங்குன்றம் ஸ்டேஷனிலே இறங்கி நடந்தாலோ கூப்பிடு தூரம்தான். எந்த வழியாக வந்தாலும் தூரத்திலேயே தெரிவது குன்று. இக்குன்றின் உயரம் 1050 அடி என்று கணக்கிட்டிருக்கின்றனர். குன்று சிவலிங்க வடிவ



கவினக் காட்சி



(கல்லூரி வாசலில்) : ''பையன்கள் மார்க்கின் அழகு பெற்றோர் முகத்தில் தெரிகிறதே!''

மாக இருப்பதால் இதனைச் சிவலிங்கமாகவே கருதி வழிபட்டிருக்கின்றனர். முருகன் எழுந்தருளியுள்ள தலமாதலால் கந்தமலை என்று வழங்கியிருக்கிறது. இதனையே பின்னர் திரித்துச் சிக்கந்தர் மலை என்று மகமதியர் அழைத்திருக்கின்றனர். திருப்பரங்குன்றம், திருப்பாணம் என்றுமிக் கடைசியில் பிரஸ்தானபுரியான கதைபோலத்தான். எங்கிருந்து வந்தாலும் முதலில் நாம் சென்று சேருவது குன்றின் வட பகுதியில் உள்ள சந்நிதி வாயிலில்தான். அங்குள்ள கோபுர வாயிலுக்கு முன்னால் ஒரு பெரிய மண்டபம். அதனைத் தாங்கி நிற்பவை சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த நாற்பத்தெட்டு தூண்கள் என்றால், மண்டபம் எவ்வளவு பெரியது என்று கணக்கிட்டுக் கொள்ளலாம் அல்லவா?

திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட இம் மண்டபத்தை ஏனோ சுந்தரபாண்டிய மண்டபம் என்று அழைக்கிறார்கள். இந்த மண்டபத்தைத் தாண்டிச் சென்றால் துவஜ ஸ்தம்பக் கூடம் இருக்கிறது. அங்கிருந்து படிகள் ஏறி மேலே சென்றால் மலையைக் குடைந்து அமைத்த குடைவரைகள் இருக்கும். அதில் முருகன், திருமால், துர்க்கை, விநாயகர், சிவன் முதலியவர்கள் இருப்பார்கள். கோயிலில் உள்ள மண்டபங்களில் அரியநாத முதலியார், திருமலை நாயக்கர் முதலியோர் இருக்கின்றனர் சிலைவடிவில். இக்கோயிலில் மூலவர் பரங்கிரிநாதர் என்று லிங்கத் திருவில் உள்ள இறைவனே. இவருடைய துணைவியே ஆவுடைநாயகி. என்றாலும் இத்தலத்தில் முக்யத்துவம் வாய்ந்தவர் முருகனே. அன்று திருச்சீரலை வாயிலில் சூரபதுமனைச் சம்ஹரிக்க அந்த வெற்றிப் பரிசாகத் தேவேந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை மணம் முடித்துக் கொடுத்தான் என்பது வரலாறு. அந்தத்தேவசேனை திருமணம் நடந்த இடம் இத்திருப்பரங்குன்றமே. முருகனுக்கு அருகில் தேவசேனையும் நாரதரும் இருக்கின்றனர். அங்குள்ள குடைவரைச் சுவரில் அர்த்த சித்திரமாக அமைந்த சிற்ப வடிவங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று கைலைக் காட்சி. கைலை மலையிலேயே பார்வதி ஓவியமாக நிற்கின்ற நிலை சிற்ப வடிவத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. இங்குள்ள முருக வேளிடத்துத்தான் நக்கீரர் அடியவர்களை முதலில் ஆற்றுப் படுத்தி யிருக்கிறார். மதுரை திருப்பரங்குன்றம் இரண்டையும் இணைத்தே பாடியிருக்கிறார்.

செருப்புகன்று எடுத்த
　　சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு
　　பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த
　　போர் அருவாயில்
திரு விற்றிருந்த
　　தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகின்
　　கூடல் குடவயின்
இரும்சோற்று அதன்வயல்
　　விரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத்
　　துஞ்சி, வைகறைக்
கண் கமழ் நெய்தல்
　　ஊதி, எல் படக்
கண்போல் மலர்ந்த
　　காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின்
　　அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும்
　　உரியன்.

என்று பரங்குன்றத்து முருகனை நமக்கு அறிமுகப் படுத்துகின்றார். கரிய சேற்றில் மலர்ந்த தாமரை மலரில் தூங்கி, அதிகாலையில் தேன் நிரம்பிய நெய்தல் மலரை ஊதி, சூரிய உதயமானதும் மலர்கிற பூக்களின் மீது அருஞ்சிறை வண்டுகள் ரீங்காரம் செய்யும் குன்றத்தில் அமர்ந்திருக்கிறான் அவன் என்பது நக்கீரர் தரும் விளக்கம்.

இன்னும் இத்தலத்தில் உள்ள முருகனைத் திரிமூர்த்திகளும்வந்து வணங்கியிருக்கிறார்கள். அதனாலேயே இக்குன்றம் இமயமலையை ஒத்திருக்கிறது. அம்மலையிலுள்ள அருவியும் சரவணப் பொய்கையை ஒத்திருக்கிறது என்பர் சங்கப் புலவருள் ஒருவரான நல்லழிசியார்.

பரங்குன்றம் இமயக்குன்ற நிகர்க்கும்
இமயக் குன்றினிற் சிறந்து
நின்னின்ற நிறை இதழ்த் தாமரை
மின்னீன்ற விளங்கினர்
ஒருநிலைப் பொய்கையோடொக்கும்
நின் குன்றம்

என்பது அவரது பாட்டு. இத்தலத்துக்குச் சம்பந்தர் வந்திருக்கிறார், சுந்தரர் வந்திருக்கிறார். இருவரும் பதிகங்கள்பாடிப் பரங்குன்றநாதரை வாழ்த்தி வழிபட்டிருக்கிறார்கள்.

பொன்னியல் கொன்றைப்
　　பொறிகிளர் நாகம் புரிசடைத்
துன்னிய சோதி
　　ஆகிய ஈசன் தொல்மறை
பன்னிய பாடல்
　　ஆடலால் மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை
　　உடையவர்க்கில்லை உறுநோயே

என்பது சம்பந்தர் தேவாரம். சுந்தரரோ, இத்தலத்துக்கு முடியுடை மூவேந்தரும் வந்து வணங்கி அருள் பெற்றதையும் விளக்கமாக உரைத்துப் பாடுகிறார்.


அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதும்என்று
அமரர் பெருமானை, ஆரூரன் அஞ்சி
முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்து ஆறும்ஓர், நான்கும் ஓர் -
ஒன்றிய
படியால் இவை கற்றுவல்ல அடியார்
பரங்குன்ற மேய பரமன் அடிக்கே
குடியாகி, வானோர்க்கும் ஓர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண் முழுதாள்பவரே.

என்பது அவரது பாடல்.

இக்குன்றத்தில் அன்று ஒரு சித்திரசாலை இருந்திருக்கிறது. அங்கே சூரியன் முதலிய கோள்கள் தாரகைகள், நாள்மீன்கள் எல்லாம் காட்டும் சித்திரம் இருந்திருக்கிறது. ரதி மன்மதன், இந்திரன், அகலிகை கௌதமன் முதலியோரது சித்திரங்களும் இருந்திருக்கின்றன. இன்று அந்தச் சித்திரசாலையை அங்கு காணோம். கோயிலும் குடைவரையும் பிரும்மாண்டமானதா யிருந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் துருவித் துருவிப் பார்க்க நல்ல அவகாசம் வேண்டும்.

பரங்குன்றத்துக்கு வந்த நாம், கோயிலுள் செல்வதுடன் மாத்திரம் திருப்தி அடைய முடியாது. மலை ஏறிச் சுற்றியுள்ள காட்சிகளையும் காணவேண்டும். மலைமேல் ஏறிச் சிறிது தூரம் சென்றால் இரண்டு பெரிய பாறைகளுக்கு இடையே ஒரு சமாதி இருக்கிறது. அங்குதான் சிக்கந்தர் பாட்சா என்ற பக்கிரி அடக்கமாகி யிருக்கிறார். இவர் பெயரையும் இணைத்தே ஸ்கந்தர் மலையைச் சிக்கந்தர் மலையாக்கி யிருக்கிறார்கள் மகம்மதிய நண்பர்கள்.

சமாதிக்கு முன்னால் உள்ள மண்டபம் நல்ல தமிழ்நாட்டுப்பாணியிலே இருக்கிறது. மண்டபத்தின் மேலேயுள்ள கூர் உருளை ஸ்தூபிகள் மட்டும் இஸ்லாமியர் கட்டிடக் கலையை ஒத்திருக்கின்றன. மலையின் தென்பகுதியில் ஒரு பாறை. அந்தப் பாறையில் இரண்டு திகம்பர சமண உருவங்கள் நின்ற கோலத்தில் செதுக்கப்பட்டிருக்கின்றன. கூன்பாண்டியன் சமணனாக இருந்த காலத்தே இந்த வட்டாரத்திலெல்லாம் சமணர்கள் நிறைந்திருக்கின்றனர். அவர்கள் செதுக்கி வைத்த சிலைகளாகவே இவை இருக்க வேணும். தென் பாகத்தில், ஒரு கோயில் காசி விசுவநாதர் ஆலயம் என்று, அங்கு இருக்கிறது. விசுவநாதர், விசாலாக்ஷி, கணேசர், சுப்பிரமணியர், பைரவர் முதலியோரது சிலைகள் இருக்கின்றன. பிரம்மதேவர்கூடப் பஞ்சலிங்கத்துக்குப் பக்கத்தில் பூசை செய்து கொண்டிருக்கிறார். மலையடிவாரத்தில் தென்புறத்திலே ஒரு குடைவரை இருக்கிறது. அதை உமையாண்டவர் கோயில் என்கிறார்கள். பாறையின் பின் சுவரில் நடராஜரது தாண்டவம் செதுக்கப்பட்டிருக்கிறது. மிருதங்கம் வாசித்துக் கொண்டு விஷ்ணு நிற்கிறார். வள்ளி தேவசேனை சகிதமாக முருகவேள் இருக்கிறார். சிற்ப வடிவங்களெல்லாம் சிதைந்திருக்கின்றன. இது பல்லவர் குடைவரை போல் இருந்தாலும், பாண்டிய மன்னர்கள் தாம் இக்குடைவரையை வெட்டி யிருக்கவேணும்.



மலையும் கோயிலும்

பதின்மூன்றும் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட மாறவர்மன், சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்கள் இங்கே இருக்கின்றன. மேற்குப் பக்கத்தில் செங்குத்தாக மலையிருக்கிறது. அங்குள்ள குகையில் ஆறு படுக்கைகள் இருக்கின்றன. இதற்கு ஏறுவது கடினமாக இருக்கும்.

பதினெட்டாம் நூற்றாண்டிலே ஆங்கிலேயர் இந்தப் பகுதியைக் கைப்பற்றியபோது குட்டி என்ற ஒரு பக்தன் மலையிலிருந்து குதித்து இக்கோயிலைக் காப்பாற்றினான் என்று வரலாறு. அதற்காக அவன் வாரிசுகளுக்கு நில தானம் வேறே செய்திருக்கின்றனர். இந்த மலையில் மகமதியரும், இந்துக்களும் சேர்ந்தே தொழுகின்றனர். சமரஸ பாவத்தை ஸ்கந்தர்மலை சிக்கந்தர்மலை என்ற பெயரோடு வளர்த்து வருவது அறிந்து இன்புறத் தக்கதுதானே.

மிருதங்க வித்வான் மறைவு

பழம் பெரும் மிருதங்க வித்வான் பாலக்காடு ஸ்ரீ சி. ஏ. சுப்பையர் அவர்களுடைய மறைவு ரசிகர்களைத் துயரத்தில் ஆழ்த்தியது. பொது மேடைகளில் அவர் அவ்வளவாகப் பிரபலமடையாவிட்டாலும் இந்தத் தாளவாத்தியத்தை மிருது அங்கமாகவே வாசிப்பதில் அவர் திறமை பெற்றிருந்தார். பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர் அவர்கள் ஸ்ரீ சுப்பையரின் சிஷ்யர்தான் என்பதொன்றே அவரது மேதைக்குச் சான்று. சில ஆண்டுகளுக்குமுன் சென்னை மியூஸிக் அகாடமியின் சதஸில் ஸ்ரீ சுப்பையர் கௌரவிக்கப்பட்டது ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம்.



விடைகொடு தாயே!

இன்றைய சமுதாயத்தின் அவல நிலையைப் படம் பிடித்துக் காட்டும் புரட்சி நாடகமாகிய இதனை முரசொலி சொர்ணம் எழுதியுள்ளார்.

'செய்யாத குற்றத்துக்காகச் சிறைத் தண்டனை அநுபவிக்கும் சொமணி 'பிக்பாக்கெட்'டாக மாறுகிறான். அவன் சிறைத் தண்டனை அடையச் செய்த வட்டிக்கடை வைரத்தினிடம் கடன்பட்டுத் தவிக்கிறார் நித்தியானந்தம். கடனுக்குப் பதில் நித்தியானந்தத்தின் மகள் தேவியைக் கேட்கிறார் வைரம். வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த செல்வம் சொமணிக்கு நண்பனாகிறான். செல்வமும் வைரத்திடம் கடன் வாங்கித் துன்புற நேர்கிறது. நித்தியானந்தம் பலவகையில் கெட்டுப் போகவே, அவர் மகள் தேவி வைரத்தின் வலை விரிப்புக்கு ஆளாக நேர்கிறது' — இப்படித் திருப்பமும் பிரச்னைகளுமாக வளரும் நாடகக்கதை செல்வம் சிறை செல்லத் தன் தாயிடம் விடைபெறுவதாகவும் மீண்டு வந்து தேவிக்கு வாழ்வளிப்பதாகவும் கூறிச் செல்வதோடு நிறைகிறது. அடுக்குமொழி வசனம் நாடகத்துக்கு ஓட்டம் தருகிறது. பிரச்னைகளும், திருப்பங்களும் சுவையூட்டுகின்றன.

ஆசிரியர்: சொர்ணம். வெளியீடு: முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை சாலை, திருச்சிராப்பள்ளி-8. விலை ரூ. 1.75.

சிறு தொழில்களும் அரசாங்க உதவியும்

ஆர்வம் இருந்தும், மூலதனம் இல்லாததால் தொழில் தொடங்க முடியாதவர்கள் பலர். இவர்களுக்கு அரசாங்கம் எப்படி, என்னென்ன உதவி செய்கிறது, அவற்றை எப்படிப் பெறுவது என்பதைக் கூறுகிறது இந்தச் சிறு நூல். அரசாங்கம் வெளியிட்ட ஆங்கிலப் பிரசுரம் ஒன்றின் தழுவலே இது.

ஆசிரியர்: உதயம்; வெளியீடு: தமிழகம், 59, பிராட்வே, சென்னை—1; விலை: 75 காசு.

தசாபுக்திகளும் ராமாயண பாராயணமும்

ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள குறிப்பிட்ட சில ஸர்க்கங்களைப் பாராயணம் செய்தால் நவக்கிரகங்களின் தசாபுக்திகளில் நிகழும் தீமைகள் குறைந்து நன்மைகள் பெருகும் என்பது மக்களிடம் ஆழ்ந்துறையும் நம்பிக்கை. இது குறிப்பாக வாயு புராணத்தில் உமாஸம்ஹிதையில் விளக்கப்பட்டுள்ளது. உலக வாழ்வில் நேரும் துன்பங்களாகிய நோய்களுக்கு ஸ்ரீமத் ராமாயணமாகிய அமுதம் ஒப்புயர்வற்ற மருந்து. இந்த அடிப்படையான நம்பிக்கையில் 'தசாபுக்திகளும் ராமாயண பாராயணமும்' என்று பெயர் கொண்ட ஒன்பது புத்தகங்கள் 'லிட்டில் ப்ளவர் கம்பெனி' யாரால் வெளியிடப்பட்டுள்ளன. ஸ்ரீ ராமருடைய ஜாதகம், பாராயணமுறை, தசா புக்திகளைக் கண்டறியும் வகை, ஒவ்வொரு தசையிலும் நிகழும் ஒன்பது புக்திகளில் பாராயணம் செய்ய வேண்டிய ராமாயணப் பகுதிகள் ஆகியவை இந்நூல்களில் அடக்கம். பாராயணத்துக்குரிய முறையில் அந்தந்த ஸர்க்கத்தின் ஆரம்ப சுலோகம் முடிவு சுலோகத்துடன் சேர்த்தனுசாரிய ஸ்ரீ வி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களாலாக்கப்பெற்ற தமிழ் மொழிபெயர்ப்புக்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. நவக்கிரக தேவதைகளுக்கும் மற்றும் பல இஷ்ட தெய்வங்களுக்கும் பூஜைசெய்வதற்கு அனுகூலமாக அந்தந்த ஸ்தோத்திரங்களும் அஷ்டோத்தர சத நாமாவளிகளும் நவக்கிரகக் கோலங்களும் இணைக்கப்பட்டுள்ளன. பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் எழுதிய ஆசியுரையும் இந்த நூலை அலங்கரிக்கின்றது.

துன்பம் வரும்போது மனம் இலகு இயற்கையாகவே இறைவனை நாடுகிறது. பக்தியாகிய விதை உள்ளமாகிய பாத்தியில் முளைப்பதற்கு அது சிறந்த காலம். 'துயர்வரில் நினைமின், துயரிலீர் சொல்லினும் நன்றாம்' என்று ஆழ்வார் கூறியுள்ள வண்ணம் எந்தக் காரணம் பற்றியோ ராமாயண பாராயணமும் ஸ்ரீராமனிடம் பக்தியும் பரவுமேயானால் நம்மைப் பயமுறுத்தும் பீடைகளெல்லாம் பறந்து போகும்.

பிரசுரம்: தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை—17. ஒன்பது தசைகளுக்கு ஒன்பது பகுதிகள். ஒவ்வொன்றும் விலை ரூ. 2.

ஹிந்துமத வினாவிடை

இந்நூல் டாக்டர் பி. எஸ். சுப்ரமணிய சாஸ்திரிகளால் எழுதப்பட்டு அமரபாரதி பரீக்ஷா ஸமிதியாரால் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பீடாரோகணப் பொன் விழாவையொட்டி வெளியிடப்பட்டது.

இதில் வேதங்கள், வேதாகமங்கள், தர்ம சாஸ்திரங்கள், இதிஹாஸ புராணங்கள் ஆகிய இந்து மதத்தின் ஆதார நூல்களைப் பற்றிய அறிவும், மதக் கோட்பாடுகள், கொள்கைகள், ஆசார அனுஷ்டானங்கள், பொது தர்மங்கள், விசேஷ தர்மங்கள், உள்மதப் பிரிவுகள் ஆகியவற்றின் பாகுபாடுகளும் மாணவர்களுக்கு விளங்க வைக்கக் கூடிய வகையில் 560 வினாவிடைகளாக இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

கிடைக்குமிடம்: அமர பாரதி பரீக்ஷா ஸமிதி, திருவான்மியூர், (வழி) சென்னை—20. விலை: 65 காசுகள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.



'நம்மவர் வாழும் நவீன வழி...'

என்கிறார் பம்பாயிலுள்ள குடும்ப மாது பிரேமா சுந்தர்ஜீ.

'குடித்தனப் பாங்கான பெண்மணிகளைக் கவரும் விஷயங்களுக்கா இன்று குறைவு. எடுத்துக்கொள்ளுங்களேன் ஸர்ப். ஸர்ப் நுரையிடம் ஒப்படைக்கப்படும் துணி என்றால் அதற்கு ஒப்பற்ற வெண்மை' என்கிறார் அவர். ஆம். சுந்தர்ஜீயின் இல்லத்திலே...சட்டை, சேலை முதல் துண்டு, துப்பட்டா வரை எல்லா சலவைப் பொறுப்பையும் ஆற்றி வருவது ஸர்ப்.

உங்கள் வீட்டிலேயும் ஸர்ப் ஒளிவீசட்டுமே! வேலையைப் பாதியாகக் குறைப்பதோடு அதே சமயம் சலவையிலே புதுமை மிளிரும் உன்னத வெண்மையினைக் கொணருகிறது ஸர்ப். எல்லை கடந்த அந்த சலவை வல்லமையினைத் தத்தம் இல்லங்களிலே செயல் படுத்திப் பயனடையும் மாதர்கள் எத்தனையோ பேர். நீங்கள்?



ஸர்ப் மூலம் உங்களுக்கு வெள்ளைவெளேரென்று சலை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

SU. 18-X52 T

Registered as a Newspaper in Ceylon